# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 44 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 25, திங்கட்கிழமை 09.01.2017

கம நலம்
ගොවි සෙත Govisetha
அதிக கோடீஸ்வரர்களை
உருவாக்கும் கம நலம்
இப்பொழுது
புதன்கிழமைகளிலும்..
திங்கள், புதன், வியாழன், சனி ஆகிய தினங்களில்
கம நலம்
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

வழிநடத்தல் குழுவின்

## இடைக்கால அறிக்கை பெப்ரவரியில் வரும்

### அறிவிக்கப்பட்டதாக சம்பந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 9

புதிய அரசமைப்புத் தொடர்பான வழி நடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை அடுத்த மாதம் நாடாளுமன்றில் முன்வைக்கப்படும்.

இவ்வாறு தனக்கு அறிவிக்கப்பட்டதாக, கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நேற்றுத் தெரிவித்தார் » 25

முச்சந்தி முரளி



உலைதான் தமிழ் மக்களுக்கு நல்லது செய்வம் எண்டு சொன்னவையள்...

## தோழியைக் காப்பாற்ற உயிரைக் கொடுத்த சிறுமி

### பூதன்வயல் கிராமத்தில் மனதை உருக்கும் சம்பவம்

முல்லைத்தீவு, ஜன. 9

தன்னுடன் விளையாடிக் கொண்டிருந்த அயல் வீட்டு சிறுமி மீது சிமெந்துத் தூண் விழப்போவதைக் கண்டு ஓடிச்சென்று அந்தச் சிறுமியைக் காப்பாற்றிய மற்றுமொரு சிறுமி மீது குறித்த தூண் சரிந்து விழுந்தது. படுகாயமடைந்த அந்தச் சிறுமி யாழ். போதனா வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தாள்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு பூதன்வயல் பகுதியில் இடம்பெற்றது. இதில் » 25



அத்துமீறி மீன்பிடி

## இந்திய மீனவர்கள் 10 பேர் நேற்றும் கைது

யாழ்ப்பாணம், ஜன. 9

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 10 மீனவர்கள் மன்னார், யாழ்ப்பாணம் கடற்பரப்பில் நேற்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம், நெடுந்தீவுக்கடற்பரப் » 25



## பாவனைக்கு உதவாத பெருமளவு இறைச்சி யாழ்.நகரில் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 9

யாழ்ப்பாண மாநாகர சபையின் ஆளுகைக்குட்பட்ட பண்ணையிலுள்ள மாட்டிறைச்சிக்கடையில் நீண்ட நாள்களாக சேகரித்து வைக்கப்பட்டிருந்த மனித பாவனைக்குதவாத 120 கிலோகிராம் நிறையுடைய இறைச்சி மற்றும் குடல்கள் சுகாதாரப்பகுதியினரால் நேற்று அதிரடியாகக் கைப்பற்றப்பட்டன.

கோழிக் கால்கள், மாட்டுக் கால்கள் கொண்ட கழிவுகளும் பல நாள்களாக வைக்கப்பட்டிருந்த இறைச்சிகளுடன் காணப்பட்டமை சுகாதாரச் சீர்கேட்டை உணர்த்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. » 25

# அதிகார பகிர்வுக்கு ஒரேயடியாக பின்னடிக்கிறது சுதந்திரக் கட்சி

யாழ்ப்பாணம், ஜனவரி 9

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் குழு அதிகாரப் பகிர் வுக்கு ஆணித்தரமான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது; பொது வாக்கெடுப்பைக் கோரும் எந்தவொரு சரத்தையும் புதிய அரசமைப்பில் உள்ளீர்ப்பதற்கோ நீக்குவதற்கோ எதிர்ப்புத் தெரிவிப்பது என்று அக்குழு முடிவெடுத்துள்ளது.

ஒற்றையாட்சி, மத முன்னுரிமை ஆகியவற்றில் மாற்றம் மற்றும் மாகாண சபைக்கு உச்சபட்ச அதிகாரப் பகிர்வு மேற்கொள்வதாக இருந்தால், பொது வாக்கெடுப்புக்குச் செல்லாமல் நிறைவேற்ற முடியாது. பொது » 25

## பாதாளக் குழுவை வைத்து மக்கள் மீது அரசு தாக்குதல்

### மகிந்த அணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 9

கொழும்பிலுள்ள பாதாள உலகக் குழுவினரை வரவழைத்தே அம்பாந்தோட்டை மக்கள் மீது அரசு கொடூரத் தாக்குதல் நடத்தியது. பொலிஸாரின் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் சாபம் இந்த அரசை நிச்சயமாக நிலைத்து » 25

வடக்குக் கிழக்கில்

## இலக்கு வைக்கப்படும் புத்தர் சிலைகள்

### பின்னணியில் யார்?

யாழ்ப்பாணம், ஜன. 9

வடக்கு - கிழக்கில் வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலைகள் மீது நேற்று அதிகாலை குறித்த நேர இடைவெளிகளில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாற்றுப் பிரதேசத்தில் உள்ள புத்தர் சிலை மீது கழிவு ஒயில் தாக்குதலும், திருகோணமலையில் உள்ள புத்தர் சிலைகளை அடித்தும் தகர்த்தும் எறிந்த சம்பவங்களும் நடைபெற்றுள்ளன. திடீரென இடம்பெற்ற இந்தச் சம்பவத்தினால் பெரும் பதற்றமும் - பரபரப்பும் ஏற்பட்டுள்ளது. » 23 ஆ

## செய்தி சேகரிக்க அச்சுறுத்தல்

### கத்தியோடு பாய்ந்து மிரட்டல்

யாழ்ப்பாணம், ஜன. 9

இறைச்சிக் கடைகளில் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட பரிசோதனையை செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்களை தூசண வார்த்தைகளாலும் ஏசி மாடு வெட்டும் கத்தியை ஓங்கியவாறு வெட்டுவோம் என்று இறைச்சிக்கடை நடத்துநர்கள் அச்சுறுத்தியதோடு தாக்கவும் முற்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. பண்ணைப் பகுதியில் உள்ள மாநகர சபைக்குச் சொந்தமான » 25

## வேறு வழியேதும் இல்லாததால் புதிய அரசமைப்பைத் தொடர முடிவு

### கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நேற்று எடுக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 9

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் நம்பிக்கையிருக்கின்றதோ இல்லையோ, வேறு எந்தத் தெரிவும் இல்லை. வழிநடத்தல் குழுவில் கூட்டமைப்பு இறுதிவரையில் பங்கேற்க வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

புதிய அரசமைப்பு முயற்சிகள் தொடர்பில் ஆராய்வதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்



குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

புதிய அரசமைப்பு முயற்சியில் நம்பிக்கையீனம் இருப்பதாக சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டனர். தென்பகுதி அரசியல் தலைவர்கள், இந்த விடயம் தொடர்பில் தெரிவித்து வரும் கருத்துக்கள் ஏமாற்றமாக இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

புதிய அரசமைப்பு » 25

## மா.ச. உ., நா.உக்களுக்கு அரசமைப்புக் குறித்து விளக்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 9

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர் » 23 அ

## வறட்சி நிலைமை குறித்து முக்கிய கலந்துரையாடல்

### வடக்கு முதலமைச்சர் அலுவலகத்தில் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 9

வடக்கு மாகாணத்தில் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள வறட்சி நிலைமை மற்றும் நெல் அழிவு தொடர்பிலும், எதிர்காலத்தில் இதன் பாதிப்பை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாகவும் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் தலைமையில் முக்கிய கலந்துரையாடல் » 25

## மைத்திரி மிகவும் எளிமையானவர்

### சந்திரபாபு நாயுடு புகழாரம்

கொழும்பு, ஜன. 9

ஜனாதிபதிக்குசிறப்புமாளிகை இருந்த போதிலும் சாதாரணமானதொரு வீட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிக » 25

# வடக்கில் சகல மத ஆலயங்களிலும் மைத்திரிக்கு ஆசிவேண்டி வழிபாடு

யாழ்ப்பாணம், ஜன.9
மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மத ஆலயங்களிலும் நேற்றைய தினம் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.
தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் நேற்று பிரதேசத்தில் உள்ள அனைத்து மத ஆலயங்களிலும் சிறப்பு வழிபாடுகள் காலை தொடக்கம் இடம்பெற்றன.
காலை 6.30 மணிக்கு சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் ஆலயத்திலும் மு.ப.10 மணிக்கு சாவகச்சேரி டச்சு வீதி செருக்கல் பிள்ளையார் ஆலயத்திலும் நண்பகல் 12.30 மணிக்கு சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் உள்ள முகைதீன் பள்ளிவாசலிலும் பி.ப.2 மணிக்கு நாவற்குளி சமித்தி சுமண விகாரையிலும், சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் ஆலயத்திலும் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.
வவுனியா நெடுங்கேணி கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்திலும், வவுனியா தாண்டிக்குளம் முருகன் ஆலயத்திலும், இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்திலும் வவுனியா நகர பள்ளிவாசலிலும் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.
வன்னி மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.கே. மஸ்தான் கலந்து கொண்டு ஜனாதிபதிக்கும், நாட்டுக்கும் நல்லாசிவேண்டி சிறப்பு வழிபாடுகளை நடத்தினார். இந்த நிகழ்வையொட்டி மரக்கன்றுகளும் நடப்பட்டன. சாவகச்சேரி உதவிப் பிரதேச செயலர், அரச உத்தியோகத்தர்கள், நெடுங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் உத்தியோகத்தர்கள், வன்னி மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (வ-10, 21, 9, 7)





## அம்பாந்தோட்டையில் முன்னெடுக்கும் திட்டத்தை நிறைவேற்றியே தீரும் சீனா

### அந்த நாட்டுத் தூதுவர் உறுதி

எதிர்க்கட்சிகள் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டாலும், அம்பாந்தோட்டையில் முன்னெடுக்கப்படும் திட்டங்களை நிறைவேற்றுவதில் உறுதியுடன் இருப்பதாகச் சீனா அறிவித்துள்ளது.
அம்பாந்தோட்டையில் தெற்கு பொருளாதார அபிவிருத்தி வலயத்தை நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றியபோது சீனத் தூதுவர் யிஸியான்லியாங் இந்த உறுதிப்பாட்டை வெளியிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சீனாவின் அபிவிருத்தி உதவிகளை எந்த எதிர்மறைச் சக்திகளாலும் தடுக்க முடியாது. இரண்டு நாடுகளுக்கும் இடையேயான வலுவான நட்புறவை எவராலும் தடுத்து விடவும் முடியாது. இது இலங்கைக்குக் கிடைத்துள்ள மிகப்பெரிய வாய்ப்பு. தெற்கு அபிவிருத்தித் திட்டத்தில் முதலீடுகளைச் செய்வதற்கு 50 இற்கும் அதிகமான சீன முதலீட்டாளர்கள் விருப்பம் வெளியிட்டுள்ளனர்.
எல்லாம் நன்றாக நடந்தால், அடுத்த 3 தொடக்கம் 5 ஆண்டுகளில் குறைந்தபட்சம் 5 பில்லியன் டொலர் முதலீடுகள் செய்யப்படும் வாய்ப்புகள் உள்ளன. ஒரு இலட்சம் இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். சீனாவுக்கு மிகவும் நட்பான நாடு இலங்கை. அதனால் தான் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்குச் சீனா உயர் முன்னுரிமை கொடுக்கிறது. 2014 இல் சீன அதிபர் ஜி ஜின்பிங் இலங்கைக்குப் பயணம் செய்தபோது, இலங்கையில் எமது முதலீடுகளுக்கு முன்னுரிமை கொடுப்பது என்று முடிவு செய்தோம்.
2015 இல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருப்பது என்று உறுதிப்படுத்திக் கொண்டோம். முடிவு செய்தோம். இப்போது அடிப்படைக் கைத்தொழில் முறையை உருவாக்குவதற்கு உதவ இணைகிறோம்.
சீனாவின் எல்லா திட்டங்களும், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடுகள் மற்றும் இலங்கையின் சட்டங்களுக்கு அமையவே முன்னெடுக்கப்படும். இது எனது வாக்குறுதியல்ல. சீன வர்த்தகர்களிடம் இருந்தும் அளிக்கப்படும் வாக்குறுதி - என்றார். (வ-4)

## செல்லும் வேகம் குறைவாக இருந்தாலும் பயணத்தை நிறுத்தாது முன் நகர்கிறோம்

### அரசின் நிலையை இப்படி விவரிக்கிறார் ரணில்

கொழும்பு, ஜன. 9
கடந்த காலப் போர் எமக்கு பல படிப்பினைகளைத் தந்துள்ளது. நாங்கள் எவ்வாறு ஒன்றிணைந்து செல்வது என்பது தொடர்பிலேயே கலந்தாலோசிக்கின்றோம். எமது பயணத்தை நாங்கள் நிறுத்தவில்லை - பின்னடையவில்லை. நாங்கள் செல்லும் வேகம் குறைவாக இருக்கலாம். ஆனால், எமது பயணத்தை நிறுத்தாது முன்னோக்கி நகர்த்துகின்றோம்
இவ்வாறு கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு வருடங்கள் நிறைவை முன்னிட்டு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை சிறப்பு நிகழ்வு நடைபெற்றது. இந்தியாவின் ஆந்திர மாநிலத்தின் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். வெளிநாட்டுத் தூதுவர்களும் இதில் பங்கேற்றிருந்தனர்.
கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் நிலையான சமாதானம் - அபிவிருத்தி - நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நாட்டு மக்கள் விரும்பினர். நாங்கள் அதற்காகவே ஆட்சியில் அமர்த்தப்பட்டோம். அந்த இலக்கை நோக்கிப் பயணிக்கின்றோம். ஒருபோதும் இந்தப் பயணத்தை நிறுத்தவோ - மாற்றவோ மாட்டோம். மெதுவாகச் சென்றாலும் நாங்கள் எமது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம்.
கருத்து வேறுபாடு - கொள்கை வேறுபாடுகள் இருந்தாலும் யுக மாற்றத்துக்கு நாங்கள் அனைவரும் இணைந்தே பாடுபட்டோம். ஆட்சிமாற்றத்தைத் தொடர்ந்து வந்த இரண்டு வருடங்களும் மிகவும் கடினமான பாதையாகும்.
நாட்டில் பிரிந்திருந்த மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே இருந்த வேறுபாடுகளைக் களைந்துள்ளோம். ஆட்சி மாற்றத்தின் பின்னர் நாட்டில் பெரியளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அரசை விமர்சிக்கும் அளவுக்கு மக்களின் கருத்துச் சுதந்திரம் உள்ளது.
ஆட்சியின் மூன்றாவது வருடம் ஆரம்பிப்பதே பொருளாதார அபிவிருத்தியின் சமிக்ஞையுடனாகும். வருடத்தின் முதல் வாரத்தில் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்ட தொழில் முயற்சிகளில் மாத்திரம் 26 ஆயிரத்துக்கு அதிகமான தொழில்வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
பொருளாதார முயற்சிகளைக் கொண்டு வரும்போது அதனை விமர்சிக்கின்றனர். குறைகாண்கின்றனர். குறைகளை நிவர்த்தி செய்துகொள்ள முடியும். அபிவிருத்தி முயற்சிகளைக் குழப்ப முயலாதீர்கள். கால்களை இழுப்பதால் மைத்திரிக்கோ அல்லது இந்த அரசுக்கோ எந்தப் பாதிப்பும் இல்லை. பாதிக்கப்படுவது மக்களே. தொழில்வாய்ப்புக்களை எதிர்பார்க்கும் இளைஞர்களுக்கே அதனால் பாதிப்பு. இந்தியாவின் ஆந்திர, ஒரிஸா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் அரசமைப்புக்களைப் பார்த்து நாங்கள் சில மாற்றங்களைச் செய்து முன்னேற வேண்டியுள்ளது. இந்தப் பயணத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (வ-5)

## எச்.ஐ.வி. நோய்த் தொற்று இலங்கையில் அதிகரிப்பு

நாடு முழுவதும் கடந்த வருடத்தில் எயிட்ஸ் நோயாளரின் தொகை அதிகரித்துள்ளதாகவும் வருட இறுதி வரை எச்.ஐ.வி. நோய்த் தொற்றுக்குள்ளாகி 44 பேர் உயிரிழந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சின் தேசிய பாலியல் நோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சிசிர லியனகே தெரிவித்தார்.
உயிரிழந்தோர் தொகையானது 2015ஆம் ஆண்டை விடவும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. நோய்த் தொற்றுக்குள்ளான 259 பேர் கடந்த வருடம் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 189 ஆண்களும், 60 பெண்களும் இதில் அடங்குகின்றனர். இவர்களில் 15 கர்ப்பிணித் தாய்மார்களும் இருக்கின்றனர் என்று மருத்துவர் சிசிர லியனகே தெரிவித்தார். (வ-5)

## மீனவர்களைத் தேடும் நடவடிக்கை தீவிரம்

கல்முனையைச் சேர்ந்த காணாமற்போன 4 மீனவர்களையும் தேடும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. காணாமற்போனவர்களில் 2 மீன வர்கள் மாலைதீவை அண்மித்துக் கரையொதுங்கிய நிலையில் மாலைதீவு அரசின் பாதுகாப்பில் உள்ளனர். இரண்டு மீனவர்களும் இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளனர். (வ)



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிப் பொறுப்பு ஏற்று இரண்டு ஆண்டுகள் இன்றுடன் நிறைவடைகின்றது. இதனை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்று சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. முக்கிய அம்சமாக, இலங்கையிலிருந்து வெளிவருகின்ற பத்திரிகைகளில் ஜனாதிபதியுடன் தொடர்புடையதாக வெளிவந்த சகல காட்டூன்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. ஜனாதிபதி மைத்திரிபால, காட்டூனாக தன்னைக் காண்பித்துள்ள ஒளிப்படங்களைப் புன்னகையுடன் பார்வையிடுகின்றார். (வ-5)

## ரவிராஜ் படுகொலை

## வெளிநாட்டுக்குத் தப்பித்தோரை பிடிக்க அனுமதி கிடைக்கவில்லை

### சி.ஐ.டியினர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 9
நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் மற்றும் அவரது பாதுகாவலர் ஆகியோர் கொழும்பில் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட வழக்குடன் தொடர்புடைய இரண்டு முக்கிய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கு சட்டமா அதிபர் அனுமதி தரவில்லை என்று குற்றப் புலனாய்வுத்துறை குற்றஞ்சாட்டியது.
சுவிற்சர்லாந்துக்குத் தப்பிச்சென்ற இந்தப் படுகொலையின் இரண்டு முக்கிய சந்தேக நபர்களையும் கைது செய்து, நாடு கடத்துவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர், சட்டமா அதிபரிடம் அனுமதி கோரப்பட்டது. அப்போது சட்டமா அதிபராக இருந்தவர் அதற்கு அனுமதி அளிக்கவில்லை என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.
இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த மேற்படி இருவர் உள்ளிட்ட அனைத்து சந்தேகநபர்களையும், அறங்கூறும் அவை அண்மையில் விடுவித்துள்ளது.
இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யவுள்ளதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். இந்தத் தீர்ப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல கட்சிகளும் கண்டனம் தெரிவித்திருந்தன. மேன் முறையீடு செய்யப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியிருந்தது. (வ-4)

# ஆட்சியை விட்டோடிய மகிந்தவின் வெட்டிப் பேச்சுக்கு அரசு அஞ்சாது

## இடித்துரைத்தார் ஜனாதிபதி மைத்திரி



கொழும்பு, ஜன. 9
பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியாமல் - பன்னாட்டு அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் - ஆட்சியை விட்டோடிய மகிந்த, நல்லாட்சி அரசின் செயற்பாடுகளை விமர்சிப்பது வேடிக்கையான செயலாகும். அவரது வெட்டிப் பேச்சுகளுக்கு அரசு அஞ்சாது.

இவ்வாறு இடித்துரைத்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு வருடங்கள் நிறைவை முன்னிட்டு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, தெற்குப் பிரச்சினையைவிட இலங்கைக்கு பிராந்திய, பன்னாட்டுச் சமூக மட்டத்தில் பெரிய பிரச்சினைகள் இருந்தன. சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமைகள், ஊடக சுதந்திரம் போன்றன அச்சுறுத்தல்களைச் சந்தித்திருந்தன.

கடந்த இரண்டு ஆண்டுகளில் அவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இரண்டு வருடங்களில் ஊடகவியலாளர்கள் எவரும் கொலை செய்யப்படவில்லை - நாட்டை விட்டு வெளியேறவில்லை. ஊடக சுதந்திரம் அதிகமாகவே கிடைத்துள்ளது.

இரண்டு வருடங்களில் அரசு என்ன செய்துள்ளது என்று கேள்வி கேட்கின்றனர். அவ்வாறு கேட்பவர்கள் 19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதை விட 18 ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்பட்டமை தொடர்பில் நினைத்துப் பார்க்க வேண்டும். 19ஆவது சட்டவரைவு நிறைவேற்றப்பட்டதை விட 18 ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்பட்டதே எமது பெரிய வெற்றியாகும்.

பொருளாதார ரீதியில் பிரச்சினைகளை முகம்கொடுக்கும்போது எமக்கு எதிராக விரல் நீட்டுகின்றனர். சட்டரீதியாக ஒப்பந்தங்கள் செய்யப்படாது தீர்மானங்கள் எட்டப்படாத அம்பாந்தோட்டை பொருளாதார வலயம் குறித்து ஆர்ப்பாட்டம் செய்து கடும் எதிர்ப்பை வெளியிடுகின்றனர். அம்பாந்தோட்டையில் அதனைச் செய்ய முடியாவிட்டால் அதனைப் பொலனறுவைக்குத் தாருங்கள். அதனை நான் அங்கு செய்கின்றேன். நாங்கள் ஒருபோதும் ஓர் இடத்திலும் நாட்டைக் காட்டிக்கொடுக்கவில்லை.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் பன்னாட்டுச் சமூகங்களால் வந்த அழுத்தங்களுக்கு முகம்கொடுக்க முடியாமலேயே ஜனாதிபதித் தேர்தலை இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடத்தி ஆட்சியை விட்டுத் தப்பிச் சென்றனர். அதுவே உண்மையான நிலை.

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்ட யோசனைகள் - குற்றச்சாட்டுக்களை நாங்கள் புதிய அரசு என்ற ரீதியில் முகம்கொடுத்து பிரச்சினைகளை விடுவித்துக் கொண்டோம். பன்னாட்டு அழுத்தங்கள், பொருளாதார நெருக்கடி, நல்லிணக்கம் அனைத்து சவால்களையும் அரசு என்ற ரீதியில் முகம்கொடுக்க நாங்கள் தயாராகவே உள்ளோம்.

நாங்கள் நாட்டின் நலனுக்காகவே தீர்மானங்களை எடுப்போம். சிலர் கனவு காண்பது போல் இந்த அரசை வீழ்த்த ஒருபோதும் முடியாது. அரசு என்ற ரீதியில் நாங்கள் மிகவும் பலமாக உள்ளோம். நாட்டின் துன்பம் - துயரங்களைத் துடைக்க அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வருமாறு அழைப்பு விடுக்கின்றேன். அபிவிருத்திக்கான ஆரம்பத்தை நாங்கள் எடுத்துள்ளோம். அனைவரும் தமது பொறுப்புக்களை உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நாட்டில் மீண்டுமொரு போர் ஏற்பட இடமளிக்கமாட்டோம். புதிய அரசமைப்புக்கான வேலைகளையும் நாங்கள் ஆரம்பித்துள்ளோம். நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்போம்.

புதிய அரசமைப்பின் ஊடாக நாட்டைப் பிளவுபடுத்துவதாகவும், பௌத்த மதத்தின் முன்னுரிமை இல்லாது செய்யப்படப் போவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைத்துள்ளனர். நாங்கள் அவை அனைத்தையும் நிராகரிக்கின்றோம். நாட்டின் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பி சமனான அபிவிருத்தியை ஏற்படுத்தவே புதிய அரசமைப்பை உருவாக்குகின்றோம்.

நாங்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் இங்கு மட்டுமல்ல உலகம் முழுவதிலும் உள்ள பிரச்சினைகளாகும். இலங்கையில் நாங்கள் ஆட்சிக்கு வர முன்னரே இந்தப் பிரச்சினைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இவற்றுக்கு உடனடியாகத் தீர்வு காண்பது என்பது கடினமானதாகும்.

'ஆட்சியைக் கவிழ்ப்போம்' போன்ற வெட்டிப் பேச்சுக்களை கேட்க நாங்கள் தயாரில்லை. எமது நோக்கத்துக்கான பயணத்தில் நாம் உறுதியாகவுள்ளோம். நாட்டை முன்னேற்ற வேண்டுமாயின் என்னோடு இணைந்து தனியாக ஆட்சி அமைக்க வேண்டும் என்பதில்லை. அரசில் இணைந்து பயணிக்க வருமாறு அவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன் - என்றார். (வ-5)



# ரூ. 4.5 மில்லியன் நிதியில் 181 பேருக்கு உதவிகள்

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்ற தேசிய நல்லிணக்கத்துக்கும் ஒருமைப்பாட்டுக்குமான திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிகழ்வில் 4.5 மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்கள் 181 பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

மாவட்டச் செயலகத்தில் திட்டப்பணிப்பாளர் கிருபாசுதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

120 பயனாளிகளுக்கு 5லீட்டர் பால் கான், 61 பயனாளிகளுக்கு 10 லீட்டர் பால் கான், 20 பயனாளிகளுக்கு புல் வளர்ப்புக்கான உபகரணங்கள், கால்நடை சங்கத்துக்குப் பால் சேகரிப்புக்கான 13 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான பட்டா ரக வாகனம் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இதில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், வவுனியா மாவட்டச் செயலாளர் ரோகண புஸ்பகுமார, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜெயதிலக, லிங்கநாதன், வவுனியா மாவட்ட பிரதேச செயலாளர் கா.உதயராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-21)

# போட்டி போட்டுப் பயணித்த பஸ் சாரதிகளுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜன.9
கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் போட்டி போட்டு ஓடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்ட தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகளின் சாரதிகளை விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிவான் மன்று உத்தரவிட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகள் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் போட்டி போட்டுக்கொண்டு பயணம் செய்தன. பளை அரசர் கேணி பகுதியில் இரண்டு சாரதிகளும் பேருந்துகளை நிறுத்திவிட்டு கைகலப்பில் ஈடுபட்டனர்.

பேருந்துகளில் பயணம் செய்தவர்கள் வேறு பேருந்துகள் மூலம் தமது பயணத்தைத் தொடர்ந்தனர். பளைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சாரதிகளைக் கைது செய்தனர். பேருந்துகளையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி நீதிவான் மன்றில் சாரதிகளை முற்படுத்தினர். இதன் போதே நீதிவான் இரண்டு சாரதிகளையும் 15ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பேருந்து சாரதிகள் பயணம் செய்யும் பயணிகளுக்குப் பாதுகாப்பை வழங்க வேண்டியவர்கள். இவர்கள் போட்டி போட்டு பேருந்துகளை செலுத்துவதாலும், இடைமறித்து கைகலப்பில் ஈடுபடுவதாலும் பாதிக்கப்படுவது மக்களே. இவ்வாறான செயற்பாடு மக்களுக்கு சிரமங்களை ஏற்படுத்தும் செயல். அன்றையதினம் அந்தப் பேருந்துகளில் பாடசாலை மாணவர்களும் பயணம் செய்தனர்.

இவ்வாறான செயற்பாடுகளை சாரதிகள் நிறுத்தி பயணம் செய்பவர்களின் பாதுகாப்பையும் நேரத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் இதனை உதாரணமாக கொண்டு செயற்பட வேண்டும். இல்லை எனில் கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் வழக்கும் நீதிமன்றில் பதிவு செய்யப்படும் என்று பளைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரஞ்சன பண்டாரா தெரிவித்தார். (வ-21,6)

# மாவாவுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 9
கஞ்சா கலந்த மாவா போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாண பேருந்து நிலையத்தில் வைத்து 2 பேரை நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பொலிஸார் நடத்திய தேடுதலின்போது இருவரும் நுகர்வுக்காக கஞ்சா கலந்த மாவா போதைப் பொருளை வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. அவர்களிடம் இருந்து 84 கிராம் கஞ்சா கலந்த மாவா கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் யாழ்ப்பாண நகர் பகுதியை சேர்ந்த 19, 20 வயதுடையவர்கள். இருவரும் நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4,8)

# தற்போதைய கூட்டு அரசும் மகிந்த ஆட்சியும் ஒன்றுதான்

## இப்படிக் கூறுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன. 9
அம்பாந்தோட்டையில் தாக்குதலை மேற்கொண்டு தனது உண்மையான முகத்தை இந்தக் கூட்டு அரசு மக்களுக்குக் காட்டிவிட்டது. மகிந்த அரசும் தற்போதைய கூட்டு அரசும் ஒன்றுதான்.

இவ்வாறு ஜே.வி.பியின் பரப்புரைச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசு ஆட்சிபீடமேறி இன்றுடன் (நேற்று) 8ஆம் திகதி இரண்டு வருடங்கள் நிறைவடைந்துவிட்டன. தெரிவிக்கப்பட்ட அனைத்து வாக்குறுதிகளும் இறுதிவரை இடம்பெறாமலேயே பொய்த்துப் போயுள்ளன. அதற்குள் அம்பாந்தோட்டையில் தாக்குதலை மேற்கொண்டு தனது உண்மையான முகத்தை இந்த கூட்டு அரசு மக்களுக்கு காட்டிவிட்டது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கும் செயற்பாட்டை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். அபிவிருத்தி ரீதியாக, அரசியல் ரீதியாக, மக்களுக்கான நிவாரணங்களை வழங்காமல், வழங்கப்பட்டுக் கொண்டிருந்த நிவாரணங்களை இல்லாது செய்து, வரிக்குமேல் வரி விதித்து மானியங்களை இல்லாதொழித்து என எல்லா விதத்திலும் இந்தக் கூட்டு அரசு தோல்வியையே சந்தித்துள்ளது.

மகிந்த அரசும் இதேபோல அபிவிருத்தி எனக் கூறித் தான் 11 ஆயிரம் ஏக்கர் காணியை அம்பாந்தோட்டை பிரதேசத்திலிருந்து பகிரங்கமாக எடுத்தது. இதனை அண்மையில் நாமல் ராஜபக்ச கூட ஒரு செவ்வியின்போது ஒத்துக் கொண்டார்.

இதேசெயற்பாட்டைத்தான் தற்போதைய கூட்டு அரசும் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அரசுகளுக்குமிடையே எந்தவொரு வித்தியாசமும் இல்லை. இலங்கையில் தொழிற்சாலைகள் அமையப்பெற்று அபிவிருத்தியடைந்த நாடாக இலங்கை மாறுவதை நாமும் எதிர்க்கவில்லைதான். மக்களின் காணிகளைப் பறிமுதல் செய்து எதிர்கால சந்ததியினரின் சொத்துக்களை வெளி நாடுகளுக்குத் தாரை வார்த்தும் அமைக்கக்கூடாது என்றே நாம் எதிர்க்கிறோம் - என்றார். (வ-4)

# தேடிப் படிப்பதனால் திறமை அதிகரிக்கும்

## வணிகத்துறையில் முதலிடம் பிடித்த மாணவன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன.9
பாடப்புத்தகங்களுடன் மட்டும் நின்றுவிடாது சமூகத்துக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் தேடிக் கற்கவேண்டும் என்று யாழ். மாவட்டத்தில் வணிகத்துறையில் முதலிடத்தைப் பிடித்த சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் எஸ்.மிதுன் தெரிவித்தார்.

இந்த வெற்றி கிடைத்ததுக்கு முதலில் ஆண்டவனுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.எனது வெற்றியில் பங்கு கொண்ட எனது கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் எனது பெற்றோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் நிதித்துறையில் சிறந்த வல்லுநராக வர வேண்டும் என்பதே எனது இலக்கு ஆகும்.

மாணவர்கள் அனைவரும் கல்வி கற்கும் போது உங்களுக்குத் தேவையான விடயங்களை நீங்களே சுயமாகத் தேடிப் படிப்பதால் உங்கள் திறமையை அதிகரித்துக் கொள்ளமுடியும் என்று எஸ்.மிதுன் மேலும் தெரிவித்தார். (வ-8)

# தன்னம்பிக்கையுடன் பயின்றால் வாழ்க்கையில் வெற்றி நிச்சயம்

## உயிர் தொழில்நுட்பவியல் துறையில் முதலிடம் பிடித்த மாணவி கருத்து



யாழ்ப்பாணம், ஜன. 9
மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் கற்க வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும் என்று உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் துறையில் யாழ். மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பிடித்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி இ.அகிம்சா தெரிவித்தார்.

பாடசாலையில் ஆசிரியர்கள் கற்பிக்கும் போதே அதனை விளங்கிக் கொள்ளவேண்டும். ஏதாவது சந்தேகங்கள் இருப்பின் உடனேயே தயக்கமின்றி ஆசிரியர்களிடம் கேட்க வேண்டும்.

உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் துறையில் சிறந்த வல்லுநராக வரவேண்டும் என்பதே எனது இலட்சியமாகும். எனது வெற்றிக்குக் காரணமாக இருந்த எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் எனக்கு ஆதரவாக இருந்த எனது பெற்றோர், நண்பர்களுக்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். எதிர்காலத்தில் பரீட்சையில் தோற்ற உள்ள மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் கல்வி பயின்று வாழ்க்கையில் வெற்றி பெறவேண்டும் என்று இ.அகிம்சா மேலும் தெரிவித்தார். (வ)

# தேடலும் ஆர்வமும் இருந்தால் சிறந்த பெறுபேறு கிடைக்கும்

## கணிதப்பிரிவில் 2ஆம் இடத்தை பெற்ற மாணவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.9
சிறந்த தேடலும் ஆர்வமும் இருந்தால் பரீட்சையில் சித்தியடைய முடியும் என்று மாவட்ட ரீதியில் கணிதப் பிரிவில் 3ஏ எடுத்து இரண்டாம் இடத்தைப்பெற்ற பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மாணவன் ரவிக்குமார் திருபரன் தெரிவித்தார்.

எமது கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள் என அனைத்துத் தரப்பினரும் தந்த ஒத்துழைப்பு மாவட்ட ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெறுவதற்கான உந்து சக்தியை வழங்கியது. நான் ஆரம்பக்கல்வியை மேலை புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கற்று இடைநிலைக்கல்விக்காக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இணைந்தேன்.

எமது பாடசாலை கற்றலுக்கான சிறந்த சூழலை எனக்கு வழங்கியது. எல்லாவற்றையும்விட எனது குடும்பம் நான் கல்வி கற்பதற்கான சிறந்த இடமாக இருந்தது. அன்றுதருவதை அன்றே கற்றுத் தெளிவுபடுத்திக் கொள்வது என் வழக்கமாக இருந்தது. தேடலும் ஆர்வமும் முயற்சியும் இருந்தால் சிறந்த பெறுபேற்றைப் பெறலாம் என்று ரவிக்குமார் திருபரன் தெரிவித்தார். (வ-109)

## கணிதம், விஞ்ஞானம், கலைப் பிரிவுகளில்

# இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவிகள் மாவட்டத்தில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜன. 9
வவுனியா மாவட்டத்தில் கணிதம், விஞ்ஞானம், கலைப் பிரிவுகளில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவிகள் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றனர்.

கணிதப்பிரிவில் 3 ஏ சித்திகளைப் பெற்று சிவதுர்க்கா சத்தியநாதன் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும் (இந்த மாணவி விபத்தில் உயிரிழந்துவிட்டார்), துவாரகா பகிரதன் 3 ஏ பெற்று மாவட்ட மட்டத்தில் இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

விஞ்ஞான பிரிவில் மதுரா தனபாலசிங்கம் 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும் பவதாரணி சிவபாலராசா 3 ஏ சித்தியைப் பெற்று இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

வர்த்தகப்பிரிவில் ஆங்கிலப் பிரிவில் தேவகி பிரபுராஜ் மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தையும், கலைப் பிரிவில் அவதார சர்மா 3 ஏ சித்தியைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும் பெற்றனர்.

இதேவேளை, வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ரங்கநாதன் ஜதுகுலன் 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் வர்த்தகப் பிரிவில் முதலாமிடத்தையும் கணிதப் பிரிவில் செல்வதேவன் கனிசியன் 2ஏ பி சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 4 ஆம் இடத்தையும் பெற்றனர். (வ-101)


# ஆருத்திரா தரிசனம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் மற்றும் கண்ணகையம்மன் ஆலயங்களின் திருவெம்பாவை உற்சவத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை அதிகாலை 4மணிக்கு வழிபாடுகள் இடம்பெற்று சுவாமி எழுந்தருளி வீதி உலா வந்து ஆலய பித்தர் கேணியில் தீர்த்தமாடும் வைபவம் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (வ)



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 700 | 800 | 800 | – |
| நண்டு | 250 | 350 | 300 | 400 | 400 | 300 | 500 |
| கணவாய் | 600 | 600 | 600 | 500 | 700 | 800 | – |
| பாரை | 550 | 500 | 600 | 650 | 600 | 500 | 350 |
| சுறா | 500 | 400 | 800 | 800 | 600 | 1000 | – |
| சீலா | 300 | 400 | 400 | 800 | 400 | 300 | 350 |
| விளை | 650 | 500 | 300 | 800 | 450 | 400 | 350 |
| முரல் | 300 | 400 | 300 | 400 | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 300 | – | 450 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 800 | – | – | 400 | – | – |
| ஓரா | 400 | 400 | 400 | – | 450 | – | 300 |
| திரளி | 300 | 200 | 200 | 200 | 250 | 200 | 300 |
| நகரை | 250 | 200 | – | 300 | 300 | – | 300 |
| சூடை | 150 | 150 | 150 | 200 | 120 | 100 | – |
| ஒட்டி | 300 | 200 | 150 | 400 | 300 | 200 | 250 |
| திருக்கை | 150 | 250 | 100 | 350 | 400 | 300 | 140 |
| மதனம் | 150 | 200 | 130 | – | 250 | – | 200 |
| கொய் | 100 | 120 | 40 | 100 | 80 | 100 | – |
| பாலை | 400 | 100 | 180 | 400 | 400 | – | – |
| வாளை | 100 | 100 | – | – | 300 | 200 | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 40 | 40 | 60 | 80 | 40 | 60 |
| கத்தரி | 30 | 30 | 30 | 40 | 20 | 20 | 40 |
| கரட் | 60 | 80 | 80–120 | 180 | 80 | 120 | 160 |
| மரவள்ளி | 70 | 80 | 60 | 60 | 80 | 30 | 50 |
| பயிற்றை | 160 | 120 | 200 | 160 | 120–140 | 120 | 80 |
| பாகல் | 30 | 250 | 280 | 240 | 160 | 160 | 150 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 60 | 50 | 70 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 80 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 80 | 100 | 90 | 70 | 120 | 160 |
| பூசணி | 50 | 60 | 60 | 60 | 60 | 60 | 80 |
| தக்காளி | 160 | 120 | 160 | 140 | 160 | 160 | 200 |
| வாழைக்காய் | 60 | 40 | 50 | 50 | 50 | 80 | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 15 | 20 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 20 | 50 | 10 |
| பச்சை மிளகாய் | 180 | 150 | 200 | 160 | 160 | 200 | 500 |
| புடோல் | 80 | 60 | 80 | 80 | 60 | 80 | 100 |
| கோவா | 30 | 40 | 20 | 30 | 20 | 20 | 140 |
| வெண்டி | 100 | 80 | 160 | 120 | 60 | 80 | 80 |
| போஞ்சி | 100 | 80 | 90 | 100 | 80–100 | 160 | 120 |
| லீக்ஸ் | 80 | 80 | 70 | 100 | 80–100 | 120 | 150 |
| தேங்காய் | 50 | 35 | 50 | 40–50 | 30 | 40–50 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100–120 | 100 | 120 |
| தேசிக்காய் | 250 | 350 | 250 | 250 | 300 | 400 | 280 |
| வல்லாரை | 25 | 20 | 20 | 15 | 15 | 40 | 10 |
| கறிமிளகாய் | 160 | 180 | 140 | 240 | 170 | 280 | 200 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 180 | 200–220 | 300 | 120 |
| முருங்கைக்காய் | – | 400 | – | – | 350–400 | – | 350 |

**ஊர்க் கோழிகள் விற்பனைக்கு**

2 மாத, 3 மாத, ஊர்க் கோழிகள், விறாத்து சேவல்கள் விற்பனைக்கு உண்டு.

**077 245 3673**

**வீடு விற்பனைக்கு**

கச்சேரிக்கு அண்மையில் வீடு விற்பனைக்கு உண்டு.

**076 390 6918**

**வேலைவாய்ப்பு**

கொழும்பு- வெள்ளவத்தையில் உள்ள பிரபல சலூன்களிற்கு திறமையுள்ள ஆண் வேலையாள்கள் தேவை. வேலை கற்றுக் கொண்டு இருப்பவர்களும் புதிதாகப் பழக இருப்பவர்களும் ஏற்று கொள்ளப்படுவார்கள். சம்பளம் தொலைபேசியில்.

**076 767 3111, 077 676 3436**

**வீடு வாடகைக்கு**

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் அதி நவீன வசதிகளுடன் ஆடம்பரமான வீடு (குளிரூட்டப்பட்ட) சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு:

**077 718 6700**

**ஆள்கள் தேவை**

Hotel ஒன்றிற்கு எல்லாவிதமான வேலைகளுக்கும் ஆள்கள் தேவை.

**077 719 6405**

**விற்பனைக்கு**

J.C.B விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 077 480 1734**

**கணக்கு எழுதிக் கொடுக்கப்படும்**

நீண்ட கால அனுபவமுள்ள கணக்காளரால் வியாபார வரிக் கணக்கு எழுதி, பட்டய கணக்காளரால் ஒடிற் செய்து கொடுக்கப்படும்.

**தொடர்பு: 077 889 7983**

## பகிரங்க ஏலவிற்பனை
## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பின்வரும் பொருள்கள் 2017.01.20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. இரும்புக்கட்டில்கள், சில்லுக் கதிரைகள், மேசைகள், அலுமாரிகள் (ஸ்ரீல்)
2. மர அலுமாரிகள், மரக்கதிரைகள்
3. கணினிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்கள்
4. குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் மின் விசிறிகள்
5. பழைய இரும்பு, அலுமினியம், சில்வர் பொருள்கள்
6. பழைய மர, இரும்புக் கதவுகள், யன்னல்கள் மற்றும் அதற்குரிய நிலைகள்
7. பாவித்த வாகன ரயர்கள்
8. பழைய பிளாஸ்ரிக் பொருள்கள்
9. பழைய இரும்புக் கேடர்கள்
10. பழைய தீராந்தி, பனை மரங்கள் மற்றும் சிலாகைகள்
11. பழைய சீற் மற்றும் ஓடுகள்
12. ஏனைய தளபாட உபகரணங்கள்

இவ் ஏல விற்பனையில் கலந்துகொள்ள விரும்புவோர் இல.111, பிரதான வீதியில் உள்ள யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைக் களஞ்சியத்தில் மேற்படி பொருள்களை 20.01.2017 ஆம் திகதி காலை 8.00 - 10.00 மணிவரை பார்வையிட முடிவதுடன் அதனைத் தொடர்ந்து ஏல விற்பனையில் கலந்துகொள்ளவும் முடியும். ஏலத்தில் தெரிவானவர்கள் பணத்தை காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுப் பொருள்களை அன்றைய தினம் பிற்பகல் 5 மணிக்கு முன்னர் மேற்படி களஞ்சியத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(C/27617)
(11,17,18)

## 32வது அகவையில் தடம் பதிக்கும்



யாழ்
## கலாலயா
பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். **(கிழமை நாட்களில் மட்டும்)**

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 15.01.2017 (ஞாயிறு)
கிழமைநாள் பிரிவுகள்: 16.01.2017 (திங்கள்)
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

மாபெரும் தைப்பொங்கல் தள்ளுபடி
## சரவணா ரெக்ஸ்

| | | |
|---|---|---|
| சில்க்சாறி | ~~900~~ | 650 |
| கொட்டன்சாறி | ~~1200~~ | 900 |
| கொட்டன்சாறி | ~~2000~~ | 1200 |
| சல்வார் துணி | ~~1500~~ | 1000 |
| சல்வார் சில்க்துணி | ~~1000~~ | 650 |
| நெற்சல்வார் | ~~3500~~ | 1800 |
| கொட்டன் சல்வார் | ~~4500~~ | 2500 |





மற்றும் அனைத்து ஆடைத் தெரிவுகளையும் 20% விலைக்கழிவில் எதிர்வரும் 14.01.2017 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுங்கள். உடன் விரையுங்கள்.

**நல்லூர் சரவணா ரெக்ஸ்**
526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(சிவன்கோயில் அருகில்)
077 844 8045/ 021 221 6866

**நெல்லியடி சரவணா ரெக்ஸ்**
171, பிரதான வீதி. நெல்லியடி, கரவெட்டி.
(சம்பத்வங்கி அருகில்)
021 226 2992

*New Collection*
*New Style*



**09.01.2017 திங்கட்கிழமை**
யாழ் மண்ணில்
**புதிய உதயம்**

திருமணப் பட்டுப்புடவைகளின் ஆலயம்

## New போத்தீஸ்
Alayam of Silks

ஆடவர்கள், சிறுவர் சிறுமியருக்கான அனைத்துத் தெரிவுகளும் ஒரே இடத்தில்



இல.27,28, கஸ்தூரியார் வீதி,
(புதிய மாநகரசபைக் கட்டடம்)
யாழ்ப்பாணம்.


தொ.பே: 021 222 5464

# சிறுமியுடன் குடும்பம் நடத்திய இளைஞனுக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஜன. 9
15 வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்று குடும்பமாக வாழ்ந்த அளவெட்டியைச் சேர்ந்த 23 வயது இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.
கொடிகாமம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சிறுமியைக் காதலித்துக் கடத்திச் சென்ற சம்பவம் தொடர்பாக சிறுமியின் பெற்றோர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அளவெட்டிக்குச் சென்று இளைஞனையும் கடத்திச் சென்ற சிறுமியையும் கைது செய்தனர்.
சிறுமியை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த பின்னர் இளைஞனை நேற்று மாலை சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். சிறுதியைக் கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டை இளைஞனுக்கு எதிராகப் பொலிஸார் முன்வைத்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் இளைஞனை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.
நாட்டில் பெண்களின் திருமண வயது 18ஐ தாண்டியிருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் 18 வயதுக்கு குறைந்தவர்களை திருமண பந்தத்தில் இணைப்பது சிறுவர் துர்நடத்தையாகக் கணிக்கப்பட்டு அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும். ஒவ்வொரு பெற்றோருக்கும் இந்த விடயம் தெரிந்திருக்கவேண்டும். 18 வயதுக்குட்பட்ட சிறுமியை கடத்திச் சென்று திருமண பந்தத்தில் இணைய விரும்புவோரும் அதற்கு உதவி செய்வோரும் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவர்.
இவ்வாறான வழக்கு இந்த நீதிமன்றில் முன்னர் இடம்பெற்ற போது இளைஞன் மற்றும் சிறுமியைக் கடத்திச் சென்ற வேளையில் வீடு கொடுத்து உதவியவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
18வயதுக்குக்குறைந்தபெண்கள் பருவக் கோளாறு காரணமாக வீட்டைவிட்டு வெளியேறி திருமண பந்தத்தில் இணைய முற்படலாம்.அந்தவேளையில் தங்களது வீட்டுக்கு அழைத்து வரப்படும் பெண் 18 வயதுக்கு குறைந்தவராயின் அவர்களுக்கு தகுந்த ஆலோசனை கூறி, சிறுமியை அவர்களது பெற்றோர் வீட்டுக்குக் கொண்டு சென்று ஒப்படைக்க வேண்டும். இல்லையேல் பிரிவு கிராம அலுவலர் அல்லது அருகில் உள்ள பொலிஸாருக்குத்தகவல் அனுப்பி அவர்கள் ஊடாக சிறுமியை பெற்றோரிடம் ஒப்படைக்கச் செய்யவேண்டும். அதைவிடுத்து அழைத்த வரப்பட்ட பெண் 18 வயதுக்கு குறைந்தவர் எனத் தெரிந்தும் வீடு கொடுத்து உதவினால் நிச்சயம் உதவி செய்பவர்களும் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று நீதிவான் கட்டளையில் தெரிவித்தார். (வ - 9)

# வழிபாட்டு உரிமை மறுக்கப்படுவதாக அம்பாறை முஸ்லிம்கள் குற்றச்சாட்டு

அம்பாறை, ஜன. 9
அம்பாறை மாவட்டத்தில் இஸ்லாமியர்களின் வழிபாட்டு தைக்காவொன்றில் அவர்களின் வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டது.
250 வருடங்கள் பழமை வாய்ந்த



தைக்கா என உள்ளூர் முஸ்லிம்களால் கூறப்படும் பொத்தானை தைக்கா அமைந்துள்ள பகுதி தொல் பொருள் ஆய்வுத் திணைக்களத்தால் தற்போது அடையாளமிடப்பட்டு வெளியார் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.
தடையை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இது தொடர்பான அந்த அறிவித்தலில் கூறப்பட்டுள்ளது.
இந்தத் தடை தொடர்பான அறிவித்தல் அந்த இடத்தில் பகிரங்கமாக வெளியிடப்பட்டுள்ளதால் தைக்கா நிர்வாகம் உள்பட் வெளியார் எவரும் பிரவேசிக்க முடியாதிருப்பதாக பொத்தானை அமீருல் ஜப்பாரூல் ஹமதானி தைக்கா நிர்வாகத் தலைவரான எம். ஏ. ஜுனைதீன் தெரிவித்தார்.
திருக்கோவில் பிரதேச செயலக நிர்வாகத்திலுள்ள சாகாமம் பகுதி போர்க் காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தமையால் முஸ்லிம்களால் அந்தப் பகுதிக்குள் செல்ல முடியாத நிலை காணப்பட்டது.
இதன் காரணமாக பொத்தானை தைக்காவிலும் மத வழிபாடுகள் தடைப்பட்டிருந்தன. போர் முடிவுக்கு வந்த நிலையில் 4-5 வருடங்களாக மத வழிபாடுகள் மீண்டும் நடைபெற்று வரும் வேளையில் தொல் பொருள் ஆய்வு திணைக்களத்தால் இந்தத் தடை தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக தைக்கா நிர்வாகம் கூறுகின்றது. (வ)

# பொதுநூலக நேரத்தில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 9
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்கு உட்பட்ட பொது நூலகம் பாவனையாளர்களின் நலன் கருதி காலை 7 மணி முதல் மாலை 6 மணிரை திறக்கப்படும் என கரைச்சிப் பிரதேச சபை செயலாளர் கம்சநாதன் தெரிவித்தார்.
"மாணவர்கள் மற்றும் பொது மக்கள் போன்றோர் பயன்பெறுவதற்காகவும் பரீட்சைகளில் தோற்றுபவர்கள் ஏனைய நூலகம் சார் செயற்பாடுகளில் பயன்பெற விரும்புபவர்கள் இந்த நூலகத்துக்குச் சென்று பயன்பெற முடியும். இவர்களின் பயன்பாட்டிற்காகவே காலை 7 மணிமுதல் மாலை 6 மணிவரை திறந்திருக்கும்"- என்றார். (ற-6)



வவுனியா தவசிகுளம் முத்துமாரியம்மன் ஆலயத்தின் சிரமதானப் பணியும், ஆலயத்தின் வளர்ச்சி தொடர்பான கலந்துரையாடலும் நேற்றையதினம் ஆலயத் தலைவர் பாபு தலைமையில் தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் உறுப்பினர் வ.பிரதீபன் ஒழுங்கமைப்பில் ஆலயத்தில் நடைபெற்றது. கலந்துரையாடலில் வவுனியா நகர சபையின் முன்னாள் உப நகர பிதா க.சந்திரகுலசிங்கம் [மோகன்], தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் தலைவர் ச.காண்டீபன், தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் செயலாளரும், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமான ஸ்ரீகரன் கேசவன், கழகத்தின் உப தலைவர் பி.கெர்சோன் ஆகியோர் கலந்து கொண்டனர். [வ-21]

# ஆசிரியர்களுக்கான அவசர ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், ஜன.9
ஐந்து வருட சேவைக் காலத்தை வெளிமாவட்டங்களில் நிறைவு செய்த ஆசிரியர்களுக்கான அவசர ஒன்று கூடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
குறித்த ஆசிரியர்கள் அனைவரையும் நல்லூர் ஆலய முன்றிலில் கூடுமாறு பாதிக்கப்பட்ட வெளிமாவட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.
வெளிமாவட்டங்களில் ஐந்து வருட சேவைக் காலத்தை நிறைவு செய்தும் இதுவரை இடமாற்றம் கிடைக்கப் பெறாத ஆசிரியர்களையும், ஐந்து வருடங்கள் வெளிமாவட்டங்களில் சேவைக்காலத்தை நிறைவு செய்ய வேண்டும் எனும் நியமனக் கடிதத்தைக் கொண்டமைந்த ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அவர்கள் கேட்டுள்ளனர். (வ-10)

# அரசியல் தீர்வை எட்டவேண்டிய பொறுப்பு கூட்டமைப்புக்குள்ளது

## வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

வவுனியா, ஜன.9
எங்களுடைய தாயகப் பிரதேசத்தில் எங்களை ஆளக்கூடிய நிரந்தரமான அரசியல் தீர்வை நோக்கி போகக் கூடிய பெரும் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளது. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவபடுத்துகின்ற எந்தவொரு தமிழ்கட்சியும் இதனை கவனத்தில் எடுக்க வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்திலிங்கம் தெரிவித்தார்.
வவுனியா புதிய கற்பகபுரம் பகுதியில் 2009ஆம் ஆண்டிலிருந்து அரச காணியில் வசித்து வந்த மக்களுக்கு காணி அனுமதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று காலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த அரசு சிங்களமக்களை குடியேற்றிஎங்களுடைய விகிதாசாரத்தை குறைக்க முனைந்தார்கள். அந்த வகையில் எங்களுடைய வவுனியா மாவட்டமும் இப்போதும் இப்படியான இலக்குக்கும், நெருக்குவாரத்துக்கும் உட்படக்கூடிய மாவட்டமாக இருக்கிறது. எங்களுடைய பிரதேசத்தில் காணிகள் அற்று பல குடும்பங்கள் உள்ளனர். வவுனியா மாவட்டத்தில் அதிகளவான அரசு காணி உள்ளது. எனவே அவர்களுக்கு சொந்தமான காணித்துண்டை வழங்கி அவர்கள் இந்த பிரதேசத்தின் மக்களாக மாறுவதற்கு உதவ பிரதேச செயலளாளர் முன்வர வேண்டும்.
நாங்கள் அரசியல்வாதிகள் என்பதற்கு அப்பால், இந்த பிரதேசத்திலே பிறந்து வளர்ந்த காணியற்ற மக்களுக்கு காணிகள் வழங்க வேண்டும். அதற்கு வடக்கு மாகாண சபை ஊடாக நடவடிக்கை எடுக்க நான் முழுமூச்சாகவிருப்பேன்.
வடக்கு மாகாண சபைக்கு அதிகாரங்கள் இல்லை என்று நாம் கூறிக்கொண்டாலும் எவ்வளவுக்கு உச்சமான நிதியை பயன்படுத்தி எமது மக்களுக்கு நாம் சேவையாற்ற வேண்டும் என்பதில் வடக்கு மாகாண சபையை சேர்ந்த ஒவ்வொருவரும் குறியாக இருக்க வேண்டும். அந்தவகையில் கொழும்பு அரசால் எங்களுக்கு தரப்படுகின்ற நிதி போதாமல் இருந்தாலும் நாங்கள் எங்களுடைய புலம்பெயர் தமிழ்மக்களின் உதவியை பெற்று உதவுவோம்.
இரண்டு முதன்மைக் கட்சிகளும் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். இந்த நாட்டிலே நடந்த படுகொலைகள், போர்க்குற்ற மீறல்கள், இன அழிப்பு சார்ந்த விடயங்கள் பன்னாட்டு மட்டத்துக்கு எடுத்து செல்லப்பட்டு உலகில் உள்ள பல நாடுகள் அரசுக்கு பல்வேறு அழுத்தங்களை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் தமிழ் பேசும்மக்கள் ஒற்றுமையாக இந்த காலகட்டத்தை நல்ல சர்ந்தப்பமாக பயன்படுத்தவேண்டும். ஆனால் பலர் பலவிதமான கோணங்களில் இதனை குழப்ப முயற்சி எடுக்கிறார்கள் - என்றார். (வ-21,402)

# முல்லையில் காந்தி சிலையை வீழ்த்தியமைக்குக் கண்டனம்

## காந்தி சேவா சங்கத்தினர் அறிக்கை

முல்லைத்தீவு, ஜன.9
முல்லைத்தீவு நகரப் பகுதியில் அமைக்கப்பட்ட காந்தி சிலை தள்ளி வீழ்த்தப்பட்டமை தொடர்பான செய்திகள் மனவருத்தத்தைத் தருவதாக அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினர் தெரிவித்தனர்.
இந்த விடயம் தொடர்பாக சங்கத்தின் பொதுச்செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:
முல்லைத்தீவு நகரில் அமைக்கப்பட்டு வந்த மகாத்மா காந்தி அடிகளின் சிலை ஒன்று அண்மையில் உடைத்துச் சேதப்படுத்தப்பட்டதாக வெளிவந்த செய்திகள் குறித்து மிகவும் மனவருத்தம் அடைந்தோம். சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுவது இயல்பானதாகும். பிரச்சினைகளுக்கு வன்முறை மூலம் ஒருபோதும் தீர்வு கண்டு விடமுடியாது என்பது வரலாறு கற்றுத்தரும் பாடமாகும். பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வை அகிம்சை வழிமுறைகள் மூலமாகவே பெற வேண்டும், பெற முடியும். இதனையே காந்தியும் வலியுறுத்திவந்தார். தனதுவாழ்க்கை முறைமையையும் அவர் அவ்வாறே அமைத்திருந்தார்.
மகாத்மா காந்தி ஓர் உயரிய தனிநபர் மட்டுமல்ல அவர் ஒரு தொடர் இயக்கம். உலகத்துக்கே அகிம்சையைப் போதித்து அதன்படி வாழ்ந்து காட்டிய மகான். இதனால்தான் உலகின் பல்வேறு நாடுகளிலும் சிலைவைத்துப் போற்றப்படும் மாமனிதராக காந்தி மாறினார். சமாதானம் மற்றும் அமைதி தொடர்பான கற்கை நெறிகளில் காந்திய சிந்தனை முதன்மையான இடத்தை வகிக்கின்றது. காந்தி எந்த ஏகாதிபத்தியத்துக்கெதிராகப் போராடினாரோ அவர்களே இன்று காந்தியை உயரிய இடத்தில் வைத்துப் போற்றுகிறார்கள்.
காந்தியத்துக்கு எதிரான கருத்துக்கள் இருப்பது ஆரோக்கியமானது. ஜனநாயகத்தில் மாற்றுக் கருத்துக்கு எப்போதும் இடமுண்டு. அதே வேளை காந்தியை முழுமையாகப் புரிந்து கொள்வதும் முக்கியமானது. உலகில் வாழ்ந்த, வழிகாட்டிய பெரியார்கள் இனம், மதம், மொழி, நாடு என்ற பேதங்கள் கடந்து மக்கள் மனங்களில் ஒளியை ஏற்றியுள்ளார்கள். அவ்வாறான ஓர் உத்தமரே காந்தி மகான். அவர் போன்ற மகாத்மாக்கள் என்றும் மக்கள் இதயங்களில்வாழ்ந்துகொண்டிருப்பார்கள் - என்றுள்ளது. (வ-21)

# எல்லை நிர்ணய அறிக்கை ரணிலிடம் இன்று கையளிப்பு!

கொழும்பு, ஜன. 9

பெரும் எதிர்பார்ப்பையும் - சர்ச்சையையும் ஏற்படுத்தியுள்ள எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை, கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும், கட்சித் தலைவர்களிடமும் இன்றைய தினம் கையளிக்கப்படலாம் என்று தெரியவருகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்படுவதற்கு முதன்மைக் காரணமாக, எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை வெளியிடப்படாமையே சொல்லப்பட்டு வருகின்றது. கடந்தமாதம் 27ஆம் திகதி அறிக்கை வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கு முதல் நாள், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா வெளிநாடு சென்றிருந்தார். இராஜாங்க அமைச்சர் அறிக்கையைப் பெற்றுக் கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், அறிக்கை முழுமைப்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்து வெளியீடு பிற்போடப்பட்டது.

கடந்த வாரம், அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் அறிக்கையைக் கையளிப்பதற்கு எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் சென்றனர். இருப்பினும் அறிக்கையைப் பெற்றுக் கொள்ள அமைச்சர் மறுத்து விட்டார். அறிக்கையில் ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் கையெழுத்திடவில்லை என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தச் சர்ச்சைகளின் மத்தியில், நாடாளுமன்றத்தில் வைத்து இன்றைய தினம் அறிக்கை கையளிக்கப்படும் என்று தெரியவருகின்றது. கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடவும், கட்சித் தலைவர்களிடமும் அறிக்கை கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (வ-5)



# குழப்பத்தில் இடம்பெற்ற சனசமூக நிலையத் திறப்பு

கிளிநொச்சி, ஜன. 9

கிளிநொச்சி சிவநகர் சனசமூக நிலையம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொ.கஜேந்திரகுமாரினால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

'கரைச்சிப் பிரதேச சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த போது, பிரதேச சபையின் தவிசாளர் நா.வை. குகராசவினால் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சிவநகர் சனசமூக நிலையம் கட்டப்பட்டது. 2015ஆம் ஆண்டு இறுதிக் காலப் பகுதியில் சனசமூக நிலையம் கட்டி முடிக்கப்பட்டது. திறந்து வைக்கப்படவில்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொ.கஜேந்திரகுமாரினால் ஒரு லட்சம் ரூபாவில் சனசமூக நிலையத்துக்கான மின் இணைப்பு பணிகள் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்டன. நேற்றைய தினம் அவராலேயே சனசமூக நிலையமும் திறந்து வைக்கப்பட்டது' என்று சிவநகர் மூத்த குடிமக்கள் குழுத் தலைவர் அ.இரகுபதி தெரிவித்தார்.

கரைச்சிப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் நா.வை.குகராசவினால் மேற்படி சனசமூக நிலையம் திறந்து வைக்கப்பட்டதாக, அந்தப் பிரதேசத்தில் பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. (வ-5-6)

# மாதாந்த மாணவர் நிதியை அதிகரிப்பதற்குத் தீர்மானம்

சாவகச்சேரி, ஜன. 9

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தால் வழங்கப்படும் மாதாந்த மாணவர் நிதி ஜனவரி மாதம் தொடக்கம் ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும் என்று சங்க பொதுச் சபை தீர்மானித்துள்ளது என்று மன்றத்தினர் தெரிவித்தனர்.

மன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயத்தின் 23ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு அண்மையில் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. அதன் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

"தென்மராட்சிப் பிரதேசத்தில் வறுமை நிலையிலும் கற்றலில் ஆர்வமுள்ள மாணவர்களை அந்தந்தப் பாடசாலை அதிபர்களின் சிபார்சின் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்டு மாதாந்தம் மன்ற அங்கத்தவர்களின் பங்களிப்புடன் கல்வி வளர்ச்சி நிதி 2011 ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கப்படுகின்றது. க.பொ.த. உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு தலா 750 ரூபா வீதமும் க.பொ.த.சாதாரண தரம் மற்றும் ஏனைய வகுப்பு மாணவர்களுக்கு தலா 500 ரூபா வீதமும் மாதாந்தம் நிதி வழங்கப்பட்டது.

கடந்த மாதம் நடைபெற்ற மன்ற பொதுச் சபைக் கூட்டத்தில் தற்போது தனியார் கல்வி நிலையங்களின் கட்டண அதிகரிப்பால் மன்றத்தால் வழங்கப்படும் நிதி உதவி போதாதென மாணவர்கள் முறையிட்டதையடுத்து மன்றத்தின் கல்விவளர்ச்சிநிதிபெறும் அனைத்து மாணவர்களுக்கும் மாதாந்தம் தலா ஆயிரம் ரூபா வீதம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

வறிய நிலையிலும் கற்றலில் ஆர்வமுள்ள 36 மாணவர்கள் மன்றின் நிதி உதவி பெற்று கற்று வருகின்றனர். 2011ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கல்வி வளர்ச்சி நிதி மூலம் கடந்த டிசெம்பர் வரை மன்ற அங்கத்தவர்கள் வழங்கிய 25 லட்சம் வரையான தொகை தரம் 6 தொடக்கம் பல்கலைக்கழகம் வரை கற்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. தற்போது 36 மாணவர்கள் மாதாந்த நிதியையும் 118 மாணவர்கள் வருடாந்த நிதியையும் பெறுகின்றனர் - என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# கைதிகள் விடுதலை

யாழ்ப்பாண சிறைச்சாலையிலிருந்து இரண்டு கைதிகள் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்று இரண்டு ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் சிறைச்சாலைகளிலிருந்து 285 கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணச் சிறைச்சாலையிலிருந்து 2 பேர் விடுவிக்கப்பட்டனர். சிறு குற்றங்கள் புரிந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுத் தண்டம் செலுத்தத் தவறியமையால் அவர்கள் சிறைத் தண்டனை அனுபவித்து வந்தனர்.

இதேவேளை, சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ற-4,8)

# இளையோர் தைப்பொங்கல் விழா தலைமன்னாரில் இன்றும் நாளையும்

கொழும்பு, ஜன. 9

தேசிய இளைஞர் தைப்பொங்கல் விழா தலைமன்னாரில் இன்று ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. மன்னார் ஏ.டீ.எம்.வித்தியாலய மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ள இந்த விழா நாளைவரை தொடரும் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை இளைஞர் சமூக சம்மேளனம், தேசிய இளைஞர் சபை, தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அமைச்சு, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, கலாசார அமைச்சு, வடக்கு மாகாண சபை ஆகியன இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளன.

தமிழ், சிங்கள, முஸ்லிம் இளையோர் மத்தியில் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்தத் தைப் பொங்கல் விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இரண்டாயிரம் இளையோரின் பங்களிப்புடன் இந்த விழா நடைபெறும்.

தைப்பொங்கல் விழாவைபவத்துக்காக தமிழ், சிங்கள, முஸ்லிம் இளையோர் சிறப்பு ரயில் சேவை ஒன்றும் இடம்பெறவுள்ளது. இதில் சிங்கள, தமிழ் மற்றும் மலையக இளையோர் தமது அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் ரயில் சேவை இன்று காலை 7.30 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (வ-4)

# 30 திருட்டுச் சைக்கிள்களுடன் தீவகத்தில் ஒருவர் சிக்கினார்

யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் துவிச் சக்கர வண்டித் திருட்டில் ஈடுபட்டு அவற்றை தீவகத்தில் விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்ததோடு, அவரிடமிருந்து திருடப்பட்ட 30 துவிச்சக்கர வண்டிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். நகரப் பகுதிகளில் தொடர்ச்சியாக துவிச்சக்கர வண்டித் திருட்டில் ஈடுபட்டு அவற்றை தீவகத்தில் கொண்டு வந்து விற்பனை செய்பவர் தொடர்பில் இரகசியத் தகவல் கிடைத்தது. அவ்வாறு தகவல் கிடைத்தவர் தொடர்பில் ஆராய்ந்தபோது மண்டைதீவைச் சொந்த இடமாகவும் வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட ஒருவரே திருட்டுத் துவிச் சக்கர வண்டிகளை விற்பனை செய் தமை கண்டறியப்பட்டது.

குறித்த நபரை இலக்கு வைத்துக் காத்திருந்தோம். சனிக்கிழமை மாலையில் துவிச்சக்கர வண்டி ஒன்றை பேருந்தின் மேல் பகுதியில் ஏற்றிய வாறு வேலணையில் வந்து இறங்கினார். அவ்வாறு வந்தவரை துவிச்சக்கர வண்டியுடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்தோம் . அவர் கொண்டு வந்த துவிச்சக்கர வண்டி யும் களவாடப்பட்ட துவிச்சக்கர வண்டி எனக் கண்டறியப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்கொண்ட விசாரணைகளில் குறித்த நபரால் வேலணைப்பகுதியில் கொண்டு வந்து விற்பனை செய்யப்பட்ட திருட்டுத் துவிச்சக்கர வண்டிகள் 30 மீட்கப் பட்டன. மீட்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகள் தொடர்பில் அடுத்த கட்ட நட வடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

அண்மையில் யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவுக்குள் கைது செய்யப்பட்ட நான்கு துவிச்சக்கர வண்டித் திருடர்களின் தகவலின் பிரகாரம் 21 துவிச்சக்கர வண்டிகளை யாழ்ப்பாணப் பொலி ஸார் மீட்டுள்ளனர். (வ-4,101)

# வாராந்தச் சந்தையை இடமாற்றுவதற்கு எதிர்த்துக் கையெழுத்துப் போராட்டம்

*தண்ணீரூற்றில் நேற்று முன்னெடுப்பு*

முல்லைத்தீவு, ஜன.9

முல்லைத்தீவு, தண்ணீரூற்று பிரதேசத்திலுள்ள நீராவிப்பிட்டியில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடத்தப்பட்டுவரும் வாராந்தச் சந்தையை இடமாற்ற வேண்டாம் என்று கோரி நேற்று அங்கு மக்களிடம் கையெழுத்து பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த சந்தை முள்ளியவளையில் அதற்கென அமைக்கப்பட்ட இடத்துக்கு அடுத்தவாரம் முதல் மாற்றப்பட வேண்டும் என முல்லைத்தீவு ஒருங்கிணைப்புக்குழுவின் கடந்த மாதக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதனை தற்போது இயங்கும் இடத்திலேயே வாராந்த சந்தை இருக்கவேண்டும் என்று வலியுறுத்தியே சந்தை வியாபாரிகள் நேற்றையதினம் மக்களிடம் கையெழுத்துக்களைப் பெற்றனர்.

எல்லாக் கிராமங்களுக்கும் மத்தியில் தற்போதைய இடமே அமைந்திருக்கின்றது. மிகவும் பொருத்தமான இடமாக காணப்படுகின்றது. முள்ளியவளையில் உள்ள இதற்கென அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடமானது பொருத்தமில்லாத இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அங்கே நாம் வியாபாரத்தை மேற்கொள்ள முடியாது. குறித்த சந்தை கட்டடமானது நகருக்கு வெளியே அதிக தூரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சந்தைக்குவரும் மக்களுக்கு போக்குவரத்தில் சிரமம் ஏற்படக் கூடிய இடமாக இருக்கின்றது என்று வியாபாரிகள் குற்றஞ்சாட்டினர்.

மக்களின் கையெழுத்து அடங்கிய ஆவணம் உரிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர். (வ-21)

# அனுமதியின்றி மணல் ஏற்றுவதைத் தடுத்த இளைஞன் மீது ராணுவத்தினர் தாக்குதல்

## முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணையில் சட்டவிரோதமாக மணல் ஏற்றியதாகக் குற்றஞ்சாட்டப்படும் இராணுவத்தினரைத் தடுக்க முற்பட்ட இளைஞன் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்பலவன் பொக்கணையில் நேற்று முன்தினம் உழவு இயந்திரத்தில் இராணுவத்தினர் மணல் ஏற்ற முற்பட்டனர். அந்தப் பகுதி இளைஞர்கள் சிலர் தடுக்க முற்பட்டு இராணுவத்தினரிடம் கேள்வியெழுப்பியபோது, பொதுமகன் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட இளைஞன் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். விசாரணை முன்னெடுத்த பொலிஸார் மேலதிக விசாரணைக்காக இராணுவத்தினரையும் பாதிக்கப்பட்டவரையும் பொலிஸ் நிலையத்துக்கு நேற்று அழைத்திருந்தனர்.

விசாரணையின்போது தாக்கியதை இராணுவ மேஜர் ஏற்றுக்கொண்டார். அதற்காக அவர் மன்னிப்புக் கோரினார். பாதிக்கப்பட்ட இளைஞன் குறித்த மன்னிப்பை தான் ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்தார். குறித்த முறைப்பாடு இருவரின் இணக்கத்துடன் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது. (வ-4,101)

# ஜீ.சி.ஈ. உயர் தரப் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஜன.9
ஜீ.சி.ஈ உயர்தர தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் வெளியாகின.
பாடசாலை ரீதியாகக் கிடைத்த பெறுபேறுகளின் விவரம் வருமாறு:

**யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**
**விஞ்ஞானப்பிரிவு**
தி.கிருசாந்தி பி.2சி, சி.இனோஜா 3 சி

**கணிதப் பிரிவு**– கு.பிரியங்கன் ஏபிசி

**வர்த்தகப் பிரிவு**
மா.தெவனிகா 2ஏபி, ஜெ.கஜவதனா 2ஏபி, ந.லக்சன் 3பி, க.ஜெனகன் 3பி

**கலைப்பிரிவு**
செ.தனுசிகா ஏபிசி, பா.நிர்மலா ஏ2பி, யோ.அபிரா ஏபிசி, ம.நிறோஜினி ஏ2பி, அ.அனித்தா 2பிசி, ம.சதீஸ் ஏபிசி, ப.துவிதா 2பிசி, சி.ஜிவாசினி ஏ2சி, ப. துஸ்யந்தி ஏ2சி, செ.பிறேமா ஏ.2சி, ப.டிலக்சன் ஏபிசி, க.நிறோஜினி 2பிசி, சி.தனுசா 2பிஎஸ், அ.அபிரா பிசிஎஸ், வி.தேனுயா 2பிஎஸ்

**வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**
**கணிதப் பிரிவு**
கா.கீர்த்தனா 2ஏபி, ஜெ.ஜதுஷா 3எஸ், க.நிதுசா 3எஸ், ம.கனிஸ்ரா பிசிஎஸ், இ.மதுஜனா 3எஸ், செ.சர்மினி சி2எஸ், சி.நிருபா 3எஸ், சி.கீர்த்தனா ஏ2சி, அ.மோகனா ஏ2சி, கா.கிருஷாளினி சி2எஸ், பி.சர்மிளா 2ஏபி, சி.டிலக்சினி சி2எஸ், சி.கோகிலா 2பிசி, த.நிதர்சினி 3சி, வீ.கஜிதா 2சிஎஸ்

**விஞ்ஞானப் பிரிவு**
உ.சகானா 2ஏபி, பி.சர்மிளா 2ஏபி, மு.வெண்ணிலா ஏ2பி, க.ரூபினி ஏபிசி, கு.ரஜி லதா 2பிசி, பா.நர்மதா பி2சி,ஞா.தர்சினி 2சிஎஸ், ச.டிலோஜி 2சிஎஸ், ஸ்ரீ.நீரஜா 2சிஎஸ், செ.தர்சினி 2சிஎஸ், ம.மாதுமை சி 2எஸ், செ.விஸ்ணுபிரியா 2சிஎஸ், வ.துவாரகா சி2எஸ், செ.விஸ்ணுமீரா சி2எஸ், இ.கேதாரகௌரி 3எஸ்

**கலைப் பிரிவு**
மு.நிந்துஜா 3ஏ, த.தர்சினி2ஏபி, ச.மிதுனா ஏ2பி, இ.ரசிதா ஏ2பி, த.தயாளினி 2ஏசி, ச.சாளினி ஏபிசி, த.துவாரகா ஏபிசி, த.நிஷாந்தினி ஏபிஎஸ், நா.மோகனா ஏபிசி, கு.காயத்திரி ஏபிசி, அ.மேரியூலின் ஏ2சி, த.தமிழ்ச்செல்வி 2பிசி, இ.றேகலா பி2சி, ம.விதுர்சனா 2பிசி, கி.சரண்யா பி2சி, க.கலைவாணி 3பி, ஜெ.யோகா 2பிசி, அ.ரிசோதா பி2சி, கி.கிருபாலினி பிசிஎஸ், ந.பாமினி பி2சி, த.மதுரா பிசிஎஸ், நே.லக்சனா ஏ2எஸ், இ.கிருத்திகா 3சி, இ.சயந்தினி பி.சிஎஸ், அல்வினஸ் அமலதாஸ் மேரி ஆன் பிசிஎஸ், த. தமயந்தினி பிசிஎஸ், இ.சாளினி பிசிஎஸ், இ.றெந்திரா பிசிஎஸ், கி. கீர்த்தனா பிசிஎஸ், ப.நிவிதா 2சிஎஸ், ப.தர்சாந்தி 2சிஎஸ், பா.மதுஷா 3சி, ம.மேரிடீனிகீ 2சிஎஸ், அ.அஸ்விகா 2சிஎஸ், பு.பிரியவர்ணா சி2எஸ், அ.குயின்சி அன்ரனி சி2எஸ், கோ.தாட்சாயினி சி2எஸ், த.லக்சனா 3எஸ், க.றக்சனா3எஸ்

**வர்த்தகப் பிரிவு**
ஜெ.சரண்யா 3ஏ, சி.சிவஸ்திகா 2ஏபி, அ.நிரஞ்சனா 2ஏபி, அ.பிரகாசினி ஏ2பி, கி.துவாரகா ஏபிசி, ஜெ.சங்கவி 2பிசி, சி.சாதனா 2பிசி, நி.நிதா 2பிசி, லு.தூயினி ஏபிஎஸ், பா.ஆசா பி2சி, ம.லவுதா 3சி, அ.நிறோஜின் 2பிஎஸ், ம.நிரோஜிதா 2சிஎஸ், ஈ.பாலதேவி சி2எஸ், ம.மதிவதனம்3எஸ், ஆ.கௌதமி 3எஸ்

**யா/நெல்லியடி மத்திய கல்லூரி**
**பொறி.தொழில்நுட்பம்**
ச.நரேஸ் பி2சி, தி.சிவராம் ஏ2சி, யோ.யாழவன் 2பிசி, அ.குகதாஸ் 3சி, கு.அஜித்தா 3சி, அ.திருபரன் பிசிஎஸ், செ.பாமிசன் 2சிஎஸ்

**உயிர். தொழில்நுட்பம்**
யோ.பிரதீப் 3பி, ல.கீர்த்திகா 2பிசி, சி.பவித்ரா ஏ.2சி, சி.அபிநயா பி2சி

**கலை**
யோ.ஹம்சத்வனி 3ஏ, சி.தர்சன் 2ஏபி, ப.சிற்சபேசன் ஏ2பி, கி.கிருஷாந்தன் ஏ2பி

**வர்த்தகம்**
பி.அனிந்திதை 3ஏ, த.யாழினி 3ஏ, யோ.நிரூஜா 3ஏ, ஞா.விஜிகரன் 2ஏபி, சி.விதுசன் ஏ2பி, கு.மதுஷானி 3பி, சி.லக்சன் 2பிசி, வே.வேணுகா பி2சி

**கணிதம்**
லி.ஜெயசுதா 3ஏ, வி.அஜந்தன் 3ஏ, பா.வினித்குமார் 2ஏசி, ப.ராம்ஜி ஏ2பி, யோ.சுயந்தன் ஏ2பி, கி.அபிநயன் 3பி, த.அஜிந்தன் 3பி, ம.துசிதா 2பிசி, கு.கிருசாந் 2பிசி, த.தனுசிகா 2பிசி, சு.ஆர்த்திகாயினி பி2சி, செ.சுகனவேல் பி2சி, சு.நதிருசன் பிசிஎஸ்

**உயிரியல்**
த.நிரோசன் 2ஏபி, வி.தனன்2ஏபி, ச.விதுர்சா 3பி, கி.அபிரா ஏபிசி, சு.வைஸ்ணவி-ஏபிசி, பு.கம்சன் ஏபிசி, லோ.விதுர்சா 2பிசி, ப.நிருஜன் 2பிசி, நே.உஜானா 2பிசி, ம.ஆரணி 2பிசி

**யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**
**கலைப் பிரிவு**
சி.வர்ணிகா 3ஏ, ம.சகானா 3ஏ, வ.ஸ்ரலின் 3ஏ, க.மீரா 3ஏ, க.குகவர்மன் 2ஏபி, ஜெ.ஜெயராஜ் 2ஏபி, அ.துசாந்தினி 2ஏபி, ச.சயனிகா 2ஏசி, ச.சங்கீதா 2ஏசி, லி.ஜஸ்ரின் ஜெபநேசன் 2ஏசி, த.கஜலக்சி ஏ2பி, ந.உமாதேவி ஏ2பி, உ.வனஸ்சன் ஏ2சி, சி.பிரம்மியா ஏபிசி, ஜீ.ஜெனா ஏபிசி, ப.நிசாந்தினி ஏபிசி, க.நிலக்ஜா ஏ2சி, கு.ஜர்சியா ஏசிஎஸ்

(தொடரும்)


## மேல்நீதிமன்றம், வவுனியா
## கேள்வி அறிவித்தல்

மன்னார் மற்றும் கிளிநொச்சி நீதிமன்ற வளாகத்தில் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

எனவே சுத்திகரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விவரங்களையும் வவுனியா மேல்நீதிமன்றக் கணக்காளரிடம் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா 100/= ஐயும், மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூ.10,000/= ஐயும் செலுத்தி 25.01.2017 புதன்கிழமை பிற்பகல் 2 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவுதிகதி 25.01.2017 பிற்பகல் 2 மணிவரை ஆகும். அன்றைய தினம் பிற்பகல் சுமார் 3 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**பா.சசி மகேந்திரன்,**
**தவிசாளர் / மேல்நீதிமன்ற நீதிபதி,**
**மேல்நீதிமன்ற கேள்விச்சபை,**
**மேல்நீதிமன்றம்,**
**வவுனியா.**
(C/27611)
(11,17,18)

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 8 கொழும்புத்துறை 3 ஆம் குறுக்கு வீதி ஆதன இல. 50/2 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை கிழக்கு சித்தங்கேணியைச் சேர்ந்த சின்னத்தம்பி கனகசபை பிரசித்த நொத்தரிஸ் வேலுப்பிள்ளை நடராசா முகதாவில் நிறைவேறிய 1903 இலக்க 1983.12.23 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் இவ்வாதனம் தனது தந்தை வைத்திலிங்கம் சின்னத்தம்பிக்கு முதுசமாக வந்தடைந்து அவரின் பின் தனக்கு வந்தடைந்த உரிமையும் ஆட்சியுமான ஆதனமென தனது மகன் கனகசபை பாலகிருஷ்ணனுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். பிரசித்த நொத்தரிஸ் செல்லையா கணபதிப்பிள்ளை முகதாவில் நிறைவேறிய 170 ஆம் இலக்க 1993.05.05 ஆம் திகதிய சீதன உறுதி மூலம் கொழும்புத்துறை கிழக்கை சேர்ந்த கனகசபை பாலகிருஷ்ணனும் பெண் திலகவதியும் அதேயூர் கந்தையா நவசீலன் பெண் புவனலோசினிக்கு சீதனமாக வழங்கியுள்ளார். இதே நொத்தாரிசு முகாதாவில் 2148 ஆம் இலக்க 2010.10.01 ஆம் திகதிய அறுதி உறுதியால் வவுனியா குருமன்காடு புகையிரதப்பாதை வீதி இல 33 ஐச் சேர்ந்த கந்தையா நவசீலனும் பெண் புவனலோசினியும் இல.54/7 சுவாமியார் வீதி கொழும்புத்துறையைச் சேர்ந்த நடராசா இரத்தினசிங்கத்திற்கும் பெண் அன்ரனிற்றா ஜெயராணிக்கும் அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விவரம்: - வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணம் பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை " நீலன்தறை" இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் C.இராசகாரியர் அவர்களின் வரைபட இலக்கம் 3681/1983.08.10 இல் துண்டு 1 எனக் காட்டப்பட்ட நில. பர.00 குளி 13.9 ஆகும் .இதற்கு எல்லை

வடக்கு- சம்பந்தர் கனகலிங்கம்,
கிழக்கு துண்டு 2 சின்னையா நடராசாவின் ஆதனம்,
தெற்கு துண்டு 3 எனக்காட்டப்பட்ட 6 அடி அகலப்பாதை
மேற்கு - ஒழுங்கை

தற்போது இவ்வாதனத்தை நடராசா இரத்தினசிங்கமும் பெண் அன்ரனிற்றா ஜெயராணியும் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராத விடத்து குறித்த ஆதனமானது நடராசா இரத்தினசிங்கம் பெண் அன்ரனிற்றா ஜெயராணி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.
ஆணையாளர்
மாநகரசபை

## வேலை ஆள் தேவை

நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு வேலை ஆள் தேவை. (விற்பனைப் பிரதிநிதி) யாழ் மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியில் வசிப்பவர்களும் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரமும் உள்ள ஆண்கள் வேலைக்குத் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். வயது எல்லை (18 -25) உட்பட்டது.

**021 222 1158**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

23.12.2016 இல் கொழும்பு
தாமரைதடாக மண்டபத்தில்
கலாபூஷணம்
விருதைப் பெற்றுக் கொண்ட
**செல்லையா**
**தனபாலசிங்கம் (சந்திரன்)**
அவர்கள் மேலும் பல விருதுகள்
பெற்று பல்லாண்டு வாழ
வாழ்த்துகிறோம்.



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக கல்சார உத்தியோகத்தர் **திருமதி இ.மேகலச்செல்வி** அவர்களையும் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் **திருமதி அ.அன்பரசி** அவர்களையும் பாராட்டுவதோடு மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வண்ணாங்கேணி,**
**பளை.**
(J 7514)
(14,17,18)
**குடும்பத்தினர்.**

## Employment Opportunities & Registration of Service Providers : 2017

CCH is a nonprofit organization, contributing for protection, well-being and development of the children in Sri Lanka. In order to ensure the protective, healthy and happy childhood, CCH has been working directly with children, parents and service providers.

- **Staff - Full time**
  - Must have a great interest to work with children
  - Aware about child friendly approaches, Child rights& creativity skills
  - Able to carry out happiness programs& play activities
  - Skills to Psychosocial play and activity for children
  - Person must be able to work in the field& travel other districts
  - Motor cycle license
  - Must have English language skills
- **Resource persons – Part time** (for any of the subjects below)
  - Able to carry out happiness programs & play activities
  - Advance skills in child friendly approaches, Child rights &Creative development
  - Ability for conducting trainings onlife skills for children
  - Skills to child related psychosocial activity
  - Skills in Child and family Counseling
  - Person must be able to work in the field and training centers
  - Flexible working hours and able to travel other districts

If you are looking for opportunities to serve for children at community level in different part of the country as a full time staff/ part time resource person; sent us your detail CV by email to cchforchildren@gmail.com on or before 18th January 2017.

**Center for children's Happiness**
(GUARANTEE) Limited
Northern Regional Office : No.15, Kachcheri Nallur Road, Jaffna.
Head Office: No.8, Ratnakara Place, Dehiwala
www.cchaid.org / www.facebook.com/cch.org
(J/7520)
(11,17,18)

## தவறவிடப்பட்டுள்ளது

627731167 V இலக்கம் கொண்ட அடையாள அட்டை உட்பட பல முக்கிய ஆவணங்கள் கொண்ட கைப்பை தவறவிடப்பட்டுள்ளது. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**077 177 0879/ 077 902 3613**

# பௌத்தத்துக்கு பாதிப்பு ஏற்பட அனுமதியாது நல்லாட்சி அரசு

## கூறுகிறார் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு, ஜன. 9
ஜனாதிபதியும், பிரதமரும் பௌத்தர்கள் என்பதால் சிங்கள மக்களுக்கும், பௌத்த மதத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் எந்த விடயத்தையும் செயற்படுத்தமாட்டார்கள் என்று உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.



புதிய அரசமைப்பின் ஊடாகப் பௌத்த மதத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்படாது என்று நாட்டில் பரப்பப்படும் தகவலில் எந்தவித உண்மையும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கண்டி அஸ்கிரி மகா விகாரையின் பௌத்த சமயக் கல்வி நிலையத்தில் கற்றுவரும் பிக்கு மாணவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதில் உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

"நாங்கள் எப்போதும் சிங்கள மக்களையும், பௌத்த மதத்தையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். உருவாக்கப்படுகின்ற புதிய அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முக்கிய இடம் வழங்கப்படாது என்ற வதந்தி நாட்டில் பரப்பப்பட்டு வருகின்றது.

ஏனென்றால் எமது நாட்டு ஜனாதிபதியும், பிரதமரும் பௌத்தவர்களாவர்.எனவே சிங்கள மக்களுக்கும், பௌத்த மதத்திற்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் அவர்கள் நடவடிக்கை எடுக்கமாட்டார்கள்" என்று அமைச்சர் கிரியெல்ல தெரிவித்தார். (த)

# 13 கிலோ கஞ்சாவுடன் கிளிநொச்சி வாசி கைது

திருமலை, ஜன. 9
திருகோணமலை - கும்புறுப்பிட்டிப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 13 கிலோ கேரளக் கஞ்சாவுடன் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரைக் கைதுசெய்துள்ளதாகக் குச்சவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, கோணாவில் பகுதியைச் 35 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து வவுனியா பிரதேசத்திலிருந்து சிறப்பு அதிரடிப்படையினர் அவரைப் பின் தொடர்ந்துள்ளனர்.

அவரைக் கும்புறுப்பிட்டிப் பகுதியில் சோதனையிட்ட வேளை, அவரிடமிருந்து கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் கூறினர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரைத் திருகோணமலை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகக் குச்சவெளிப் பொலிஸார் தெரிவித்தனர். (த-ய-45)



# தோணிக்கல் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் உதவி

வவுனியா, ஜன.9
பின்தங்கிய கிராமங்களில் மாணவர்களின் கற்றல் திறனை ஊக்குவிக்கும் முகமாக 'கிராமங்கள் நோக்கிய சமூகப் பயணம்' என்ற தொனிப்பொருளில் லண்டன் - நெடுந்தீவு விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையில் தோணிக்கல் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 32 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் ஒழுங்கமைப்பில், ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் ரஜீவ் தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை தோணிக்கல் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. (வ-21)

# ஏ.எல். மீள் திருத்தத்துக்கு இறுதித் திகதி அறிவிப்பு

கொழும்பு, ஜன. 9
2016ஆம் ஆண்டு ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் மீள் திருத்தத்துக்கான திகதியைப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்தது.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை ஜனவரி மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் முன்வைக்குமாறு பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் டப்ளியு. எம்.என்.ஜே புஸ்பகுமார தெரிவித்தார்.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் பாடசாலை அதிபரின் ஊடாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள், பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஊடாகவும் மீள் திருத்தத்துக்கு விண்ணப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

# கணக்காய்வுச் சட்டவரைவு விரைவில் நாடாளுமன்றுக்கு

கொழும்பு, ஜன. 9
கணக்காய்வு சட்டவரைவு விரைவில் நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்படும் என்று சபாநாயகர் கருஜய சூரிய தெரிவித்தார்.

இலங்கைக் கணக்காய்வாளர் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சபாநாயகர் இதனைத் தெரிவித்தார்.

அரச நிதிப் பயன்பாடு தொடர்பில் நாடாளுமன்றத்துக்குக் காணப்படும் அதிகாரத்தைப் பலப்படுத்தி அரச கணக்காய்வு அதிகாரிகள் நாட்டுக்காக வேலை செய்யும் பின்னணியை உருவாக்கப்பட்டுள்ளது.

அரச நிதி பயன்பாடு தொடர் பில் பொதுமக்கள் கேள்வி எழுப்பக்கூடியதாக இருப்பது ஜனநாயகத்தின் உயர்ந்த அம்சமாகும்" என்றும் அவர் தெரிவித்தார். (த)



# சம்பந்தனின் உருவப்படம் எரித்தமைக்குக் கண்டனம்

## தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்டக் கிளை விடுத்தது

வவுனியா, ஜன.9
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனின் உருவப்படம் எரிக்கப்பட்டமையை, இலங்கை தமிழரசுக்கட்சியின் வவுனியா மாவட்ட கிளையினர் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் வவுனியா மாவட்ட கிளையின் வருடாந்த பொதுக் கூட்டமும், புதிய நிர்வாக தெரிவும் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் குருமன்காட்டில் அமைந்துள்ள (தாயகம்) மாவட்ட காரியாலயத்தில் மாவட்ட கிளையின் தலைவரும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சருமான .ப.சத்தியலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே இவ்வாறு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட காணாமற்போன உறவினர்களுடைய போராட்டத்தின் நிறைவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்மந்தனின் உருவப் படம் எரிக்கப்பட்டது. வவுனியா மாவட்ட பிரசைகள் குழுவின் தலைவர் இதை முன்னின்று நடத்தினார். இந்தச் செயலையே இலங்கை தமிழரசுக்கட்சியின் வவுனியா மாவட்ட கிளையினர் வன்மையாகக் கண்டித்தனர்.

இதன்போது புதிய நிர்வாக சபையில் தலைவராக ப.சத்தியலிங்கம், செயலாளராக சி.சிவசோதி, ஆகியோரும்- இவர்களுடன் இணைந்து 25 நிர்வாக குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். வவுனியா நகர், செட்டிகுளம், வவுனியா வடக்கு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (வ-21)

# திருகோணமலை மாணவன் தேசிய ரீதியில் 2ஆம் இடம்

திருமலை, ஜன. 9
ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சை 2016 பெறுபேறுகளின் அடிப்படையில் திருகோணமலை - கிண்ணியா மத்திய கல்லூரி மாணவன் எம்.ரொசான் அக்தர் உயிரியல் விஞ்ஞான பிரிவில் தேசிய ரீதியில் 2ஆம் இடத்தையும்-மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார்.



சமூக சேவைகளில் அக்கறையுள்ள மாணவனான இவர், வெற்றி பெற்றமை கிழக்கு மாகாணத்துக்கும் கிண்ணியாவுக்கும் புகழை ஈட்டித் தந்துள்ளதாகப் பாடசாலையின் அதிபர் ஏ.கலீலுள்ளாஹ் தெரிவித்தார். (த-ய-45)

# சீல் இடப்படாத மாட்டிறைச்சி மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.9
யாழ்ப்பாணம், குருநகர் - சின்னக்கடை இறைச்சிக்கடைத் தொகுதியில் நடைபெற்ற சுகாதாரப் பரிசோதகர்களின் சோதனை நடவடிக்கையின் போது, சீல் வைக்கப்படாத நிலையில் விற்பனைக்கு எடுத்துவரப்பட்ட 25 கிலோகிராம் நிறையையுடைய மாட்டிறைச்சி மீட்கப்பட்டது.

குறித்த கடைத் தொகுதியில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் நடைபெற்ற சுகாதாரப் பரிசோதகர்களின் சோதனை நடவடிக்கையின் போதே இந்த மாட்டிறைச்சி கைப்பற்றப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டில் கடை உரிமையாளர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர். (வ-ரி)


வரவு செலவுத்திட்டம்
2017
வலுவான பொருளாதாரம்
நாளை பிறக்கும்
பிள்ளைகளுக்கு
கடனற்ற நாடு

## தராசுகளுக்கு முத்திரையிடும் பணி யாழ். செயலகத்தில் அடுத்த வாரம்

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்ப்பாணம் வர்த்தக நிலையங்களில் உள்ள நிறுவை அளவை உபகரணங்களுக்கான முத்திரையிடும் பணிகள் எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று யாழ்ப்பாண வணிகர் கழகம் அறிவித்தது.

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகளுக்கான திணைக்களத்தினர் யாழ். மாவட்டச் செயலகத்தில் ஜனவரி 16,17,18 மற்றும் 23, 24, 25 ஆகிய திகதிகளில் வர்த்தக நோக்கிலான அனைத்து அளவை உபகரணங்களுக்கும் 2017 ஆம் வருடத்துக்கான முத்திரையிடல் பணியை மேற்கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணம் வர்த்தகர்கள் அனைவரும் தமது நிறுவை அளவை உபகரணங்களுக்கான முத்திரையிடல் பணிகளை குறிப்பிட்ட திகதிகளில் மேற்கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக் கொள்கிறது என்று கழகத்தில் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

(வ-21)

# பொலிஸாரின் செயற்பாட்டால் சிவில் நிர்வாகத்துக்கு நெருக்கடி

## கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜன.9

முல்லைத்தீவு மாவட்டத்தில் அனுமதியின்றி வாடி அமைப்பவர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டபோதும், அவர்கள் எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்வதில்லை. இதனால் எமது நிர்வாகத்தை முன்னெடுப்பதில் நெருக்கடி நிலை நிலவுகின்றது

இவ்வாறு குற்றஞ்சாட்டினார் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் குணபாலன்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அனுமதியின்றி வாடி அமைத்து பல படகுகளுடன் தொழில் புரிவதனால் ஏற்படும் இடையூறுகளுக்கு கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் தீர்க்க முன்வர வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர். இதுதொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அனுமதியின்றி வாடி அமைக்கும்தென்னிலங்கை மீனவர்கள் தொடர்பில் உள்ளூர் மீனவர்கள் பலமுறை எனது கவனத்திற்கும் கொண்டு வந்தனர். வாடி அமைப்பதற்கான அனுமதியை பிரதேச செயலாளரே வழங்கமுடியும். இருப்பினும் அதற்குரிய முறையில் குறித்த மீனவர்கள் அந்தப் பகுதியில் வாடி அமைக்கவில்லை. அத்துடன், தனியாருக் குச் சொந்தமான நிலத்தில் வாடி அமைத்துள்ளனர். எனவே பிரதேச செயலாளர் என்ற முறையில் அனுமதியை எம்மால் வழங்கமுடியவில்லை.

பாதிக்கப்படும் உள்ளூர் மீனவர்கள் தொடர்ந்தும் எம்மிடம் முறையிடுகின்றனர். அது தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவேண்டிய பொலிஸாருக்கு பலமுறை அறிவித்தல்கள் வழங்கப்பட்டன. எனினும் பொலிஸார் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை.

பொலிஸாரின் செயற்பாட்டினாலேயே எமது நிர்வாகத்தை மக்கள் குறை கூறுகின்றனர். ஆனால் நாம் எமது பணியை முன்னெடுத்தே வருகின்றோம் என்று கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் குணபாலன் தெரிவித்தார். (வ-10)

## குடிதண்ணீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைக்கும்

### முஸ்லிம் காங்கிரஸ் கூறுகிறது

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் மக்கள் எதிர்நோக்கும் சுத்தமான குடிதண்ணீர் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு பெற்றுக்கொடுப்பதற்கு துரித கதியில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் யாழ். மாவட்ட அமைப்பாளர் றொசான் தமீம் தெரிவித்தார்.


யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இந்த ஆண்டில் குடிதண்ணீர் பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெறக்கூடிய நிதியுதவியின் மூலம் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன. நீர் விநியோக செயற்றிட்டங்களைத் துரிதப்படுத்தும் விதத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் உயரதிகாரிகளை அண்மையில் சந்தித்திருந்தார் என்று யாழ். மாவட்ட அமைப்பாளர் றொசான் தமீம் தெரிவித்தார்.

(வ-21,32)

## தரம் - 6 மாணவர்களுக்கான பரீட்சை பிற்போடப்பட்டது

வடக்கு மாகாண பாடசாலை களில் தரம்-6 மாணவர்க ளுக்கு இன்று நடத்தப்பட விருந்த நிலையறி பரீட்சை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டது என்று மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்தது.

கடந்த டிசெம்பர் மாதம் நடை பெற்ற க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணி கள் பாடசாலைகளில் நடைபெறுவதால் நிலையறி பரீட்சைத் திகதி மாற்றப்பட்டது என்று–வடக்கு மாகாணக்கல்விபணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்தார். (வ-9)



முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோக நெற்பயிர்ச் செய்கைக்காக விதைப்பு செய்யப்பட்ட 16 ஆயிரத்து 889 ஹெக்ரேயரில் உள்ள நெல் பயிர்கள் மழை பொய்த்துவிட்டதன் காரணமாக முழுமையாக கருகிப் போகும் அபாயம் உள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டனர். நெற்பயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நீர் நிலைகளில் இருந்து இயந்திரத்தின் உதவியுடன் அவர்கள் வயல்களுக்கு நீர் பாய்ச்சி வருகின்றனர். (வ-7)

## பருத்தித்துறை– கட்டைக்காடு பஸ் சேவை நேரம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 9

பருத்தித்துறையில் இருந்து கட்டைக்காட்டுக்கான மாலை நேர பேருந்து கடந்த வெள்ளிக்கிழமை முதல் மாலை 6 மணிக்கு மாற்றப்பட்டதாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலை முகாமையாளர் கே.கந்தசாமி அறிவித்தார்.

வடமராட்சி கிழக்கு பிரதேச பயணிகள் விடுத்த கோரிக்கையை அடுத்தே, இந்த நேரமாற்றம் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 2ஆம் திகதி முதல் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் நேரம் காலை 7.30 மணியாக மாற்றப்பட்டது. பருத்தித்துறை- கட்டைக்காடு பேருந்து சேவையின் நேர அட்டவணை மாற்றி அமைக்கப்பட்டது. இதனால் பருத்தித்துறை - கட்டைக்காட்டுக்கு இறுதிநேர பேருந்து மாலை 4.30 மணிக்கு மேற்கொள்ளப்பட்டது.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலிருந்து பருத்தித்துறை, யாழ்ப்பாணம், வலிகாமம் போன்ற பிரதேசங்களுக்கும் வைத்தியசாலைகளுக்கும் சென்று வருவோர் வீடு செல்ல போக்குவரத்து வசதிகளின்றி பெரிதும் சிரமப்பட்டு வந்தனர்.

இந்தநிலை தொடர்பில் பிரதேச மக்களால் சுட்டிக் காட்டப்பட்டது. நேர அட்டவணை மாற்றப்படுவதற்கு முன்னர் இருந்ததுபோல கடந்த வெள்ளிக்கிழமை முதல் இறுதி நேர பேருந்து மாலை 6 மணிக்கு மாற்றப்பட்டுள்ளது என்று–பருத்தித்துறைச் சாலை முகாமையாளர் தெரிவித்தார்.

(வ-10,173)

# தென்மராட்சி, வேலணை பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு காணி வழங்க ஏற்பாடு

## மீள்குடியேற்ற செயலணியின் இணைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.9

தென்மராட்சி மற்றும் வேலணை பிரதேச செயலக பிரிவுகளில் முஸ்லிம் மக்களுக்கு காணிகள் மற்றும் வீடமைப்புத் திட்டத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று யாழ்ப்பாணம் - கிளிநொச்சி முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்ற செயலணியின் இணைப்பாளர் பி.ஏ.எஸ்.சுப்யான் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் முஸ்லிம் மாதர் அமைப்பின் ஏற்பாட்டில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, யாழ்.-கிளிநொச்சி மாவட்ட பணிமனையில் கடந்த வியாழக்கிழமை மீள்குடியேற்ற செயலணியின் இணைப்பாளர். பி.ஏ.எஸ்.சுப்யான் தலைமையில் நடைபெற்றது.

இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்துக்கு அரசுக்கு முழுமையான ஒருங்கிணைப்பை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வழங்கியுள்ளார் .

'ஒரு கோடியே பதினாறு லட்சம் ரூபா செலவில் 16 வேலைத் திட்டங்கள் முஸ்லிம் மக்கள் மீள் குடியேறவுள்ள பகுதிகளில் முன்னெடுக்கப்படுகின்றன. முதற்கட்டமாக 200 குடும்பங்களுக்கு வீடமைப்புத் திட்டத்துக்கான விண்ணப்பப்படிவங்களும் வழங்கப்படவுள்ளன.

காணி உரிமைகள் இல்லாதவர்களும் வீடு தேவை என்று விண்ணப்பங்களை முன்வைத்துள்ளனர். எனவே யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் ஆராயப்பட்டன. இந்தப் பகுதியில் காணிகள் மக்களுக்கு வழங்க முடியாது. இதனால் தென்மாராட்சி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளிலும் முஸ்லிம் மக்கள் மீள்குடியேறுவதற்கான சகல நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது . இது ஒரு குடியிருப்பு திட்டமாக மாற்றுவதற்கான நடவடிக்கையாக இருக்கும். இதைத் தவிர கிளிநொச்சி மாவட்டத்திலும் நாச்சிக்குடாவில் முஸ்லிம் மக்கள் மீள்குடியேறுவதற்கான காணிகள் இருக்கின்றன. அங்கு குடியேறும் மக்களுக்கான வீடமைப்புகள் கட்டி கொடுக்கவும் ஏற்பாடாகி உள்ளது. வேலணைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மண்கும்பானிலும் முஸ்லிம் மக்களுக்கான காணிகள் மற்றும் வீடமைப்புத் திட்டம் வழங்கவும் எதிர்பார்த்துள்ளோம் - என்றார்.

(வ-21,32)

# அமைச்சர் ரவூப் ஹக்கீமை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

## அனல்மின் நிலையத்தை அகற்றக் கோரி





எருவில், ஜன.9

அம்பாறை - நிந்தவூர் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வீதியால் சென்ற முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமை வழிமறித்து மக்கள் ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்டனர்.

அட்டப்பள்ளத்தில் அமைந்துள்ள அனல்மின் நிலையத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரியே அவர்கள் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

நேற்றுமுன்தினம் மாலை அந்தப் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் ஹக்கீம், அட்டப்பள்ளம் முதன்மை வீதியால் பயணித்துக் கொண்டிருந்தபோது, குழந்தைகளுடன் பெண்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் ஒன்றுதிரண்டு வீதியின் நடுவே குழுமியிருந்து அவரை வழிமறித்தனர்.

அமைச்சர் சென்று கொண்டிருந்த வாகனத்தொடர் பயணத்தைத் தொடர முடியாத நிலையில், அவர் வாகனத்தில் இருந்து இறங்கி, பொது மக்களுடன் உரையாடினார்.

அமைச்சரிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டது. அனல்மின் நிலையத்தினால் தமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பாக மக்கள் விபரித்துக் கூறினர்.

அனல்மின் நிலையத்தில் இருந்து வெளியேறுகின்ற புகை மற்றும் நச்சு வாயுக்களால் சுவாசநோய், தோல்நோய் உள்ளிட்ட பல பாதிப்புகளுக்கு தாம் முகம்கொடுக்கின்றோம் என்றும், கருக்கலைவு ஏற்படுகின்றது என்றும் அமைச்சரிடம் முறையிட்டனர்.

இவற்றைச் செவிமடுத்த அமைச்சர் ரவூப் ஹக்கீம், இதுகுறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பேன் என்று உறுதியளித்ததை அடுத்து மக்கள் கலைந்துசென்றனர். (ந-ய)

# கலாசார அதிகார சபை ஆரம்ப நிகழ்வு

அச்சுவேலி, ஜன.9

யாழ். மாவட்ட கலாசார அதிகார சபையின் ஆரம்ப நிகழ்வும், 2017 ஆம் ஆண்டுக்கான கலாசார அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலும் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்ட பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கிய நிலையில் மாவட்ட மட்டச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட விருப்பதால் பிரதேச செயலகப் பிரிவு கலாசார அதிகார சபை நிர்வாகிகளைத் தவறாது கலந்து கொண்டு கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு கடித மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-1)

# கைதிகள் விடுவிப்பு

மட்டக்களப்பு, ஜன.9

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதிவியேற்று, இரண்டாண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ், நேற்று நாடளாவிய ரீதியில் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்கள் புரிந்த, தண்டப்பணம் செலுத்த முடியாத கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து இருகைதிகளும், திருகோணமலை சிறைச்சாலையிலிருந்து இரு கைதிகளும் விடுதலை செய்யப்பட்டனர். (ந-ய)

# கால்நடைகளுக்கு காப்புறுதி

யாழ்ப்பாணம், ஜன.9

வலி.மேற்கில் கால்நடைகளுக்கும் காப்புறுதி செய்யும் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று வலி. மேற்குப் பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் தெரிவித்தார்.

"ரூபா 50 ஆயிரம் முதல் 75 ஆயிரம் ரூபா வரைக்குட்பட்ட கால்நடைகளுக்குக் காப்புறுதி செய்யலாம்.

பிரதேச செயலகங்களுக்கு ஊடாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கால்நடைகளுக்கு முதலில் காப்புறுதி செய்யப்பட வேண்டும்.

பிரதேச செயலகப் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேற்படி விடயத்தில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும். மேலதிக விவரங்களை கிராம அலுவலர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம்" - என்றார். (ந-50)

# முல்லைத்தீவு விவசாயிகளுக்கு நிவாரண உதவிகள்

முல்லைத்தீவு, ஜன. 9

முல்லைத்தீவை வரட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாகப் பிரகடனப் படுத்தப்பட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரண உதவித்திட்டங்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் திணைக்களஉதவிப் பணிப்பாளர் ய. ஆயகுலன் தெரிவித்தார்.

கமநல சேவைகள் திணைக்களத்தால் 2016ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவிப்பணிப்பாளரால் விளக்கமளிக்கும் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தால் கடந்த ஆண்டு 513 மில்லியன் ரூபா நிதி பல அபிவிருத்தி திட்டங்களுக்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது. கடந்த வருடம் முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்துக்கு உட்பட்ட 40க்கும் மேற்பட்ட குளங்கள் சீரமைக்கப் பட்டன.

மழைவீழ்ச்சி குறைந்தமையால் அனைத்துக் குளங்களிலும் நீரைத் தேக்க முடியவில்லை. இந்தமுறை காலபோகத்தில் மானாவாரியாகச் செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கையில் 50 வீதத்துக்கு மேற்பட்ட வயல்கள் முற்றாக அழிந்துள்ளன. தொடர்ச்சியாக மழை பொய்த்துப் போனமையால் முல்லைத்தீவு மாவட்டம் வறட்சி மாவட்டமாகப் பிரகடனப்பட்டு விசாயிகளுக்கான நிவாரணத்திட்டங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார். (ந-7)

# ஜயரத்னவின் இடத்துக்கு யார் என்பது முடிவில்லை

கொழும்பு, ஜன. 9

தேசிய அரசில் இருந்து விலகியுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரியங்க ஜயரத்னவின் இடத்துக்கு யாரை நியமிப்பது என்ற தீர்மானம் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட காரணங்களுக்காக பிரியங்க ஜயரத்ன, தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

இந்த விடயம் குறித்து பிரியங்க ஜயரத்னவுடன் தாம் ஏற்கனவே கலந்துரையாடியுள்ளோம். புதிய அமைச்சரை நியமிப்பதற்கு எந்தவித நிர்வாக சிக்கல்களும் இல்லை. அது குறித்து இதுவரைதீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான தயார்படுத்தல்களை சிறிலங்கா சுதந்திர கட்சிமேற்கொண்டுவருகிறது. சிறந்த வேட்பாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்- என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின்பொதுச் செயலாளரும் விவசாய அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார். (ந-4)

# மதகுகள், வாய்க்கால்களை சீரமைப்புச் செய்ய வேண்டும்

## விவசாயிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆயிரக்கணக்கான துருசுகள், மதகுகள், வாய்க்கால்கள் தடுப்பணைகள் என்பன மீள்சீரமைப்பு இன்றி அழிவடைந்துள்ளன. அதனால் இந்த வருடம் பெய்த மழைநீர் கடலுக்குள் சென்றுள்ளது.

இவ்வாறு விவசாயிகள் கவலை தெரிவித்தனர்

வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் அண்மையில் விவசாயம் தொடர்பான கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட விவசாயிகளே இவ்வாறு கவலை தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

வாய்க்கால் மதகுகள், துருசுகள், பாலங்கள் என்பன கடந்த 30 வருட போர்க்கால சூழலில் மீள் சீரமைப்பின்றி அழிவடைந்துள்ளன. யாழ். மாவட்டத்தில் பெரும்பாலான துருசுகள் வாய்க்கால்கள் தடுப்பணைகள் பாலங்கள் போன்றவை கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்கும் நீர்ப்பாசனத்திணைக்களத்துக்கும் உரியன. அவற்றைவிட வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், உள்ளூராட்சி சபை என்பனவற்றுக்கும் உரியன.

கடந்த வருடம் பொருத்தமற்ற தடுப்பணைகள், தடுப்பணைகள் இல்லாத ஒரு வாய்க்கால் மற்றும் மழை கூடும்போது கழறப்பட்ட தடுப்பணை மீள பூட்டப்படாதஒருசூழல்காணப்பட்டதால் கடந்த வருடம் பெய்த மழை நீர் முழுவதும் கடலுக்குள் சென்றுள்ளது.

இந்த விடயங்களை விவசாயசம்மேளனங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ரீதியாக விவரங்கள் திரட்டப்பட்டு கிராமத்துக்கான கொத்தணிக்கான பிரதேசத்துக்கான விவரமான வரைபடங்கள் வலைப்பின்னலாகத் தயாரிக்கப்பட்டு மீள் சீரமைப்புப் பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

இதனைப் பிரதேச செயலாளர்கள் ஒருங்கிணைந்த அடிப்படையில் முன்னெடுத்தால் மட்டுமே 2017 இல் ஆவது 80 வீதமான மழை நீரைக் கட்டுப்படுத்தலாம்.

வடமாகாண விவசாய அமைச்சால் கடந்தவருடம் விவசாய கிணறுகள், துருசு வாய்க்கால், மதகு, போன்ற விவரங்கள் தொகுக்கப்பட்டு அவற்றில் மீள்புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய விவசாயக் கிணறுகள் பிரதேச செயலாளர்கள், பெரும்பாக அலுவலர்கள், விவசாய போதனாசிரியர்களின் ஒத்துழைப்புடன் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் 30 கிணறுகள் மீள் சீரமைப்புச் செய்யப்பட்டன. இந்த வருடமும் மீள் சீரமைப்புச் செய்ய வடக்கு விவசாய அமைச்சு முன்வர வேண்டும்- என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ந-21,50)

## பன்றித்தலைச்சி அம்மன் தேர் 11ஆம் திகதி

தென்மராட்சி, ஜன. 8

பிரசித்திபெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பெருந் திருவிழாவின் தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாக்கள் எதிர்வரும் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

திருவிழாக்களில் அடியார்கள் கலந்து கொள்வதற்கு வசதியாக பேருந்துச் சேவைகளை நடத்துமாறு ஆலய நிர்வாகத்தினர் இ.போ.ச. கோண்டாவில், பருத்தித்துறை சாலைகளையும், தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினரையும் கேட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரியிலிருந்து மட்டுவில் ஊடாக ஒரேயொரு பேருந்து சேவை (மார்க்க இல 775) மட்டுமே தினமும் நடைபெறுகின்றது.

பெருந் திருவிழா ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் வருகை தரும் அடியார்கள் திருவிழா முடிவுற்றதும் போதிய போக்குவரத்து வசதிகள் கிடைக்காததால் அடுத்த பேருந்தின் வரவுக்காகக் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாவுக்குப் பெருமளவு அடியார்கள் வருவார்கள் என எதிர்பார்ப்பதால் வருடாந்தப் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவ காலத்தில் நடத்துவது போன்று சிறப்புப் பேருந்துச் சேவைகளை நடத்த வேண்டும் என்று கோரப்பட்டது. (ற-9)

# கிழக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்திக்கு வளங்கள் போதாது

### மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தெரிவிப்பு



செங்கலடி, ஜன.9

கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆயிரத்து 600 கூட்டுறவுச் சங்கங்களிலும் அபிவிருத்திக்கான தேவைகள் காணப்படுகிறன்ற போதிலும் வளங்கள் போதியளவு இல்லை. இவ்வாறு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வி.தியாகர சர்மா தெரிவித்தார்.

கூட்டு அரசின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி மட்டக்களப்பு ஏறாவூர் வடமேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த சிறப்பு நிழ்வு நேற்று செங்கலடியில் நடைபெற்றது.

சங்கத்தின தலைவர் க.சத்தியவரதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முன்னைய காலத்தில் சகல செயற்பாடுகளும் கூட்டுறவுச் சங்கங்களினூடாகவே நடைபெற்றன. தற்போது அதில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அதனை புதிய சமுதாயம் அறிந்துகொள்ள வேண்டும். உணவு முதல் உடை விவசாய தேவைகள் உட்பட அனைத்து சேவைகளும் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகவே நடைபெற்றன. அவற்றின் மூலம் பெறப்பட்ட லாபத்தில் சொத்துக்களைக் கொள்வனவு செய்தன.

தற்போது கூட்டுறவுச் சங்கங்களை நடத்திக் கொள்ள முடியாதளவுக்கும், பணியாளர்களைச் சேர்த்துக்கொள்ள முடியாதளவிற்கும் நிலை மாறியுள்ளது. ஆனால் சில சங்கங்கள் மிகவும் சிறப்பாக இயங்கிக்கொண்டு வருகின்றன. அந்த வகையில் ஏறாவூர் வடமேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் விவசாய, நுகர்வோர், மீன்பிடி மற்றும் சிக்கன கடன் உதவி கூட்டுறவுச் சங்கங்கள் என ஆயிரத்து 600 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. சகல சங்கங்களிலும் அபிவிருத்திக்கான தேவைகாணப்படுகின்ற போதிலும் வளங்கள் மிகவும் குறைவாக வே காணப்படு கின்றன - என்றார். (ற-ய-47)

## பொன்சேகாவுக்கு ஐ.தே.கவில் பதவி!



கொழும்பு, ஜன. 9

முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் முக்கிய பதவி வழங்கப்படவுள்ளது. அது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது என்று தெரிவிக் கப்படுகிறது.

ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியில் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பதவிகளுக்கு மேலதிகமாக ஒரு முக்கிய பதவிவழங்கப்பட உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ள கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்தப் பதவி தொடர்பில் அறிவிக்கப்பட உள்ளது.

ஜனநாயகக் கட்சியின் தலைவராகக் கடமையாற்றிய சரத் பொன்சேகா அண்மையில் ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டார். தற்போது அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் களனி மாவட்ட அமைப்பாளர் பதவியை வகிக்கின்றார். (ற-4)



## இந்திய மருத்துவர்களால் சிறப்பு மருத்துவ முகாம்

மட்டக்களப்பு, ஜன.9

இந்திய மருத்துவ நிபுணர்களின் சிறப்பு விழிப்புணர்வு மருத்துவ முகாம் ஒன்று நேற்று ஏறாவூர் கூட்டுறவு வைத்தியசாலையில் நடத்தப்பட்டது.

கிழக்கு மாகாண முதலமைச்சரின் அனுசரணையில் இடம்பெற்ற இந்த மருத்துவ முகாமில், குழந்தைப் பேறின்மை, டெஸ்ட் டியூப் பேபி, கருமுட்டை விந்து தானம், லேப்ரோஸ்கோபி, ஹிஸ்டிரோஸ்கோபி, கருக் குழாய் அடைப்பு நீக்குதல், கர்ப்பப்பை கட்டிகள் நீக்குதல், பாலியல் சம்பந்தமான குறைகள் போன்ற விடயங்களில் ஆலோசனைகள் வழங்கப்படட்டன.

கிழக்கு மாகாணத்திலிருந்து பல்வேறு ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளையுடைய சுமார் 200 பேர் இந்த விழிப்புணர்வு முகாமில் பங்குபெற்றனர். (ற-ய-46,47)

## தனியாரின் காணியூடாக யானை வேலி அமைப்பு

### நீதிமன்றம் செல்லத் தீர்மானம்

மூதூர், ஜன.9

தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த கிண்ணியா கண்டல் காடு கிராமத்தின் யானைவேலி அமைக்கும்பணிகள்மீண்டும்ஆரம்பித்துள்ளதை எதிர்த்து நீதிமன்றம் செல்லவுள்ளோம் என்று மத்திய சுகாதாரப் பிரதி அமைச்சரின் இணைப்புச் செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாணசபை தவிசாளருமான எச்.எம்.எம். பாயீஸ் தெரிவித்தார்.

கண்டல்காடு பிரதேசத்தில் பொது மக்களின் குடியிருப்புக் காணிகளுக்கு ஊடாக மீண்டும் யானை வேலி அமைக்கப்பட்டு வருவது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மேற்படி கிராமத்தில்யானை களின் நடமாட்டத்தைத் தவிர்க்கும் வகையில் வன வளத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கடந்த மாதம் 23ஆம் திகதிமின்சாரவேலிஅமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்த மின்சார வேலி தமது காணிகளுக்கு ஊடாக அமைக்கப்படுகின்றது என்றும் இதை உடனடியாகத் தடுத்து நிறுத்தித் தமது காணிகளை அடையாளம்காண உதவவேண்டும் என்றும் என்னிடம் தொடர்ச்சியாக மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

வனவள அதிகாரிகளை உரிய பிரதேசத்துக்கு அழைத்துச் சென்று அவை மக்களின் உறுதிக் காணிகள், அந்தக் காணிகள் பிரதேசசெயலகத்தால் அடையாளம் காணப்பட்டு உரிமையாளர் களிடம் ஒப்படைக்கப்படும் வரை மின்சார வேலி அமைப்பதை நிறுத்த வேண்டும் என்று குறித்த அதிகாரிகளிடம் கோரினேன். அதன்படி மின்சார வேலி அமைக்கும் பணி கடந்தமாதம் இடைநிறுத்தப்பட்டது.

30 வருடகால போர்ச் சூழ் நிலை காரணமாக இந்தப் பிரதேசத்தில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெளியேறி கிண்ணியாவின் மத்திய பகுதியில் உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.


இவர்களுடைய காணிகளைத் தற்போது அடையாளங்காண முடியாதுள்ளது. அந்தளவுக்கு மரங்கள் வளர்ந்து காடாக மாறியுள்ளது. இங்கு இருப்பது உறுதிக்காணிகள். உறுதிக் காணிக்குள் மின்சார வேலியை அமைப்பது சட்டவிரோதமானது. இது முறையற்ற விதத்தில் மக்களின் வாழ்வாதாரத்துக்குச் சவால் விடுக்கும் நடவடிக்கையாகும்.

மகிந்த ஆட்சிக் காலத்தில் தோப்பூரில் இருந்து தம்பலாகாமம் வரையும் மக்களின் வயற்காணிகளுக்குஊடாக60அடிஅகலத்தில் 60 கிலோ மீற்றர் நீளமான வீதி அமைக்கும் பண்ி நடைபெற்றது. இதற்கு எதிராக தமிழ்க் கூட்டமைப்பு நீதிமன்றம் சென்றுஅவற்றைத்தடுத்து நிறுத்தியது. இதனால் கிண்ணியா விவசாயிகளின் நூற்றுக்கணக்கான ஏக்கர் வயற் காணிகள் பாதுகாக்கப்பட்டன.

அதே போன்றதொரு தடையுத்தரவைப் பெறுவதற்காகவே இந்த யானை வேலிஅமைக்கும்பணிக்கு எதிராக நீதிமன்றம் செல்லவுள்ளேன். இதன் மூலம் மக்கள் தங்கள் காணிகளை அடையாளம் கண்டு மீள்குடியேறுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் என நினைக்கிறேன்- என்றுள்ளது. (ற-ய-40)

## பௌத்தத்தைப் பாதுகாக்க கைகோர்ப்பதில் பிரச்சினை

### பொதுபல சேனா கூறுகின்றது



கொழும்பு, ஜன. 9

சிங்கள பௌத்தத்தைப் பாதுகாக்கும் தேசிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் போது யாருடன் கைகோர்ப்பது என்ற பிரச்சினைக்குள் பொதுபல சேனா இருக்கின்றது என்று அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

நுககொட நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நாட்டின் தலைவர்களாக சிங்கள பௌத்தர்கள் இருந்தாலும் அவர்களுக்கான நிகழ்ச்சி நிரல்களைத் தயாரிப்பவர்கள் சிங்கள பௌத்தர்கள் அல்ல. இன்று ஐக்கிய தேசிய கட்சி , ஐ.ம.சு.கூ மற்றும் ஜே.வி.பி என சகல கட்சிகளும் பொது பல சேனாவை அழிக்கும் நோக்கிலேயே செயற்படுகின்றன, இதனால் நாம் யாருடன் கைகோர்த்துச் செல்வது என்ற சிக்கலில் உள்ளோம்" -என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-4)

### பாதுகாப்பு அமைச்சு தடுத்து வைத்திருந்த

# தமிழர் வரலாற்று நூலின் 1000 பிரதிகள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 9

7 நாடுகளில் 6 வருடங்களாக மேற்கொண்ட ஆராய்ச்சியால் எழுதப்பட்ட தமிழர் வரலாற்று நூலின் ஆயிரம் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சால் சில மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளன. அவற்றை அதன் ஆசிரியர் பேராசிரியர்.முருகர் குணசிங்கம் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவிடம் கையளித்தார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மண்டபத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை புத்தகங்கள் இவ்வாறு கையளிக்கப்பட்டன.

தமிழர்களின் தொன்மை வரலாறுகளை நீண்ட கால ஆய்வுகளின் பிரகாரம் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டதோடு அதன் சான்றுகள், ஆவணங்கள் குறிப்புக்களை இரண்டு லட்சம் தாள்களில் சேகரித்ததன் அடிப்படையில் தமிழர் வரலாறு என்னும் நூல் எழுதப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தின் சகல பாடசாலைகளுக்கும் வழங்கும் நோக்கில் ஆயிரம் பிரதிகள் அதன் அச்சுச் செலவுடன் பேராசிரியரால் கையளிக்கப்பட்டன . வடக்கு மாகாணத்தின் தமிழ் மொழுமூலப் பாடசாலைகளுக்கு அந்தப் புத்தங்கள் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்டம் கனகராயன் குளத்தைச் சேர்ந்த பேராசிரியர் முருகர். குணசிங்கம் குறித்த புத்தகங்களை லண்டனில் இருந்து இலங்கைக்கு கடந்த நவம்பர் மாதம் அனுப்பினார். புத்தகத்தின் பெயர் காரணமாக பாதுகாப்பு அமைச்சினால் தடைசெய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவின் தலையீட்டை அடுத்து புத்தகங்கள் விடுவிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4,101)

## 327 புதிய அதியர்களுக்கு பாடசாலைகள் இல்லை

களுவாஞ்சிக்குடி, ஜன.09

கிழக்கு மாகாணத்தில் புதிதாக நியமனம் வழங்கப்பட்ட 327 அதிபர்களுக்கு இன்னமும் பாடசாலைகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதிபர் தரம் மூன்று பரீட் சையில் 327 பேர் சித்தி பெற்று அதிபர்களுக்கான நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன. இதுவரையில் அவ்வதிபர்களுக்கான பாடசாலைகள் வழங்கப்படவில்லை. எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் அதிபர்களுக்கு உரிய பாடசாலைகள் வழங்கப்பட வேண்டும் என கிழக்கு மாகாண தரம் பெற்ற புதிய அதிபர்கள் சங்கம் நேற்றுமுன்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

"எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் இந்த அதிபர்களுக்குரிய பாடசாலைகள் வழங்கப்படவில்லையாயின் 18ஆம் திகதி கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு முன்னால் கவனவீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கவனவீர்ப்பு நடவடிக்கை பயனளிக்காத பட்சத்தில் தமக்கு நீதி வேண்டி வழக்குத் தாக்கல் செய்யப்படும்"- என்று சங்கத்தின் தலைவரும், பொருளாளரும் தெரிவித்தனர். (ற-ய)

## 14 பேருக்கு ரூ.4000 தண்டம்

### டெங்கு நுளம்பு உற்பத்திக்கு காரணமாகவிருந்த குற்றச்சாட்டில்

தென்மராட்சி, ஜன. 9

குடியிருப்புக்கள் மற்றும் காணிகளை டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏது நிலையில் வைத்திருந்த 14 பேருக்கு தலா 4 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தது சாவகச்சேரி நீதிவான் மன்று.

மழையையடுத்து நாடெங்கிலும் டெங்கு நோய்த் தொற்று அதிகமாகக் காணப்படுகிறது என்று கொழும்பு சுகாதார அமைச்சு தெரிவித்தது. அதனைக் கட்டுப்படுத்த டெங்கு செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டு பிரிவினர் அனைத்து தரப்பினருக்கும் அறிவித்தனர்.

வடக்கு மாகாணத்தில் சுகாதார நிறுவனங்களில் கடமையாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், தமது கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் வெளிக்களப்பணிகளைப் புறக்கணித்துவருகின்றனர். இந்த நிலையில் யாழ். மாவட்டத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பொலிஸார் தனித்து மேற்கொண்டு வருகின்றனர்.

சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸார் தமது பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நடத்திய பரிசோதனைகளின் போது டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நிலையில் குடியிருப்பு மற்றும் காணிகளை வைத்திருந்த குடியிருப்பாளர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிவான் மன்றில் வழக்குகள் தாக்கல் செய்தனர்.

கடந்த வாரம் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்குகளை விசாரித்த நீதிவான் பொலிஸாரால் குற்றம்சாட்டப்பட்ட 14 பேருக்கும் தலா 4 ஆயிரம்ரூபா வீதம் தண்டம்விதித்து உத்தரவிட்டார். (வ-9)

# தீர்வு இப்போது கிட்டாதுவிட்டால் எக்காலத்திலும் சாத்தியமில்லை

### கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

களுவாஞ்சிக்குடி, ஜன.9

இனப்பிரச்சனைக்கான தீர்வு இந்த ஜனாதிபதியின் ஆட்சிகாலத்துக்குள் சாத்தியப்படாவிட்டால் இனிஎந்த ஆட்சிக் காலத்திலும் சாத்தியப்படாது.

இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு வருடப் பூர்த்தியை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டச்செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறுதெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

சிறுபான்மையினரின் அபிலாசைகளை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையிலேயே முஸ்லிம், தமிழ் மக்கள் நல்லாட்சியை உருவாக்கியுள்ளார்கள்,

ஜனாதிபதி கிழக்கு மற்றும் வடக்கின் அபிவிருத்தியில் கரிசனைசெலுத்தி வருவது வரவேற்கத்தக்கது. சிறுபான்மை மக்கள் இந்த மண்ணில் நிரந்தரமாக - நிம்மதியாக வாழ்வதற்கான தீர்வொன்றையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்குவார் என்ற நம்பிக்கை இன்னும் எமக்கிருக்கின்றது.

அது மாத்திரமன்றி அதிகாரப் பகிர்வின் மூலம் மாத்திரமே இனப்பிரச்சினைக்கான தீர்வு முழுமைபெறும் என்பதை மறுக்க முடியாது. அதிகாரப்பகிர்வை அரசியல் தீர்வினூடாக வழங்கி போரால் அதிகம் பாதிக்கப்பட்டு இன்னும் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வரும் மக்களின் வாழ்வைத் துரிதமாகக் கட்டியெழுப்ப ஜனாதிபதி தமது பங்களிப்பை வழங்குவார் என்று நாம் முழுமையாக நம்புகின்றோம்.

இனவாதம் இந்த நாட்டில் மீண்டும் தலைவிரித்தாட ஆரம்பித்துள்ளது. சிறுபான்மை மக்கள் அரசின்மீது அதிருப்தியுறும் சூழல் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி இனவாதிகளின் செயற் பாடுகளுக்கு இடமளிக்காது சிறு பான்மை மக்களின் பாதுகாப்பையும் அவர்கள் நிம்மதியாக வாழ்வதற்கான சூழலையும் ஏற் படுத்தவேண்டும்.

ஆனால் சில அமைச்சர்கள் இன வாதிகளுடன் கைகோர்த்து முன்னெடுக்கும் நடவடிக்கைகளால் அரசின் நல்லிணக்கச் செயற்பாடுகள் குறித்து மக்கள் சந்தேகம் கொண்டுள்ளனர்.

அரசின் தலைவர் என்ற வகையில் இனவாதிகளுக்கு உரமூட்டும் அமைச்சர்களுக்கு எதிராக உடன் நட வடிக்கை எடுக்க வேண்டும்.

கிழக்கில் தலைவிரித்தாடும் வேலைவாய்ப்பின்மை மற்றும் வறுமை ஆகியவற்றுக்கும் ஜனாதிபதி தமது மூன்றாவது ஆட்சிக்காலத்தில் தீர்வு காணவேண்டும் - என்றார். (ற-ய)

பாராட்டி வாழ்த்துகின்றோம்




ஸ்ரனிஸ்லாஸ் மிதூஷன்
(யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி)
G.C.E A/L - 2016
வர்த்தகப்பிரிவு (ஆங்கில மொழி மூலம்)
மாவட்ட நிலை - 01
தேசிய நிலை - 26
AAT பரீட்சை - 3rd Stage (Jan - 2016)
தேசிய நிலை - 01
இந்நிலை அடைவதற்கு கர்த்தர் செய்த கிருபைக்கு நன்றி செலுத்தி இவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
அம்மம்மா, அம்மப்பா, சின்னமாமா குடும்பம், அருமைமாமா குடும்பம், சித்தி குடும்பம்
பெரியமாமா குடும்பம், ஆசைமாமா குடும்பம், குட்டிமாமா குடும்பம்,
Best Wishes



## மீண்டும் வேண்டும் ஜல்லிக்கட்டு: வலியுறுத்தி மெரினாவில் பேரணி

சென்னை, ஜன. 9

ஜல்லிக்கட்டு விளையாட்டை மீண்டும் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி சென்னை மெரினா கடற்கரையில் நேற்று மிகப்பெரிய பேரணி நடத்தப்பட்டது.

தமிழர்களின் தனிப் பெரும் திருநாளான தைத்திருநாள் நெருங்கும் நிலையில், பாரம்பரிய சிறப்புமிக்க வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்த மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி பல்லாயிரக்கணக்கான மக்களின் பங்குபற்றலுடன் இந்தப் பேரணி நடைபெற்றது. பேரணியில் பங்குபற்றிய சிலர் தமது காளை மாடுகளை அலங்கரித்தும் அழைத்து வந்திருந்தனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## தரமுயர்வு

யாழ்ப்பாணம், ஜன.9

வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணிபுரியும் புஸ்பலிங்கம் எதிர்வரும் 16ஆம் திகதியில் இருந்து கல்விப் பணிப்பாளராகத் தர முயர்த்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சி வலயத்தில் கடந்த 5 ஆண்டுகளாக கல்விப்பணிப்பாளராகப் பணிபுரியும் நந்தகுமார் மாகாணக் கல்வி அமைச்சிற்கு மாற்றலாகிச் செல்வதால் ஏற்படும் வெற்றிடத்திற்கு வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனால் புஸ்பலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். (ற-101)

## பஸ் சேவை நேரமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன.9

பருத்தித்துறைக்கான 750 இலக்க வழித்தடத்தின் கடைசிப்பேருந்துசேவை நேரம் இரவு 9 மணியாக மாற்றப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க மாற்றப்பட்டுள்ள இந்த பேருந்துசேவைநேரம் இன்றிலிருந்து நடைமுறைக்கு வரும் என இ.போ.ச சாலை பருத்தித் துறை முகாமையாளர் அறிவித்தார். (ற-ரி)



# பன்னாட்டு ஐந்து நட்சத்திர ஹோட்டல் கொழும்பில்

### சுவிட்ஸர்லாந்தின் மோவன்பிக் நிறுவனம் ஆரம்பித்தது



"சுவிட்ஸர்லாந்தின் புகழ்பெற்ற பன்னாட்டு ஐந்து நட்சத்திர ஹோட்டலான மோவன்பிக் நிறுவனத்துக்குச் சொந்தமாக 83 ஹோட்டல்கள் உலகெங்கிலும் பரந்து அமையப்பெற்றுள்ளதுடன், 23 நாடுகளில் அவை இயங்குநிலையில் இருந்துவருகின்றன."

பன்னாட்டு ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்று கொழும்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சுவிட்ஸர்லாந்தின் புகழ்பெற்ற பன்னாட்டு ஐந்து நட்சத்திர ஹோட்டலான மோவன்பிக் நிறுவனமே இலங்கையில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் கூட்டிணைவோடு தமது கிளையை அமைத்துக்கொண்டுள்ளது.

25 வருடங்களின் பின்பாக இலங்கையில் அமையப் பெற்ற பன்னாட்டு ஐந்து நட்சத்திர ஹோட்டலாக இது விளங்குகிறது.

ஜனாதிபதியால் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள மேற்படி பன்னாட்டு ஐந்து நட்சத்திர ஹோட்டலானது எதிர்வரும் பதினாறாம் திகதி முதல் வாடிக்கையாளர்களின் சேவைகளை ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இலங்கையின் சுற்றுலாத் துறை வேகமாக வளர்ந்து வருகின்ற இந்த, மிகச் சிறந்த சந்தர்ப்பத்திலே புதிய ஹோட்டல் திறந்து வைக்கப்படுகிறது. இந்த ஹோட்டலின் ஒவ்வொரு மாடியும் ஒன்றுக்கொன்று வித்தியாசமான அமைப்பில் வடிவமைப்பைப் பெற்றுள்ளது. அந்த வகையிலே இலங்கையர்களுக்கும்-வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கும் வித்தியாசமான அனுபவங்களை எமது நட்சத்திர ஹோட்டல் கொண்டுள்ளது." என்று மோவன் பிக் நிறுவன முதன்மை நிறைவேற்று அதிகாரி ஒலிவியர் ச்சாவி தெரிவித்தார்.



வீட்டுப்பாவனை மற்றும் மின்சார சாதனங்களின் விற்பனையில் முன்னிலையிலுள்ள சிங்கர் சிறிலங்கா பி.எல்.சி. சிறுநீரக நோயை கட்டுப்படுத்த மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளின் தொடர்நிலையாக அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள உலுக்குளம் கிராமத்துக்கான குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையமொன்று நன்கொடையாக வழங்கியது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அதன் விநியோகத் திட்டமானது அந்தக் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது இடங்களுக்கான குடிதண்ணீர் விநியோக மையங்களைக் கொண் டுள்ளதுடன், மக்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரை இலகுவில் பெற்றுக் கொள்ள முடியுமென சுட்டிக்காட்டப்பட்டது.

## நவீன தொழில்நுட்பத் திறன் கொண்ட நெனோ தட்டுக்கள் கண்டறிவு

### புற்றுநோய்க் கலங்களை தாக்கி அழிக்கிறது

புற்றுநோய்க் கலங்களை தாக்கி அழிக்கும் வினைத்திறன்களைக் கொண்டமைந்த நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட நெனோ தட்டுக்கள் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மிச்சிக்கன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்டு வந்த தொடர்ச்சியான ஆராய்ச்சி நடவடிக்கையிலேயே இந்த நெனோ தட்டுக்களை உருவாக்கம் பெற்றுள்ளன.

10 நெனோ மீற்றர்கள் வரையிலான அளவுடைய இந்தத் தட்டுக்கள் புற்றுநோய்க் கலங்களை தாக்கி அழிக்கும்வல்லமையை கொண்டமைந்துள்ளன.

"இவை நோய் எதிர்ப்பு அமைப்பின் 'ரி' வகைக் கலங்களுடன் இணைந்து புற்றுநோய்க் கலங்களைச் சென்றடைகின்றன. உடல் கலங்களுள் செலுத்தப்பட்டு 10 நாள்களின் கால வரையறையினுள் புற்றுநோய்க்கலங்களை இவை முற்றாக அழித்து விடுகின்றன" என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தநிலையிலே உயிர்கொல்லி நோய்களில் ஒன்றான புற்றுநோய் காரணமாக அமெரிக்காவில் மட்டுமே 14.5 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன் ஒவ்வோர் வருடமும் 13 மில்லியன்வரையானவர்கள் புற்றுநோயின் தாக்கத்துக்கும் பாதிப்புக்கும் உள்ளாகி வருவதான தகவல்களும் புள்ளி விவரங்களும் ஆய்வாளர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.




வணிகம்



## வனவளர்ப்பு நிறுவனமான சதாஹரிதவுக்கு தங்கவிருது

### சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான கௌரவப்படுத்தலாக வழங்கப்பட்டது

நாட்டின் நம்பிக்கைக்குரித்தான வணிக ரீதியிலான வனவளர்ப்பு நிறுவனம் சதாஹரித அண்மையில் இடம்பெற்ற சுவர்ணதீப 2016 விருதுகள் நிகழ்வில் தங்க விருதை பெற்றுக்கொண்டுள்ளது.

'சுற்றுச்சூழல் எமது வாழ்வாகும்' என்ற தொனிப்பொருளின் கீழாக இலங்கை மக்கள் தொடர்பாளர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த மேற்படி விருதுவழங்கும் நிகழ்விலேயே மக்களுக்கான ஸ்திரமான ஜீவனோபாயத்தை அறிமுகம் செய்து எதிர்காலச் சந்ததியினருக்கான சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நடவடிக்கைகளுகாகச் சதாஹரித ஆற்றிவருகின்ற பங்களிப்புக்கான கௌரவமாக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள இலங்கை மக்கள் தொடர்பாளர்கள் சங்கத்தின் தலைவர் சுனில் ஆர்.விஜயகோன், "விருதுகளை பெற்றுக்கொள்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டமை தொடர்பில் மகிழ்வடைகிறோம். அகர்வூட் உட்பட வணிக ரீதியான பயிர்களை இந்த நாட்டில் அறிமுகம் செய்வதனூடாக சதாஹரித நிறுவனம் வனவளர்ப்பு துறைக்கு பெரும் பங்காற்றி வருகிறது. இலங்கை மக்கள் தொடர்பாளர்கள் சங்கம் போன்ற சுயாதீன அமைப்பிடமிருந்து இத்தகைய கீர்த்திமிக்க விருதை பெற்றுக்கொள்வதனையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்" - என்றார்.

மேலும் சதாஹரித நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஜயம்பதி மிரண்டோ கருத்துக்கூறுகையில்; இலங்கையின் சமூக பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் வனவளர்ப்பு துறை மேம்பாட்டுக்கு நாம் வழங்கி வரும் பங்களிப்பானது விருதினைப் பெற்றுக்கொண்டதன் ஊடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது -என்றார்.

# புளோரிடா விமான நிலையத் தாக்குதல்; பல்வேறு கோணங்களில் விசாரணைகள்

வொஷிங்டன், ஜன. 9
அமெரிக்காவின் புளோரிடா விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்திய ஆயுததாரியிடம் பயங்கரவாதத் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
புளோரிடாவின் போர்ட் விமான நிலையத்துக்குள் புகுந்த ஆயுததாரி, பயணிகள் தமது உடமைகளைப் பெற்றுக் கொள்கின்ற இடத்துக்குள் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார். 5 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். மேலும் 8 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். ஆயுததாரி, தனது கைத் துப்பாக்கியில் இருந்த ரவைகள் தீர்ந்த பின்னர் தானாக பொலிஸில் சரணடைந்தார். அவரிடத்தில் நடத்தப் பட்ட முதற் கட்ட விசாரணைகளின் அடிப்படையில், அவரது பெயர் ஸ்ரீபன் சான்டியாகோ (வயது -26) என்பது தெரியவந்தது. சான்டியாகோ அமெரிக்க இராணுவத்தில் பணி புரிந்துள்ளார். திருப்திகரமற்ற செயற்பாட்டால் கடந்த ஆண்டு பதவி இறக்கம் செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார். இதனால் அவர் கடும் மன அழுத்தத்தில் இருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.



சான்டியாகோ ஈராக்கிலும் பணிபுரிந்ததால் (ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு உள்ளது) இந்தத் தாக்குதல் பயங்கரவாதத் தாக்குதலாக இருக்கலாம் என்ற சந்தேகமும் வெளியிடப்பட்டது. (ம)



# சிரியாவில் சக்திமிகு குண்டு 50 பேர் உடல் உருக்குலை

டமஸ்கஸ், ஜன. 9
சிரியாவின் அஜாஸ் நகரில் நேற்றுக் காலை இடம்பெற்ற வெடிகுண்டுத் தாக்குதலில் 50 பேர் உடல் சிதறிச் சாவடைந்தனர் என்று அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.
சிரியா துருக்கி ஆகியவற்றின் எல்லையிலேயே அஜாஸ் நகரம் அமைந்துள்ளது. லொறி ஒன்றில் முழுவதுமாக வெடிபொருளை நிரப்பி முக்கிய சந்தையொன்றில் வைத்து அதை வெடிக்கச் செய்து இந்த அசம்பாவிதம் ஏற்படுத்தப்பட்டது. சம்பவ இடத்திலேயே 50 பேர் உடல் சிதறிச் சாவடைந்தனர். உடல் உறுப்புக்கள் சிதைந்த நிலையில் நூற்றுக் கணக்கானோர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலமை கவலைக்கிடமாக உள்ள தால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. சந்தையில் உள்ள ஏராளமான கடைத் தொகுதிகள், வாகனங்கள் ஆகியனவும் தீக்கிரையாகின.
சிரிய அரசு, அரசுக்கு எதிரான ஆயுதக் குழு, ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு என்று இருமுனைப் போரில் சிக்கித் தவிக்கிறது. இதனால் இந்தத் தாக்குதலை எவர் நடத்தியதுஎன்று அறிவிக்கப்படவில்லை. எவரும் தாக்குதலுக்குப் பொறுப் பேற்கவில்லை.

# வளைந்து, குனிந்து கும்பிடுவதை என்னிடத்தில் நிச்சயம் தவிர்ப்பீர்

## அம்மா குழுவுக்கு ஸ்ராலின் சாட்டை



சென்னை, ஜன. 9
“வளைந்து, குனிந்து, தவழ்ந்து, தரையில் உருண்டு கால்நோக்கி கும்பிடுபோடுபவர்களால் தமிழகம் பாழ்பட்டுக் கிடக்கிறது. இவ்வாறான நடவடிக்கைகளை தி.மு.கழகத் தொண்டர்கள் என்னிடம் தவிர்க்க வேண்டும்” இவ்வாறு தெரிவித்தார் கட்சியின் செயல் தலைவர் மு.க.ஸ்ராலின்.
ஸ்ராலின் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:
என்னை நேரில் சந்திக்கவரும் கழகத்தினர் சிலர் ஆர் வம் மிகுதியால், நான் சற்றும் எதிர்பாராத நிலையில் என் காலில் விழுந்து வணங்க முயற்சிப்பது எனக்கு மன தளவில் பெரும் நெருக் கடியை உண்டாக்கு கிறது. கழகத்தினர் இப்படிக் காலில் விழு வதை நான் சிறிதும் விரும்புவதில்லை. விழ முயற்சிக்கும் தோழர்களை உடனடியாகத் தடுத்து தூக்குவதுடன், சில வேளைகளில் பாசத் தோடு கடிந்து கொள்வதும் உண்டு. எனினும், நாள்தோறும் நேரில் வாழ்த்து தெரிவிக்கும் கழகத்தினரில் சிலர் என் காலில் விழ முயற்சிப்பதும் அதனைப் பார்க்கும் மற்றவர்களும் அதே முறையைக் கடைப்பிடிக்க நினைப்பதும் எனக்கு சற்றும் உடன்பாடில்லாத செயல் என்பதுடன், சுயமரியாதைக் கொள்கை வழியில் தன்மானம் காக்கும் இந்த இயக்கத்துக்கும் எதிர்மறைச் செயலாகவும், உடன்பாடில்லாத செயலாகவும் அமைந்துவிடுகிறது. எவர் காலிலும் விழ வேண்டிய அடிமை நிலை எந்த மனிதருக்கும் எப்போதும் ஏற்படக் கூடாது என்பதை வலியறுத்தி, வெற்றி கண்ட இயக்கம் தி.மு.க. வளைந்து குனிந்து தவழ்ந்து தரையில் உருண்டு கால்நோக்கி கும்பிடு போடுபவர்களால் தமிழகம் பாழ் பட்டுக் கிடக்கிறது. நமக்கு அந்தப் பள்ளமான பாதை வேண்டாம். நாம் தலை நிமிர்வோம். தமிழகத்தை நிமிர்த்துவோம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சராகவும், அ.தி.மு. கழகத்தின் செயலாளராகவும் ஜெயலலிதா இருந்தபோது அமைச்சர்களும் உறுப்பினர்களும் அவரின் காலில் வீழ்ந்து வணங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இதனால் ஸ்ராலினின் இந்த அறிக்கை அவ்வாறான வர்களுக்கு ஒருசாட்டையாக அமைந்துள்ளது என்று பொதுவான அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. (ம)



# பார்க்குக்கு எதிராக மீண்டும் போராட்டம்

சியோல், ஜன. 9
ஊழல் மோசடிக் குற்றச்சாட்டிலிருந்து தற்காலிகமாக பதவி விலத்தப்பட்டுள்ள தென்கொரிய ஜனாதிபதி பார்க் கியூன் ஹைக்கு எதிராக தலைநகர் சியோலில் நேற்றுமுன்தினமும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
பார்க் கியூன் ஹையின் நண்பியான சோய் சூன் சில் என்பவர், ஜனாதிபதியின் நண்பி என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி ஊழல் மோசடிகளில் ஈடுபட்டார் என்பதை எதிர்க்கட்சிகள் நிரூபித்ததை அடுத்து கடந்த ஓகஸ்ட் மாதம் அவர் கைது செய்யப் பட்டார். இதைத் தொடர்ந்த பார்க் க்யூன் ஹை பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் மக்களுடன் இணைந்து தொடர்ந்து போராட்டம் நடத்தின. இதன்படி நாடாளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பார்க்கும் தற்காலிகமாக பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட போதிலும் அவருக்கு தம்து கண்டனத்தைத் தெரிவிக்கும் முகமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுதிரண்டு பார்க்குக்கு எதிராக தலைநகர் சியோலில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 300 பேரைக் காவு வாங்கிய தென்கொரியப் படகு விபத்தில் ஆயிரமாவது நாளைக் குறிக்கும் வகையில் கையில் மெழுகுவர்த்திகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர். (ம)

# சிரியாவில் முகாமிட்ட குறைக்கத் தொடங்கி



மொஸ்கோ, ஜன. 9
சிரிய அரசுக்கு எதிரான ஆயுதக் குழுக்களை ஒடுக்குவதற்காக அங்கு முகாமிட்டிருந்த படைகளை குறைக்க ஆரம்பித்தது ரஷ்யா.
சிரிய ஜனாதிபதி அல் அசாத்தை பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி ஆரம்பித்த அமுக்கக் குழுக்கள் படிப்படியாக அரசுக்கு எதிரான ஆயுதக் குழுக்களாக மாற்றம் பெற்றன. சிரியாவின் இரண்டாவது பெரிய நகரான அலெப்போ ஆயுதக் குழுவால் கைப்பற்றப்பட்டதை அடுத்து ரஷ்யாவின் உதவியுடன் நகரை மீட்கும் போரில் மும்முரமாக ஈடுபட்டது சிரியா. கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அலெப்போ மீட்கப்பட்டது. தற்போது போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. பே
நிறுத்தத்துக்கு மேலும் பல
சேர்க்கும் வகையில் ரஷ்யாவி
அறிவிப்பு வெளிவந்துள்ளது
சிரிய ஜனாதிபதி அசாத்துக்
ஆதரவாக சண்டையிட்
கொண்டு இருந்த பகுதிகளி
இருந்து எங்களது சில படைக
நாடு திரும்புகின்றன என்

# அமெ. தூதர்கள் அனை



வொஷிங்டன், ஜன. 9
வெளிநாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதரகங்களில் ஒபாமாவால் நியமிக்கப்பட்ட தூதர்களை உடனடியாக பதவி விலகுமாறு ட்ரம்ப் உத்தரவிட்டார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் அண்மையில் நடைபெற்றது. ஹிலாரி கிளிங்டனை வீழ்த்தி ஜனாதிபதியானார் ட்ரம்ப். எதிர்வரும் 20ஆம் திகதி ட்ரம்ப் பதவியேற்கவுள்ளார். தனது ஆட்சிக் காலத்தில் தன்னுடன் பணியாற்றுபவர்களை ட்ரம்ப் நியமித்து வருகிறார். பாதுகாப்புத்துறை, அயலுறவுத்துறை அமைச்சர்களை அவர் ஏற்கனவே நியமித்துள்ளார். இந்த நிலையில் தற்போது வெளிநாடுகளில் பணியாற்றும்



# ...டுவெடிப்பு ...ந்து சாவு

அஜாஸ்நகரம், அரசுக்கு எதிரான ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதனால்தமது இடத்தில் அவர்களே தாக்குதல் நடத்த வாய்ப்பில்லை என்று பொதுவான அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. அதற்கு ஏற்றால் போல் கிளர்ச்சியாளர்கள், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவித்தனர். (ம)

# உறைநிலையில் பதுக்கப்பட்ட விலங்குகளின் பாகங்கள் மீட்பு

பீஜிங், ஜன. 9
சீனாவில் உறைநிலையில் வைத்துப் பதுக்கப்பட்டிருந்த வன விலங்குகளின் உடற்பாகங்கள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டன. சிச்சுவன் மாகாணத்தில் மியாங்யாங் நகரத்தில், உறை பதனப் பெட்டியில் வைக்கப்பட்ட நிலையில் அவை மீட்கப்பட்டன. முதலை, கரடி, ஆந்தை உள்ளிட்ட பல விலங்குகளின் உடற்பாகங்களும் சில விலங்குகள் முழுவதுமாகவும் பதப்படுத்தப்பட்டிருந்தன. கிட்டத்தட்ட 2 தொன் நிறையில் குறித்த உடல் பாகங்கள் இருந்தன. சட்ட விரோத விற்பனைக்காக அவை பதுக்கப்பட்டிருக்கலாம் என்று விலங்கு நல ஆர்வலர்கள் அச்சம் வெளியிட்டனர். (ம-எ)







# அம்மா ஜெயலலிதா– தீபா பேரவை; உறுப்பினர்கள் சேர்ப்பு துரித கதியில்

சென்னை, ஜன. 9
ஜெயலலிதாவின்அண்ணன் மகள் தீபா அரசியலுக்கு வரவேண்டும் என்று அவரது ஆதரவாளர்கள் வலியுறுத்தி வரும் நிலையில் 'அம்மா ஜெயலலிதா– தீபா பேரவை' என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு உறுப்பினர்கள் சேர்ப்பு நடவடிக்கை துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளரும் தமிழ்நாட்டின் முதலமைச்சருமாக இருந்த ஜெயலலிதா கடந்த மாதம் உயிரிழந்தார். அவரது மறைவை அடுத்து முதலமைச்சராக பன்னீர் செல்வம் செயற்பட்டுவருகிறார். பொதுச் செயலாளராக ஜெயாவின் நண்பியான சசிகலா பொறுப்பேற்றுள்ளார். ஆனால் சசிகலாவின்தலைமையைஅ.தி.மு. கழகத் தொண்டர்கள் சிலர் ஏற்கவில்லை. அவ்வாறு எதிர்க் கருத்தை உடையவர்கள் தீபாவை அரசியலுக்கு வரும்படி அவரது வீட்டுக்கு முன்பாகத் திரண்டு கோசமிட்டு வருகின்றனர். 'அம்மா ஜெயலலிதா. தீபா பேரவை' என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் 21 மாவட்டங்களிலும் 21 பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த அமைப்பின் மூலம் தீபாவுக்கான ஆதரவு சேர்க்கப்படுகிறது. இதைவிட 'புரட்சி மலர் தீபா பேரவை', 'தீபா பேரவை', ஆகிய பெயர்களிலும் அமைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு தீபாவுக்கு ஆதரவு திட்டப்படுகிறது.
தீபாவின் வீட்டுக்கு முன்னால் நேற்றும் பல தொண்டர்கள்திரண்டிருந்தனர். "மக்களுக்காக விரைவில் பணியாற்றக் காத்திருக்கிறேன். விரைவில் நல்ல முடிவை அறிவிப்பேன். அதுவரை தொண்டர்கள் காத்திருக்க வேண்டும். நல்ல எதிர்காலத்தை நோக்கி பயணம் செய்யக் காத்திருக்கிறேன். அ[illegible]கான விளக்கங்களை, [illegible]கமான முடிவை விரை[illegible] அறிவிப்பேன். முன்னா[illegible] முதல்வர்ஜெயலலிதா[illegible] பெயரையும், புகழையும் காப்பாற்ற வேண்டிய கடமை எனக்கு உள்ளது. ஜெயலலிதா மீது மக்கள் வைத்துள்ள அன்பையும், ஆதரவையும், நம்பிக்கையையும் உணர முடிகிறது. அரசியலுக்கு வருவது என் ஆசையல்ல. அனைவரின் விருப்பத்துக்கும் கட்டுப்படவேண்டிய தருணமிது" என்று தீபா, தனது தொண்டர்கள் மத்தியில் நேற்று உரையாற்றினார். (ம)

# ...ட படைகளை ...கியது ரஷ்யா



...போர் ...பலம் ...ாவின் ...ளது. ...துக்கு ...யிட்டு ...களில் ...டகள் ...என்று ரஷ்ய அதிபர் புடின் அறிவித்தார். படைக்குறைப்பின் முக்கிய அம்சமாக, ரஷ்யாவின் விமானந்தாங்கி போர்க்கப்பலான அட்மிரல் குஸ்நெட்சோவ் இன்னும் சில தினங்களில் மத்திய தரைக் கடலில் இருந்து நாடுதிரும்ப உள்ளது என்றும் ரஷ்யத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ம)

# ரயிலுடன் மோதுண்டு 7 குழந்தைகள் சாவு

லாகூர், ஜன. 9
பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தில் ரயிலுடன் மோதுண்டு 7 பள்ளிக் குழந்தைகள் நேற்றுமுன்தினம் உயிரிழந்தனர்.
லோத்ரன் பகுதியில் ஆளில்லா ரயில்வே கடவையை, பள்ளிக் குழந்தைகளை ஏற்றிச் சென்ற இரு மோட்டார் ரிக்சாக்கள் கடக்க முற்பட்ட வேளையில்ரயிலுடன்மோதுண்ட விபத்து இடம்பெற்றது. 7 குழந்தைகள் ரிக்சா ஓட்டுநர் என எட்டுப்பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 3 முதல் 6 வயதுடைய குழந்தைகளே அவ்வாறு உயிரிழந்தனர். மேலும் காயமடைந்த 7 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
கடும் மூடு பனியே விபத்துக்குக் காரணம். அதிக அளவில் மூடுபனி கொட்டியதால் ரிக்சா ஓட்டுநர்களால் ரயில் வருவதைக் கணிக்க முடியவில்லை என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்தும் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ம)



# பிரிட்டன் இராணுவம் நேதாஜியைக் கொன்றது

## புதிய புத்தகத்தில் திடுக்கிடும் தகவல்

புதுடெல்லி, ஜன. 9
இந்திய தேசிய இராணுவத்தை ஏற்படுத்தி ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக போராடிய நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிரிட்டன் இராணுவத்தால் கொல்லப்பட்டார் என்று மேஜர் ஜெனரல் ஜி.டி.பக்சி என்பவர் எழுதியுள்ள புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
"1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி தைபேயில் நடந்த விமான விபத்தில் நேதாஜி சாவடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டு வருகிறது. நேதாஜியின் வாழ்க்கை வரலாறு பற்றிய ரகசிய ஆவணங்களை கடந்த ஆண்டு இந்திய அரசு வெளியிட்ட போதும் அவர் எப்படி இறந்தார் என்பது இன்னும் மர்மமாகவே உள்ளது. இந்த நிலையில் பக்சியின் தகவல் முக்கியம் வாய்ந்தது என்று கருதப்படுகிறது.
ஜப்பானுக்கான முந்தைய சோவியத் ரஷ்யத் தூதர் ஜேக்கப் மாலிக் உதவியுடன் டோக்கியோவில் இருந்து நேதாஜி சைபீரிய பகுதிக்கு தப்பிச் சென்றார். அங்கு 3 வானொலி நிலையங்களை நிறுவினார். இது, பின்னர் பிரிட்டன் இராணுவத்துக்கு தெரிய வந்தது. இதனால் நேதாஜியிடம் விசாரணை நடத்த தங்களை [illegible]னுமதிக்க வேண்டும் [illegible] சோவியத் ரஷ்யாவி[illegible] பிரிட்டன் கோரிக்கை[illegible]விடுத்தது. இந்த வி[illegible]ணையின் போதுதான் [illegible]ிட்டன் இராணுவத்தா[illegible] [illegible]நதாஜி சித்திரவதை [illegible]து கொல்லப்பட்டார். [illegible]ர் விமான விபத்தில் உ[illegible] [illegible] இதனை [illegible] [illegible] முடியாத ஆதாரங்க[illegible] [illegible]டம் உள என்று [illegible] புத்தகத்தில் குறிப்[illegible] [illegible]டது. (ம)

# ...னவரையும் பதவிவிலக ட்ரம்ப் உத்தரவு



அமெரிக்கத் தூதர்கள் அனைவரையும் பதவி விலக அவர் உத்தரவிட்டார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
இந்தத் தகவலை நியூசிலாந்து நாட்டுக்கான அமெரிக்க தலைமைத் தூதர் மார்க் கில்பர்ட் நேற்று உறுதிப்படுத்தினார். எதிர்வரும் 20ஆம் திகதி நான் நியூசிலாந்தில் இருந்து புறப்பட்டு விடுவேன் என அவர் தனது ருவிற்றரில் பதிவிட்டார். (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மக்கள் கருத்தைப் புறக்கணிப்பது ஜனநாயகமன்று எதேச்சாதிகாரம்

நல்லிணக்கப் பொறிமுறை விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகளும் இடம்பெறவேண்டும் என்பதான மக்கள் கருத்தறியும் செயலணியின் பரிந்துரையை அரசு முற்றுமுழுதாக நிராகரித்திருப்பது அதன் ஜனநாயகத் தன்மையில் பெரும் குறைபாடாக மேல் எழுந்து காணப்படுகின்றது.

இந்தச் செயலணியை நியமித்தவர் இந்த நாட்டின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. விசாரணைப் பொறிமுறை எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்த பொதுமக்களின் கருத்தை அறிந்து பரிந்துரை செய்வதே இந்தக் குழுவின் முக்கிய கடமையாக இருந்துள்ளது. அந்த வகையிலேயே வடக்கு, கிழக்கில் மட்டுமன்றி தென்னிலங்கையிலும் மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த இந்தக் குழுவினர், தங்கள் பரிந்துரைகளைச் செய்துள்ளனர். இதில் முக்கியமானது, பொறிமுறையில் பன்னாட்டு நீதிபதிகள் இடம்பெற வேண்டும் என்பதாகும். ஆரம்பம் முதலே தமிழ் மக்களும் இதனையே வற்புறுத்தி வந்துள்ளார்கள்.

பன்னாட்டு நீதிபதிகள் இடம்பெற வேண்டும் என்பது, ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கையின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலும் காணப்படும் முக்கிய அம்சமே, அதுபுதிதும் அல்ல, புதுமையானதுமல்ல. இப்பொழுது பொதுமக்களின் கருத்தும் அவ்வாறே அமைந்திருப்பதாகச் செயலணி குறிப்பிட்டுள்ளது.

ஆரம்பம் முதலே அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன பன்னாட்டு நீதிபதிகள் நியமிக்கப்படுவதை எதிர்த்தே வந்துள்ளார் என்பது உண்மைதான். ஆனால் அரச தலைவரைத் தெரிவுசெய்த மக்களே அதனை வற்புறுத்தும் போது அதனை மறுப்பது நியாயமில்லை, நீதியுமில்லை, ஜனநாயக தருமமுமில்லை. மக்கள் கருத்துக்கு மதிப்பளிப்பதாயின் அரசதலைவரும் அவரது அமைச்சர்களும் தம் கருத்தை மாற்றிக் கொண்டாக வேண்டும்.

உள்ளகப் பொறிமுறையில் நீதி கிடைக்கும் என்பதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை இல்லை. இதற்கு அண்மையில் நடந்து முடிந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை வழக்கின் தீர்ப்பே போதுமான ஆதாரமாக உள்ளது என்று பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விசாரணைப் பொறிமுறை எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்துப் பாதிக்கப்பட்ட மக்கள் என்ன கூறுகிறார்கள் என்பது முக்கியமாகும். பன்னாட்டு மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கருத்து இது. பாதிப்புக்களை ஏற்படுத்தியவர்களைக் காப்பாற்றுவதாகவே அரச தலைவரினதும் அவரது அமைச்சர்களதும் கருத்துக்கள் இருப்பதாயின் அது எந்தவகையிலும் நியாயபூர்வமாக அமைய முடியாது. இதில் நீதி நிலைநாட்டப்படவேண்டும். எவரையும் பழிவாங்கும் நோக்கம் கிடையாது என்று த.தே. கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தலைசிறந்த சட்ட வல்லுநர்களையும் அறிஞர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டிருந்த குழுவினரே இந்தப் பரிந்துரைகளை செய்துள்ளனர். குழுவின் அறிக்கை தமது கருத்தை பிரதிபலிக்காது என்பதை முன் கூட்டியே அறிந்த அரச தலைவர் பல தடவைகள் அறிக்கையை ஏற்றுக் கொள்வதை பிற்போட்டிருந்தார். கடைசியில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போதும் அவர் அதனை நேரடியாக ஏற்றுக் கொள்ளவில்லை. இதன் நோக்கம், செயலணியின் அறிக்கை தமது நிலைப்பாட்டை பிரதிபலிக்காது என்பதே. அவ்வாறாயின் மக்கள் கருத்தறியும் செயலணி நியமிக்கப்பட்டிருக்கவேண்டிய அவசியமில்லை.

மக்கள் கருத்தை அரசு செயற்படுத்துவதாக இருப்பதே ஜனநாயகம். மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள், அவர்கள் மீது தம் தனிப்பட்ட கருத்தைத் திணிக்க முயல்வதானது ஜனநாயகமன்று. அது எதேச்சாதிகாரம். அவ்வாறு முயன்றுதான் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மக்களால் துரத்தியடிக்கப்பட்டார் என்பதை இன்றைய ஆட்சியாளர்கள் மனதில் இருத்திக் கொண்டு செயற்படவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

# ஆலோசனைப் பேரவையில் சகல மதங்களின் பிரதிநிதிகளும் உள்ளடக்கம்

## கலந்தாலோசனைச் செயலணி பரிந்துரை

மதங்களுக்கு இடையிலான ஆலோசனைப் பேரவை ஒவ்வொரு பிரதான மதத்தினதும் உட் பிரிவுகளது பிரதிநிதிகள் உட்பட எல்லா மதங்களினதும் பிரதிநிதிகளை உள்ளடக்குவது அவசியமென கலந்தாலோசனைச் செயலணி பரிந்துரைத்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்ட இந்தச் செயலணி தனது அறிக்கையை 4ஆம் திகதி வெளியிட்டது. நேற்றைய உதயனில் வெளியான அந்த அறிக்கையின் இறுதிப் பகுதி வருமாறு;

ஏக காலத்தில் அது பொதுமக்களுக்கும் வெளியிடப்பட வேண்டும். அதன் கால எல்லை அது விசாரிக்க வேண்டிய விடயங்களின் அளவின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும். உ.நீ.ந.மீ.நி ஆணைக்குழுதன்வருடாந்த அறிக்கைகளை தெளிவான செயற்படுத்தக்கூடிய பரிந்துரைகளுடன் வெளியிட வேண்டும். அவையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அதே வேளை பொதுமக்களுக்கும் வெளியிடப்பட வேண்டும்.

5.7 உ.நீ.ந.மீ.நி ஆணைக்குழு குறிப்பான தொனிப்பொருள்கள் பிரச்சினைகள் மற்றும் அல்லது விசாரணை செய்வதற்கும் அறிக்கை சமர்ப்பிப்பதற்குமான விடயப்பொருள்கள் என்பவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். அவற்றின் தேர்வில் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். கலந்தாலோசனைச் செயல்முறையின்போது போரின் கடைசிக் கட்டங்கள் பற்றியும்-வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது பற்றியும்-மலையகச் சமூகம் பற்றியும்-விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என அநேகமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

5.8 ஆணைக்குழுக்களின் வரலாற்றையும் முன்னைய அறிக்கைகளின் நடைமுறைப்படுத்தப் படாத பரிந்துரைகளையும் கருத்தில்கொள்ளும்போது காலத்தின் தேவையை ஒட்டி எத்தகைய நடவடிக்கைகள எடுக்க இயலும் எடுக்கப்பட வேண்டும் என்பதை அழுத்திக் காட்டுவதற்காக இந்தப் பரிந்துரைகள் பற்றிய ஒரு பரிசீலனை மேற்கொள்வது அவசியமாகும்.

5.9 இந்த ஆணைக்குழு ஒரு செயற்பாடற்ற கேட்பானராக இல்லாது செயற்பாடுசார்ந்த அமைப்பாக இருக்க வேண்டும் என்ற பொதுமக்களின் கோரிக்கைக்கு ஏற்ப உ.நீ.ந.மீ.நி ஆணைக்குழு உண்மையைத் தேடுவதற்கும் அதன் அடிப்படையில் குறிப்பான செயற்படுத்தக்கூடிய பரிந்துரைகளைச் செய்வதற்கும் ஏற்றவகையில் செயற்படு வழிமுறைகளை வகுக்க வேண்டும்.

5.10 வரலாற்று நிகழ்வுகளை விவரிக்கும் உ.நீ.ந.மீ.நி ஆணைக் குழுவின். அறிக்கைகள் சமகால வரலாற்றிலும் பாடசாலைக் கலைத் திட்டங்களிலும் செல்வாக்குச் செலுத்த வேண்டும். வரலாற்றுரீதியான உறுதிப்படுத்தல், மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்பை உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொள்ளுதல், பொறுப்புக் கூறல் இவற்றின் பின்விளைவுகள் பற்றி தனியாகவும் கூட்டாகவும் புரிந்து கொள்ளுதல் என்பன நல்லிணக்கத்துக்கான அடிப்படைகளாகும். முழுச்சமூகத்துக்கும் எதிரான மொத்தவன்முறைக்கும் குறிப்பாக அவர்களின் பண்பாட்டு அடையாளத்துக்கு எதிரானவன்முறைக்கும் இதுபொருந்தும். யாழ்ப்பாண நூலக எரிப்பு, 1983 இன் தமிழர்களுக்கு எதிரான பேரழிவு, வடமாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை, கிழக்கில் பொலிஸார் கொல்லப்பட்டமை, யாழ்ப்பாண வைத்தியசாலை படுகொலைகள், அறந்தலாவை அநுராதபுரம், புனித பீற்றர் தேவாலயம், சத்துருக்கொண்டான் காத்தான்குடி பலஜலிய கொடல்ல பிந்துனுவெலப் படுகொலைகள், சிறி தலதா மாளிகையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் போன்றவை முற்றுமுழுதான மனித உரிமைத் தாக்குதல்களுக்கு உதாரணங்களாகப் பாடசாலை வரலாற்று நூல்களில் இடம்பெறவேண்டும்.

5.11 உண்மையை உறுதிப்படுத்துதல் முக்கியமானது என்றவகையில் உ.நீ.ந.மீ.நி ஆணைக் குழு ஒரு வலுவான விசாரணை அலகைக்கொண்டிருக்கவேண்டியது அத்தியாவசியமாகும். இந்த அலகு சட்டம் வரலாறு, மானிடவியல், சட்ட மருத்துவம் குற்றவியல், உளவியல், சமூகவியல் உட்பட பொருத்தமான திறன்களை உடைய ஆய்வாளர்களைக் கொண்டிருக்கவேண்டும். இதற்கு மேலாக உ.நீ.ந.மீ.நி. ஆணைக் குழு உள்ளூர் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தும் வகையில் பிராந்திய விசாரணை அலுவலகங்களையும் கொண்டிருக்க வேண்டும். இவர்களும் ஆய்வுகளை மேற்கொள்வர்.

5.12 உ.நீ.ந.மீ.நி. ஆணைக் குழுவின் பகிரங்க அமர்வுகளுக்கு முன்னர் நாடு பரந்த கவன ஈர்ப்பை ஏற்படுத்தும் உத்தியும் வெளித் தொடர்பு வேலைத் திட்டமும் வகுக்கப்படவேண்டும். ஆணைக்குழுவின் சகல அமர்வுகளும் அவற்றில் சொல்லப்பட்ட விடயங்களும் முழுமையாகப் பதியப்பட வேண்டும். மூன்று மொழிகளிலும் சமூக ஊடகங்கள் முடுக்கிவிடப்பட வேண்டும். உ.நீ.ந.மீ.நி. ஆணைக் குழுவுக்காக ஊடக செய்திப் பரிமாற்ற அலகு ஒன்றும் நிறுவப்பட வேண்டும். சம்பந்தப்பட்டவர்களுடனும் பரந்துபட்ட பொதுமக்களுடனும் தொடர்பு கொள்வதற்காக போதிய அளவு நிதியும் அதற்கு வழங்கப்பட வேண்டும்.

5.13 ஆணைக்குழுவின் முடிவுகள் பரவலாகப் பரப்பப்பட வேண்டும். இம்முடிவுகளின் எளிதாகக் கிடைக்கக்கூடிய எளிமையான மொழியில் அமைந்த வடிவம் பொதுமக்களுக்கும் ஆணைக் குழுவின் முன்னர் தோன்றிய பாதிக்கப்பட்ட சமூகத்தினருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும்.

5.14 பங்குபற்றும் சகலரினதும் பாதுகாப்பை உறதிப்படுத்தவும் பங்குபற்றலுக்கான பாதுகாப்பான இடங்களை உருவாக்கவும் போதிய கவனம் எடுக்கப்பட வேண்டும்.

6. நிதிப் பொறிமுறை (விசேட நீதி மன்றம் மற்றும் விசேட வழக்குரைஞர் அலுவலகம்)

6.1 நீதிபதிகள் முதல் விசேட வழக்குரைஞர் அலுவலகம், விசாரணையாளர் அலுவலர் வரை தீவிர சர்வதேசப் பங்குபற்றுதலின் தேவையைப் பொறுத்தவரை 2.12, 2.13 ஆகிய பரிந்துரைகள் பிரயோகிக்கப்பட வேண்டும்.

6.2 தேசிய மற்றும் சர்வதேச நீதிபதிகளின் நியமனத்துக் ஆட்களைத் தெரிவு செய்வதற்கான நியமங்கள் தொழில்வாண்மை மற்றும் சிவில் சமூக நிறுவனங்களின் ஆலோசனையுடன் அரச அமைப்புப் பேரவையினால் வகுக்கப்பட வேண்டும். சர்வதேசப் பிரதிநிதிகளைப் பொறுத்தவரை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஆலோசனையும் பெறப்பட வேண்டும். இரண்டையும் பொறுத்தவரை தெரிவு நியமங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

6.3 போதிய அளவு எண்ணிக்கையான நீதிபதிகளை நியமிப்பதற்கான வழிவகை செய்யப்பட வேண்டும். அப்போதுதான் நீதிபதிகளும் ஒருவரோ, பலரோ வருகை தராவிடினும் காலதாமதம் ஏற்படாது

6.4 ஒவ்வொரு அமர்விலும் பெரும்பான்மையான தேசிய நீதிபதிகளும் குறைந்தபட்சம் ஒரு சர்வதேச நதிபதியும் இருப்பதை நீதிமன்றம் உறுதிப்படுத்த வேண்டும்

6.5 நீதிமன்றத்திலும் விசேட வழக் குரைஞர் அலுவலகத்திலும் நீதிபதிகளையும் விசாரணையாளர்களையும் பொறுத்தவரை பால் நிலைப் பிரதிநிதித்துவமும் எல்லா இனக்குழுக்களின் பிரதிநிதித்துவம் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

6.6 பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் விசேட தேவைகளை குறிப்பாகப் பெண்கள் குழந்தைகளின் தேவைகளைக் கவனிக்கும் வகையில் நடை

முறை விதிமுறைகள் அலுவலக ஊழியர்கள் அவர்களின் சேர்க்கை என்பவற்றில் விசேட நீதிமன்றம் நிறை நிலையில் இருக்கவேண்டும்.

6.7 போர்க்குற்றம் பற்றிய நீதிமன்ற விசாரணைகளைப் பொறுத்தவரை அடிப்படையான சர்வதேச நியமங்கள் பெங்களூர் மூலகக் கொள்கைகள் நீதித்துறைப் பொறுப்புக் கூறல் தொடர்பான சர்வதேச நீதிமன்று (ICJ) வழக்குரைஞர் வழிகாட்டி உட்பட முன்மொழியப்பட்ட கலப்பு நீதிமன்றத்தை அமைப்பதில் வெளிப்படையான குறிப்புகளின் மூலம் உள்ளடக்கப்பட வேண்டும்.

6.8 போர்க் குற்றங்கள் மற்றும் மானிடத்துக்கு எதிரான குற்றங்கள் உட்பட சர்வதேசக் குற்றங்களை விசாரிப்பதற்கும் பாலியல் வன்முறைக் குற்றங்களுக்கும் சிறுவர்ககளுக்கு எதிரான குற்றங்களுக்கும் குறிப்பான கவனம் செலுத்துவதற்கும் விசேட நீதிமன்றத்துக்கு ஆணை வழங்கப்பட வேண்டும். இடைக்கால நீதி மற்றும் தண்டனையிலிருந்து தப்பித்தல் பற்றிக் கவனம் செலத்துதல் என்றவகையில் நீதமன்றத்துக்குரிய ஆணையை மனங்கொண்டு விசேட நீதிமன்றத்தின் சட்ட அதிகாரத்துக்குக் காலவரையறை இல்லை என கலந்தாலோசனைச் செயலணி பரிந்துரைக்கின்றது.

6.9 விசேட வழக்குரைஞர் அலுவலகம் காலதாமதம் இன்றி நிறுவப்பட வேண்டும். அதன் அதிகாரங்களும் செயற்பாடுகளும் பிற பொறிமுறைகளும் அதற்குள்ள உறவும் தெளிவாக வரையறுக்கப்பட்டுப் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

6.10 விசாரணைக் கொள்கை வகுக்கையில் இலங்கையில் நிகழ்ந்ததாகக் குறைப்படும் சர்வதேசக் குற்றங்களின் பரப்பெல்லை, இக்குற்றங்களால் பாதிக்கப்பட்டோரின் பன்முகத்தன்மை, குற்றம் புரிந்தோரின் பல்வேறு வகைகள் என்பவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் விசேட வழக்குரைஞர் அலுவலகத்தின் தேர்வுகள் வடிவமைக்கப்பட வேண்டும். கருத்தில் கொள்ளப்பட வேண்டிய (மனித உரிமை) மீறல்கள் கிடைக்கும் சான்றுகளைப் பொறுத்தவரை பின்வருவனவற்றை உள்ளடக்க வேண்டும்.

6.11 நடைமுறைப் பிரச்சினைகள் காலம்போதாமை மூலவளப் பற்றாக்குறை போன்ற காரணங்களால் மீறல்கள் தொடர்பான தனித்தனி விடயங்கள் எல்லாவற்றையும் விசாரிப்பதற்கு இய லாமற்போகும் சந்தர்ப்பத்தில் குறைந்த பட்சம் சர்வதேசக் குற்றங்களுக்குப் பெரும் பொறுப்பு ஏற்க வேண்டியவர்களையாவது பொறுப்பேற்கச் செய்வதை விசாரணைக் கொள்கை உறுதிப்படுத்த வேண்டும். இதன்பொருட்டு உத்தரவிடுதல் மேல் மட்ட மற்றும் கட்டளைப் பொறுப்பு மற்றும் இணைந்த குற்றவியல் வழி நடத்தல் போன்ற சட்டக் கடப்பாடு அம்சங்களை இலங்கைச் சட்டத்துள் அறிமுகப்படுத்த வேண்டியிருக்கும்.

6.12 விசேட வழக்குரைஞர் அலுவலகம் தனக்கென்று சொந்த விசாரணை அலகைக் கொண்டிருக்க வேண்டும். அதன் அலுவலர்கள் சர்வதேசப் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும். இத்தகையவர்கள் சுயாதீனம், நேர்மை, நீதிமன்றத்தால் தண்டிக்கப்படும் எத்தகைய குற்றங்களிலும் சம்பந்தப்படாமை என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில் பரசீலிக்கப்பட்டிருக்க வேண்டும். சாத்தியமான சார்பு நலன் தலையீட்டைத் தவிர்க்கும் வகையில் இத்தகைய வழக்குகளை விசாரிப்பதில் முன்னர் சம்பந்தப்பட்டிருக்கும் குறிப்பிட்ட அலகுகள் அல்லது பயங்கரவாத விசாரணைத்துறை (TID) போன்ற அலுவலகங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் இந்த விசாரணை அலகில் உறுப்பினர்களாக இருப்பதைத் தவிர்க்க வேண்டும்.

6.13 போர்க் குற்றங்கள் மானிடத்துக்கு எதிரான குற்றங்கள் சித்திரவதை, திட்டமிட்டுக் காணாமலாக்கல் வன்புணர்ச்சி போன்ற தீவிர மனித உரிமை மீறல்கள் என்பவற்றுக்கான மன்னிப்பு சட்ட விரோதமானதும் ஏற்றுக்கொள்ளப்படாதவையுமாகும். இவற்றைக் கருத்தில் கொள்ளக்கூடாது.

6.14 வாழ்ந்துகொண்டிருக்கும் பாதிக்கப்பட்டோர் ஒரு வழக்குரைஞரின் உதவியுடனோ இல்லாமலோ நீதிப்பொறிமுறையின் எல்லாக் கட்டங்களிலும் ஈடுபடுத்தப்படும் இயலுமை உடையர்வகள் வாழ்ந்துகொண்டிருக்கும் பாதிக்கப்பட்டோருக்கும் பொறிமுறையின் அலகுகளுக்கும் தாக்கமான முறையில் ஈடுபட்டுச் செயலாற்றுவதைச் சாத்தியமாக்கும் வகையில் எல்லாக் கட்டங்களிலும் போதிய தகவல்கள் வழங்கப்பட வேண்டும். அதேவேளை விசேட நீதிமன்றத்தின் அல்லது விசேட வழக்குரைஞரின் பணியில் ஏதோ ஒரு வகையில் தலையீடு செய்யவோ அல்லது ஊறு விளைவிக்கவோ கூடிய எந்தச் செயற்பாடும் நிகழாமல் பாதுகாக்க வேண்டும்.

6.15 வழக்காடுனருக்கு சட்ட ஆலோசனை மற்றும் பிரதிநிதித்துவத்துக்கான சட்ட ஏற்பாடு பாதுகாக்கப்பட வேண்டும்.

### 7 வேறு பரிந்துரைகள்

7.1 மத மற்றும் பண்பாட்டுப் பிரச்சினைகளில் ஆலோசனை வழங்குவதற்காக மதங்களுக்கிடையிலான ஆலோசனைப் பேரவை ஒன்று 2016 பெப்ரவரி மாதம் ஜனாதிபதியால் நிறுவப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது கலந்தாலோசனைச் செயலனிக்குக் கிடைத்த பரிந்துரைகளின்படி இந்தப் பேரவை ஒவ்வொரு பிரதான மதத்தினதும் உட்பிரிவுகளது பிரதிநிதிகள் உட்பட எல்லா மதங்களினதும் பிரதிநிதிகளை உள்ளடக்குவது அவசியமாகும். இந்தப் பேரவை திறம்பட செய்யப்படுவதற்கு இது அவசியமாகும் மேலும் இந்தப் பேரவையின் செயற்பாடு பற்றிய விதிமுறைகள் பகிரங்கப்படுத்தப்படவேண்டும். மத வன்முறைச் சம்பவங்கள் பற்றி முன்கூட்டியே எச்சரிக்கும் அத்தகைய சம்பவங்களை கண்காணிக்கும் சமரசப்படுத்தும் பணிகள் இந்தப் பேரவையால் கையேற்கப்படவேண்டும். இத்தகைய சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் சட்டம் ஒழுங்கு மற்றும் நீதித்துறையின் மூலம் நிவாரணம் தேடுவதற்கான அவர்களது உரிமை இதனால் பாதிக்கப்படக்கூடாது.

7.2 இராணுவத்தினர், பொலிஸ் மற்றும் ஊர்காவற்படையினர் ஆகியவர்களைப் பொறுத்தவரை நட்ட ஈடு, ஓய்வூதியம் மற்றும் வேறு வகையான உதவிகளின் அளவும் அவற்றைப் பெறுவதற்கு உரியவர்களின் தெரிவும் அந்தத் தெரிவுக்குப் பயன்படுத்தப்பட்ட அளவுகோல்களும் பிரச்சினைக்குரியவையாக முன்னாள் இராணுவ வீரர்களாலும் போரின்போது கொல்லப்பட்ட அல்லது காணாமற்போன இராணுவத்தினது குடும்பங்களாலும் தெரிவிக்கப்பட்டன. இந்த வேறுபாடு பரிசீலிக்கப்பட்டு இதற்கான காரணங்கள் அவர்களுக்கு தெரிவிக்கப்படுவதோடு அதற்கேற்றபடி குறைபாடுகள் சரிக்கட்டப்படவேண்டும்.

7.3 தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உட்பட முன்னாள் தமிழ் தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்பு கொண்டிருந்த முன்னாள் போராளிகளின் நிலைமை பரிசீலிக்கப்படவேண்டும். இது அவர்களை மீண்டும் சமூகத்துடன் ஒருங்கிணைக்கும் திட்டத்தை உருவாக்குவதே நோக்கமாக கொண்டிருக்க வேண்டும். ஒருங்கிணைப்புக்குத் தடையாக உள்ள நடைமுறையிலுள்ள பாதுகாப்பும் பொருளாதார உடலியல், உளவியல் மற்றும் சமூகச் சவால்கள் என்பவற்றுக்குத் தீர்வுகாண்பதாய் அமைய வேண்டும். அரசின் பாதுகாப்பு அக்கறைகள் காரணமாக முன்னாள் போராளிகளின் வீடுகளுக்கு இராணுவத்தினரும் உளவுப் பிரிவும் தொடர்ச்சியாகச் செல்லுதலும், அவர்கள் இராணுவ முகாம்களுக்கு வந்து ஒப்பமிட வேண்டும் என்ற கோரிக்கையும் அவர்களை மனமுறிவுக்கும் சமூக வியக்குக்கும் மேலும் புறமொதுக்கலுக்கும் தீவிரப்படுத்தலுக்கும் ஆளாக்க முடியும். ஆகவே இந்த அணுகுமுறை மீள் பரிசீலிக்கப்பட வேண்டும். போய் ஒப்பமிடுதல், மாவட்டச் செயலகத்துக்கு அல்லது முன்னாள் போராளிகளைக் கண்காணிப்பதற்கும் அவர்களது நலன்களைப் பராமரிப்பதற்கும் அதிகாரமுடைய சிவில் அதிகாரிக்கு பாரம் கொடுக்கப்படலாம்.


7.4 முன்னாள் போராளிகள் என அடையாளப்படுத்தப்படும் இந்தப் பெரிய குழுவினுள் அடங்கும் இலகுவில் பாதிப்படையக் கூடிய குழுக்கள் விசேட கவனத்துக்குரியவை. இவை முன்னாள் குழந்தைப் போராளிகள், பெண் போராளிகள் மற்றும் ஊனமுற்ற போராளிகள் என்போரை உள்ளடக்கும். கல்வியை மீளத் தொடர்தல் மற்றும் அல்லது தொழிற்பயிற்சி என்பன இவர்களுக்கு அவசியமாகும். அதே வேளை அதே சமூகத்தைச் சேர்ந்த பிற இளைஞர்களுக்கும் இத்தகைய வசதிகள் கிடைப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஏனைய இளம் பெண்களுக்கு வழங்கப்படும் உதவிகள் போல் முன்னாள் பெண் போராளிகளுக்கும் வழங்கப்படுவதை உறுதி செய்யப்பட வேண்டும். ஊனமுற்ற முன்னாள் போராளிகளின் நிலைமை ஏனைய உடல் ஊனமுற்றவர்களின் நிலைமையோடு இணைந்ததாக பார்க்கப்பட வேண்டும்.

அந்த வகையில் மருத்துவப் பராமரிப்பு இயலாமை நிலையை மீள் பரிசீலித்தல் உடற் சிகிச்சை பராமரிப்பாளர்களுக்காக உதவி, ஊனமுற்றோருக்கான கல்வி மற்றும் வாழ்வாதாரத் திறன்கள் அவர்களது பாதுகாப்பு பற்றிய கண்காணிப்பு என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

7.5 நிலஉரிமைகள் திட்டமிட்ட அடிப்படையில் மறுக்கப்பட்ட சமூகத்தினருக்கு அரசுபரிகாரம் வழங்க வேண்டும். அரச காணிப் பகிர்ந்தளிப்புத் திட்டத்துக்கு உட்படாத மலையகத் தமிழர்களும் தாழ்த்தப்பட்ட சாதியினரும் தங்கள் பாரம்பரிய வனங்களிலும் பிற பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களிலும் வரலாற்று ரீதியான தங்கள் கூட்டுரிமை மறுக்கப்பட்ட ஆதிவாசிகளும் இதில் அடங்குவர்.

7.6 சிறுபான்மைச் சமூகங்களைப் பாதிக்கின்ற பிரச்சினைகளையும் வேறு பிரச்சினைகளையும் கவனிப்பதற்காக சம்பந்தப்பட்ட சகலரின் ஆலோசனையுடன் சிறுபான்மையினர் உரிமைகள் ஆணைக்குழு ஒன்றை ஏற்படுத்துமாறு கலந்தாலோசனைச்செயலணிபரிந்துரைக்கின்றது. இந்த ஆணைக்குழு சிவில் சமூகத்திடம் இருந்து பெறப்பட்டு அரசியல் யாப்புப் பேரவையினால் பரிந்துரை செய்யப்படும் பெயர்ப்பட்டியலிலிருந்து ஜனாதிபதியினால் நியமிக்கப்பட வேண்டும் என கலந்தாலோசனைச் செயலணி பரிந்துரைக்கின்றது. இந்த ஆணைக்குழு தேவையான சட்டத்திருத்தங்களுக்கான ஆலோசனைகளுடன் நாட்டில் சிறுபான்மையினரின் நிலைமை பற்றிப் நாடாளுமன்றத்துக்கு ஆண்டறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

(முற்றும்)



# வாசகர் திருமுகம்

## எமது தலைவிதிக்கு எப்போது மாற்றம் கிடைக்கும்?

கடந்த வாரத்தில் ஒரு மாலை நேரம் யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறைக்குச் செல்லும் மினிபஸ் ஒன்றில் ஏறி அமர்ந்து கொண்டேன். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் அடங்கிய பாரமான பையொன்று என்னிடம் இருந்ததால் மினிபஸ்ஸின் முன்புறத்தில் இருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டேன். இறங்க வேண்டிய இடத்தில் இறங்கும் போது சிரமம் ஏற்படுமென்பதை அனுபவத்தில் தெரிந்து கொண்டதன் காரணமாகவே முன்புற இருக்கையில் அமர்ந்து கொண்டேன். சிறிது நேரத்தில் பஸ்ஸினுள் ஏறிய நடத்துநர் என்னைப் பின் ஆசனத்தில் அமருமாறு கூறினார். நான் எவ்வளவோ கூறியும் அவர் கேட்கவில்லை. வேறு வழியின்றிப் பின் ஆசனத்தில் அமர்ந்து கொண்டேன். பஸ்ஸினுள் கூட்டம் அலைமோதியது. பயணிகள் நெருக்கியடித்தவாறு நின்று கொண்டிருந்தனர். இடைவழியில் கீழே இறங்க வேண்டியவர்கள் சிரமங்களை எதிர் கொண்டனர். சுன்னாகத்தில் பஸ் நின்றபோது மேலும் ஒரு கூட்டம் உள்ளே ஏறியது. நான் சுன்னாகம் வந்தவுடன் முன்னுக்குச் செல்ல முயற்சி செய்தேன். ஆனால் முடியவில்லை. இருந்தபோதிலும் ஒருவாறு இடித்துத் தள்ளிக் கொண்டு அரைவாசித் தூரம் வந்துவிட்டேன். நான் இறங்க வேண்டிய இடமும் நெருங்கியது. உடனே இறங்கவேண்டிய இடத்தின் பெயரை உரத்த குரலில் கூறினேன். நடத்துநர் அதனைக் கேட்டதும் சன்னதம் ஆடினார். இவ்வளவு நேரமும் என்ன செய்தீர்கள்? சுன்னாகம் வந்தவுடன் முன்னுக்கு வந்திருக்கலாம் தானே? உங்களுக்காக பஸ்ஸைத் தாமதிக்க முடியாது, இறக்காமல் சென்று விடுவோம் என வாயில் வந்தவாறு ஏதேதோ கூறினார். நான் இதையயல்லாம் சகித்துக் கொண்டு நின்றவர்களுடன் முட்டி மோதியவாறு கீழே இறங்கினேன். ஆனால் நடத்துநரின் அர்ச்சனை தொடர்ந்து கொண்டிருந்தது. பணத்தையும் கொடுத்து ஏச்சையும் கேட்டு அவலத்தை எதிர் கொள்வது எமது தலை விதியா? இது எப்போது தான் மாறப்போகிறது.

*க.தர்மலிங்கம்*
*மல்லாகம்*

## வரலாற்றில் இன்றைய தினம்

1993 - டில்லியில் விமான விபத்து. அமைச்சர் உடன் பதவி விலகினார். பயணிகள் 152 பேரும் விமானப் பணியாளர்களும் தப்பினர்.

1994 - யாழில் இதுவரை 33 பேர் கொலரா நோயால் சாவு. ஆயிரத்து 39 பேர் பாதிப்பு.

1995 - போர் இடை நிறுத்தம். இராணுவ அதிகாரிகள் மகிழ்ச்சி - கொழும்புச் செய்திகளை மேற்கோள் காட்டி புலிகளின் குரல் தெரிவிப்பு.

1997 - சரணடைவதற்கு வீரப்பன் நிபந்தனை: கர்நாடக அரசு நிராகரிப்பு.

2000 - கொழும்பில் தேடுதல்; 129 தமிழர்கள் கைது.

2004 - விளைபொருள்களுக்கான கழிவுகள் பொதுச் சந்தையில் நிர்ணயம் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை.

2008 - ரங்காவுக்கு புலி முத்திரையா? ஊடக அமைப்புக்கள் கடும் கண்டனம்.

## வலிமை

### உருவம் பார்த்து வருவது அல்ல.

ஒரு சிங்கம் படுத்திருந்தது. அதன் அருகே சென்ற கொசு ஒன்று சிங்கத்தின் மூக்கின் மேல் அமர்ந்தது.

தன் ஊசியைச் சுருக்கென இறக்கியது. மெல்லிய வலியில் விழித்தெழுந்த சிங்கம் கொசுவை அடிக்க கை ஓங்கியது. ஓடித் தப்பித்த கொசு, மீண்டும் மீண்டும் சிங்கத்தைத் தொந்தரவு செய்தது.

பொறுமையின் உச்சக் கட்டத்துக்குப் போய் விட்ட சிங்கம் சவால் விட்டது.

"கொசுவே உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன்!"

கொசு சிரித்தது; "நீ காட்டுக்கே ராஜாவாக இருக்கலாம்! பெரிய உருவமாக இருக்கலாம். ஆனால், என்னை உன்னால் ஒன்றும் செய்துவிட முடியாது!"

அது போலவே நடந்தது. கொசுவைக் கொல்ல சிங்கம் எடுத்த அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. வெற்றி வீரனாய் பறந்தது கொசு.

பறந்த கொசு அடுத்த நொடியில்... அருகே இருந்த சிலந்தி வலையிடம் சிக்கிக் கொண்டது. சிக்கிய வேகத்தில் அதிலிருந்து விடுபட அனைத்து முயற்சிகளும் எடுத்தது. அந்தோ பரிதாபம்! விடுபட முடியவில்லை. சிக்கியது சிக்கியது தான்!

அருகே வந்த சிலந்தி ஒன்று அதைக் கொட்ட ஆரம்பித்தது. சிலந்தி போட்ட மயக்க ஊசியில் மயங்கிப் போன நிலையில் கொசு நினைத்துக் கொண்டது.

'பெரிய சிங்கத்திடம் வெற்றி பெற்ற நான் சிறிய சிலந்தியிடம் தோற்றுப் போனேனே!"





## பழமொழிகள்

- ஆடத் தெரியாதவள் மேடை பிழையென்றாளாம்.
- குரங்குப் புண்ணுக்கு அருமை காட்டினால் கொப்பிலே தாவுமாம்.
- போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து.
- தனிமரம் தோப்பாகாது.
- ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
- தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாணென்ன முழமென்ன.
- முடக் குதிரைக்குச் சறுக்கினது சாட்டு.
- இளகின இரும்பைக் கண்டால் கொல்லன் ஓங்கி அடிப்பான்.
- தெய்வம் வரங் கொடுத்தாலும் பூசாரி விடாதது போல்.
- வேலிக்கு ஓணான் சாட்சி.
- கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்?
- காவோலை விழக் குருத் தோலை சிரிப்பது போல்.

### சூரிய ஒளி போல

எவருடன் பழகினாலும் அந்தஸ்து பார்க்காமல் ஒரே மாதிரியான அணுகுமுறையுடன் உள்ளன்பு குறையாமல் பழகுங்கள்.

*- ரீடர்ஸ் டைஜஸ்ட்*



**முருகப் பெருமானின் அறுபடை வீடுகள்**
பழனி, பழமுதிர்சோலை, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், சுவாமிமலை, திருத்தணி

**நான்கு வேதங்கள்**
இருக்கு வேதம், யசுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம்

**நவ ரத்தினங்கள்**
வைரம், மரகதம், மாணிக்கம், முத்து, நீலம், புஷ்பராகம், வைடூரியம், பவளம், கோமேதகம்

**எட்டுத் திசைகள்**
கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, வடகிழக்கு, தென்மேற்கு, தென்கிழக்கு, வட மேற்கு

**எட்டுத் திசைகளுக்குரிய அதிபதிகள் (அஷ்டதிக்குப்பாலகர்கள்)**
இந்திரன், அக்கினி, யமன், நிருத்தி, வாரணன், வாயு, குபேரன், ஈசானன்



## மழையே!... மழையே!

மழையே மழையே வருவாய்
குழைகள் நனைக்க வருவாய்
குழிகள் தோண்டி நாமும்
குசும்பாய் விளையாட வருவாய்! (மழையே..)

மண்ணை நனைத்துக் கூழாக்கி
சின்ன விரல்களில் அப்பிட
குழைத்து மண்ணைப் பிசைந்திட
மழையே மழையே வருவாய்! (மழையே..)


மழைநீர் குழியுள் நிறைய
மகிழ்வோம் எமது கிணறென்று
கவட்டைக் கம்புகள் இரண்டு
கிணறு அருகில் ஊன்றுவோம். (மழையே..)

அகலக்கையோடு சிலுவையாக்கும் தடி
அமரும் துலாவாகக் கவட்டையில்
கயிறு வாளி தேடியிணைத்து
கிணறு இறைப்போம் மகிழ்வாய் (மழையே..)

## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# ஆங்கில புத்தாண்டுப் பலன் 2017



## தனுசு

உங்கள் ராசிக்கு 2ஆம் வீட்டில் சந்திரன் நிற்கும் போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் பண வரவுக்கு குறைவிருக்காது. எதையும் திட்டமிட்டுச் செய்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். தடைப்பட்ட திருமணம், கிரகப்பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகள் இனி ஏற்பாடாகும். முகவாட்டத்துடன் இருந்த நீங்கள் இனி உற்சாகமாகக் காணப்படுவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதைக் கூடும். வருடம் பிறக்கும்போது உங்களின் பூர்வ புண்யாதிபதியான செவ்வாய் பகவான் 3ஆம் வீட்டில் வலுவாக நிற்பதால் மனோபலம் கூடும். புது முடிவுகள் எடுப்பீர்கள். குழந்தை பாக்கியம் கிடைக்கும். பிள்ளைகள் உங்கள் அருமையைப் புரிந்துக் கொள்வார்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். பூர்வீக சொத்தில் உங்களுக்கு சேர வேண்டிய பங்கை கேட்டு வாங்குவீர்கள். குடும்பத்தினருடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

ஆனால் ஏப்ரல் 11ஆம் திகதி முதல் மே 26ஆம் திகதி வரை செவ்வாயை சனி பார்க்கயிருப்பதால் இந்தக் காலக்கட்டங்களில் பிள்ளைகளிடம் கோபத்தைக் காட்டாதீர்கள். அவர்களை அன்பால் அரவணைத்துப் போவது நல்லது. கர்ப்பிணிப் பெண்களுக்கு பயணங்களின்போதும், படிகளில் ஏறும்போதும் கவனம் தேவை. பூர்வீக சொத்துப் பிரச்சினை வெடிக்கும். சகோதரங்கள் உங்களை தவறாகப் புரிந்துக் கொள்வார்கள். ஜூலை 26ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டில் கேது நிற்பதால் புதிய முயற்சிகள் யாவும் பலிதமாகும். விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வாழ்க்கையின் சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள். வேற்றுமதத்தவர்களால் ஆதாயமடைவீர்கள். இளைய சகோதர வகையில் நன்மை உண்டாகும். கோயில் விசேடங்களை முன்னின்று நடத்துவீர்கள். ராசிக்கு 9 ஆம் வீட்டில் ராகு நிற்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார், அல்லாதவர்கள் யார் என்பதைப் புரிந்துக் கொள்வதில் குழப்பம் வரும். ஜூலை 27ஆம் திகதி முதல் வருடம் முடியும் வரை கேது உங்கள் ராசிக்கு 2ஆம் வீட்டிலும், ராகு 8ஆம் வீட்டிலும் அமர்வதால் குடும்பத்தில் சலசலப்புகள் வரும். கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். பழைய கசப்பான சம்பவங்களையெல்லாம் அவ்வப்போது நினைவுக்கூர்ந்து விவாதிக்க வேண்டாம். அதன் மூலமாக பிரச்சினைகள் வரக்கூடும். எந்த வேலையாக இருந்தாலும், நீங்களே நேரடியாகச் சென்று முடிப்பது நல்லது. பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்க வேண்டாம். கண்ணை பரிசோதித்துக் கொள்ளுங்கள். பல் வலி, காது வலி, கணுக்கால் வலி வந்து விலகும். வாகனத்தை நிதானமாக இயக்குங்கள். சிறுசிறு விபத்துகள் ஏற்படக் கூடும்.

புத்தாண்டின் தொடக்கம் முதல் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை உங்களின் ராசிநாதனும் - சுகாதிபதியு மான குரு உங்கள் ராசிக்கு 10ஆம் வீட்டில் நிற்பதால் அடுக்கடுக்கான வேலைகளால் அவதிக்குள்ளாவீர்கள். மறைமுக அவமானம் வந்து நீங்கும். கௌரவம் குறைந்துவிடுமோ என்ற அச்சம் வரும். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்துப் போகும். தர்மசங்கடமான சூழ்நிலையை சமாளிக்க வேண்டி வரும். ஆனால், செப்ரெம்பர் 2ஆம் திகதி முதல் வருடம் முடியும் வரை குரு 11ஆம் வீடான லாபஸ்தானத்தில் அமர்வதால் எங்குச் சென்றாலும் நல்ல வரவேற்பை பெற்றுத் தருவார். கல்வியியலாளர்களின் நட்பால் தெளிவடைவீர்கள். புது சொத்து வாங்குவீர்கள். அடுத்தடுத்து சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக்கட்டும். கணவன்-மனைவிக்குள் எலியும், பூனையுமாக இருந்த நிலை மாறி, நகமும் சதையுமாக இணைவீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் உயர் கல்வி, உத்தியோகம் அமையும். பெரிய பதவிக்கு உங்களுடைய பெயர் பரிந்துரை செய்யப்படும். தாயாரின் உடல் நிலை சீராகும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். அடகு வைத்திருந்த பத்திரம், பழைய கடனையெல்லாம் தீர்க்க புது வழி பிறக்கும். விலகிச் சென்ற உறவினர்களெல்லாம் வலிய வந்து உறவாடுவார்கள். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். இந்தாண்டு முழுக்க சனி 12இல் மறைந்து விரையச் சனியாகவும், வருடத்தின் இறுதியில் டிசெம்பர் 15ஆம் திகதி முதல் உங்கள் ராசிக்குள் அமர்ந்து ஜென்மச் சனியாகவும் வருவதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும், அத்தியாவசியச் செலவுகள் இருந்துக் கொண்டேயிருக்கும். வேலைச்சுமை அதிகரிக்கும். கனவுத் தொல்லையால் தூக்கம் குறையும். சிலர் எப்படியெல்லாம் போலித்தனமாக பழகி காரியத்தை சாதித்துக் கொள்கிறார்கள் என்பதை நினைத்து வருத்தப்படுவீர்கள். உள்மனது சிலவற்றை அறிவுறுத்தியும்-அதைச் சரியாக பின்பற்றாமல் விட்டு விட்டோமோ என்றெல்லாம் ஆதங்கப் படுவீர்கள். கூடாப்பழக்கங்களிலிருந்து முழுமையாக வெளியேறுவது நல்லது. நல்லவர்களுடன் பழகுங்கள். வாயு பதார்த் தங்கள், கார உணவுகளை தவிர்க்கப்பாருங்கள். குருதியில் ஹீமோகுளோபின் குறையக் கூடும். யாரையும் பகைத்துக் கொள்ள வேண் டாம்.

உத்தியோகத்தில் செப்ரெம்பர் மாதம் முதல் அலுவலகத்தில் நிம்மதி உண்டாகும். சக ஊழியர்களும் முக்கியத்துவம் தர தொடங்குவார்கள். மூத்த அதிகாரிகளும் உங்களின் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். புது அதிகாரியால் உற்சாகமடைவீர்கள். மே, ஜூன், ஒக்ரோபர் மாதங்களில் புது வாய்ப்புகள், பொறுப்புகள் தேடி வரும். பதவி உயர்வையும் எதிர்பார்க்கலாம். பழைய சம்பளப் பாக்கியும் கைக்கு வரும். உங்கள் மீது தொடுக்கப்பட்ட அவதூறு வழக்கிலிருந்து விடுபடுவீர்கள். கன்னிப்பெண்களுக்கு, செப்ரெம்பர் மாதம் முதல் சோர்ந்திருந்த நீங்கள் சுறுசுறுப்பாவீர்கள். காதலும் இனிக்கும், கல்வியும் இனிக்கும். விலையுயர்ந்த ஆடை அணிகலன்கள் சேரும். எதிர்பார்த்த நிறுவனத்தில் வேலையும் கிடைக்கும். வருட பிற்பகுதியில் திருமணம் முடியும்.

மாணவர்கள் ஏழரைச் சனி தொடர்வதால் விளையாட்டுத்தனத்தை குறைத்து வகுப்பறையில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். ஆசிரியர்கள் பக்கபலமாக இருப்பார்கள். உயர்கல்வியில் வெற்றியுண்டு.

இந்த 2017 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கொஞ்சம் ஏற்ற-இறக்கங்களை தந்தாலும் தொடர் முயற்சியாலும், தன்னம்பிக்கையாலும் சாதிக்க வைக்கும்.


### நாளை

மார்கழி-26
செவ்வாய்க்கிழமை -10.01.2017
திதி: திரயோதசி மு.இ.10.12
நட்சத்திரம்: மிருகசீருடம் பி.இ.05.18
ராகுகாலம்:03.33-05.03 வரை
சுபநேரம்:11.03-12.33 வரை
பிரதோச விரதம்
இரவு நடேசர் ஆர்த்திராபிசேகம்

# நீர் இல்லாமல் வாடுவது பயிர்களல்ல விவசாயிகளின் எதிர்காலமும் தான்

நீரின்றி அமையாது உலகு என்பார்கள். நீரை நம்பி விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பாக வர்ணிக்கப்படுகின்றனர். நெல் வயகளுக்கும், தோட்டச் செய்கைகளுக்கும், நீரே முக்கியமாகின்றது. மழையை நம்பி விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் வடக்கு விவசாயிகள் தற்போது அடிவயிற்றில் நெருப்பை கட்டிய நிலையில் உள்ளனர். யாழ்ப்பாணம், உட்பட வன்னிப் பெருநிலப்பரப்பிலும் காலபோக நெற்பயிர் செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் எப்போது என்ன நடக்கும் என்று புரியாது தவிர்க்கின்றனர். இதற்கு கால போகத்தில் பெய்ய வேண்டிய மழை பொய்த்து விட்டதுதான் முக்கிய காரணமாகும். “உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றவர் எல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்” என்று வள்ளுவர் கூறியுள்ளார். ஆனால், வடக்கு விவசாயிகளுடைய நிலை தற்போது மாறிவிட்டது. தங்களுடைய பயிரை பாதுகாக்க வேண்டும் என்ற ஒரே நோக்கம் அவர்களது மனங்களில் உள்ளது. மழை பொய்த்து விட்டதால் விவசாயிகள் குளங்கள், கிணறுகளின் இருந்து வாய்க்கால்கள் மூலமும், குளாய்கள் மூலமும் தமது பயிர்களுக்கு நீரை பாய்ச்சுகின்றனர். சிலர் அதிக தூரமான பகுதியில் உள்ள குளத்தில் இருந்துகூட தமது வயலுக்கு நீரைப் பாய்ச்சுகின்றனர். நாடு முழுவதும் வறட்சியான கால நிலை நிலவும்போது நீர் நிலைகளில் இருந்து பெருமளவு நீரை வயல்களுக்கு இறைப்பது பொருத்தமாகாது என விவசாய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இந்த வருடம் அரிசிக்கு அதிகளவான தட்டுபாடு ஏற்படும். அத்தோடு பெருமளவு கடன்களைப் பெற்று விதைப்பு மேற்கொள்ளப்பட்டது. வயல்கள் கருகிப் போனால் அதிகளவான நட்டத்தை எதிர்கொள்ள வேண்டும் என விவசாயிகள் கூறுகின்றனர். மழை பொய்த்து விட்டதால் நீரா, நெல்லா என்ற போட்டி இப்போது ஆரம்பித்துள்ளது. ஆரம்பத்தில் சாவகச்சேரிப் பகுதியை சேர்ந்த விவசாயிகள் தங்களுடைய வயல்களுக்கு நீர் பாய்ச்சினார்கள், பின்னர் கிளிநொச்சி விவசாயிகள் அதிக தூரமான இடங்களில் உள்ள நீர் நிலைகளில் இருந்து நீரை கொண்டுவந்தார்கள். தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளும், இதனைத் தொடர்ந்து தற்போது வடக்கு மாகாணம் முழுவதும் உள்ள வயல்களுக்கு அதிகளவான விவசாயிகள் நீர் நிலைகளில் இருந்தே நீர் பாய்ச்சி வருகின்றனர். யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். சாவக்சேரி நெல் வயல்களில் நெல்களுக்கு தண்ணீர் இறைக்கப்படுகின்றது. சுற்றிலும் வறட்சி யான காலநிலை நிலவும் போது, இவ்வாறு தண் ணீர் இறைப்பது சாத்திய மில்லாத செயலாகும்.




வாழைச் செய்கைக்கு அதிகளவிலான தண்ணீர் தேவையாகவுள்ளது. இதனால் தண்ணீரைச் சிக்கனப் படுத்தி சொட்டு நீர்ப் பாசனம், தூவல் நீர்ப்பாசனம் முறையில் தண்ணீரைப் பாவிக்க வேண்டும். வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்களை நடுகை செய்யும்போது, வரிசையில் கிளிசறியா நடப்பட்டு பயிர்செய்வதன் மூலம் பயனடையலாம். தென்னை, மா போன்ற பயிர்ச்செய்கைகளுக்கு பானை நீர்ப்பாசன முறையில் தண்ணீரை இறைப்பதன் மூலமும் சிக்கனப் படுத்தலாம் என விவசாய திணைக்கள அதிகாரிகளால் அறிவுரைகள் வழங்கப்பட்டது. ஆனாலும் விவசாயிகள் தங்களுடைய நெல் வயல்களை பாதுகாக்கும் முயற்சியை கைவிடவில்லை என்பதை அவதானிக்க முடிகின்றது. எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் அறிவுரைகளைக் கூறுவதைவிட வறட்சி காலத்தில் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு ஏற்ற நட்ட ஈடுகளை அல்லது அவர்கள் பெற்ற கடன்களுக்கு ஏதாவது மாற்று நடவடிக்கை எடுப்பார்களானால் நீர் இன்றியமையாதது என்ற பதமும், நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்பதையும் விவசாயிகளால் ஏற்றுக்கொள்ள முடியும். பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு ஓரளவு ஆறுதல் கொடுக்கும்.

**கந்தபேரின்பம்**

# வாசிப்பு மனிதனை முழுமையாக்கும்



கல்வி என்பது அலங்காரப் பொருளல்ல. கல்வி வாழ்க்கையின் உயிர்நாடி. தோண்டத் தோண்ட கிணறு மேலும் மேலும் ஊறும். கற்கக் கற்கவே அறிவு வளரும். அதனாற்றான் செந்நாப்புலவர் வள்ளுவர்
"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு" என்றார்
தொடர்ந்து கற்றாலே அறிவு மேம்படும் நல்லவற்றைக் கற்று மக்கள் நலம் பெறவேண்டும். கல்வியின் நோக்கம் சமநிலை ஆளுமை கொண்ட சமுதாயத்தை உருவாக்குவதாகவும் வாழ்க்கையோடிசைந்ததாகவும் நல்ல விழுமியங்களையும் சமுதாய மேம்பாட்டையும் மையமாகக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

கல்விவெறும் ஏட்டுக்கல்வியாக இயந்திரமயமானதாக பொறுபேறுகளையும் பட்டங்களையும் குறிக்கோளாகக் கொண்டதாக இருத்தல் கூடாது. உள்ளதை உள்ளபடி உணரும் பரந்துபட்ட அறிவும் எந்த நிலையிலும் எவருக்கும் அடிமைப்படாத உறுதிப்பாடும் அறிவின் மேம்பட்ட நிலைப்பாடும் நாளுக்குநாள் புதுமைவளர்க்கும் நாகரிக மேம்பாடும் சமூக இசைவாக்கமும் கொண்டதாகக் கல்வி இருத்தல் அவசியம். வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கும் வாழ்விப்பதற்கும் கல்வி உதவ வேண்டும்.

இப்படியான சிறந்த கல்வி நிலையை மாணவர்கள் அடைவதற்கு பாடப்புத்தகங்கள் மட்டும் ஏற்புடையனவாகாது பாடப்புத்தகங்களோடு மட்டும் உள்ள மாணவர்கள் வெறும் புத்தகப்பூச்சிகள் என்றே கற்றோரால் அறிமுகப்படுத்தப்படுவர். இவர்களிடம் அடுத்தவரைப் பற்றி நற்சிந் தனைகளைப் பற்றி உலக அறிவு சிந்தனை என்பவை இல்லாதிருப்பதையே காணக் கூடியதாக இருக்கும். பாடப் புத்தகங்கள் பாடம் சம்பந்தமான அறிவை மட்டுமே மாணவர்களுக்குக் கொடுக்கிறது.

பரந்து பட்ட கல்வி பயன்பாடும் தெளிந்த சிந்தனையும் சமுதாய ஒருங்கிசைவும் நேர்த்தி கொண்ட அறிவும் உலகின் நிலைப்பாட்டை உள்ளது உள்ளபடி அறிவதற்கும் மாணவர்களுக்கு வாசிப்பு மிகவும் அவசியமானது. உயர் கல்வி மேம்பாட்டுக்கு பொது அறிவு, பொது உளச்சார்பு, தர்க்கம், நுண்ணறிவு போன்றவை இன்றியமையாதவையாகும். வகுப்பறைக் கல்வி மட்டும் இவற்றுக்கு ஏற்புடையதாகாது தினசரிபத்திரிகைகளில் உலகின் நிலை, அரசியல், தற்காலச்சிந்தனை, கல்வி, நவயுகம், சமுதாய நிலைப்பாடு, சமுதாயச் சீர்கேடுகள் பற்றிப் பெரியோர் எழுதுகிறார் பேசுகிறார்கள் என்றால் அந்தத் திறமை அவர்களுடைய வாசிப்புத் திறனாலும் சிறந்த கிரகிப்பின் மூலமுமே அவர்களுக்குக் கிடைத்த கொடையன்றி வேறல்ல. சிறந்த மேன்மையான சமுதாய ஒருங்கிசைவுக்கு நல்ல அறிவு, பண்பாட்டு மேன்மைக்கு வழிகாட்டக் கூடிய பரந்துபட்ட அறிவைப் பெறுவதற்கும் பத்திரிகைகள் சஞ்சிகைகள், அறிவுசார் நூல்கள் மாணவர் அறிவு வளர்ச்சிக்கும் உளப்பண்பாட்டுக்கும் புதுமை வளர்க்கும் நோக்கத்துக்கும் இன்றியமையாதவை.

"கண்டது கற்கப் பண்டிதனாவான் என்பது தவறான கூற்றாகும். கண்டகுப்பைகளை எல்லாம் வாசித்தால் எவரும் பண்டிதனாக முடியாது, நல்லவற்றைக் கற்றாலே பண்டிதராக முடியும்" வாழ்வின் அடிப்படைக்கு எது நல்லதோ அதைத் தெரிந்து கற்றாலே ஒருவன் நல்ல அறிஞனாகமுடியும். நல்லவற்றைக்கற்க வேண்டும் கற்றதன்படி ஒழுகுதல் வேண்டும் அல்லது "பிடித்தது பிள்ளையார் வந்ததோ குரங்கு" என்ற நிலையே ஏற்படும். பாலோடு நீர் கலந்து. வைத்தால் பாலை மட்டுமே அருந்துமாம் அன்னப்பறவை என்று கர்ணபரம்பரையான கதை ஒன்று உண்டு அதைப்போல எதை வாசித்தாலும் நல்லவற்றையே மனதில் கொள்ளவேண்டும்.

"கண்டது கற்கப் பண்டிதனாவான் என்பது தவறான கூற்றாகும். கண்டகுப்பைகளை எல்லாம் வாசித்தால் எவரும் பண்டிதனாக முடியாது நல்லவற்றைக் கற்றாலே பண்டிதராக முடியும்" வாழ்வின் அடிப்படைக்கு எது நல்லதோ அதைத் தெரிந்துகற்றாலே ஒருவன் நல்ல அறிஞனாகமுடியும். நல்லவற்றைக்கற்க வேண்டும் கற்றதன்படி ஒழுகுதல் வேண்டும் அல்லது "பிடித்தது பிள்ளையார் வந்ததோ குரங்கு" என்ற நிலையே ஏற்படும். பாலோடு நீர் கலந்து. வைத்தால் பாலை மட்டுமே அருந்துமாம் அன்னப்பறவை என்று கர்ணபரம்பரையான கதை ஒன்று உண்டு. அதைப்போல எதை வாசித்தாலும் நல்லவற்றையே மனதில் கொள்ளவேண்டும்.

மனித மேம்பாட்டுக்கு நல்ல சிந்தனைகளுக்கு சிறந்த கல்வியில் மேம்பட்ட சமுதாயம் உருவாகவேண்டின் வாசிப்பு மிகவும் அவசியமானது. அதனாற்றான் வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும் என்று கற்றுணர்ந்த பெரியோர்கூறினர். சிறந்தநூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவும் சிறந்த ஆசான்களே. ஆனால் தற்போது மாணவரினதும் மக்களினதும் மனதில் சீர்கெட்ட சிந்தனைகளை வளர்க்கும் திரைப்படங்கள் தரங் கெட்டசஞ்சிகைகள் அறிவுப்பசியைவிட்டு உடற்பசியைத் தூண்டக்கூடியனவே ஏராளமாக வெளி வருகின்றன. இவைபணத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டவை. மாணவரைப் பற்றியோ பொதுமக்களைப் பற்றியோ மனித விழுமியங்களைப் பற்றியோ சமுதாய முன்னேற்றத்தைப் பற்றியோ சிறிதும் சிந்திப்பதில்லை.

இப்படியான வெளியீடுகளினால் சமுதாயச் சீர்குலைவும் மனித நேயமற்ற தன்மையுமே சமகாலத்தில் நாம் காணக்கூடியதாக இருக்கிறது. நாட்டில் நடைபெறும் அதிமோசமான குற்றச் செயல்களை வைத்தே நாம் உணர்ந்து கொள்ளமுடியும்.
"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பார்கள்.

ஆகவே மாணவர்கள் சிறந்த நூல்கள் பத்திரிகைகளை வாசித்து நற்பயன் பெற வேண்டும் நாட்டுக்கும் வீட்டுக்கும் நல்லவனாக வாழ வேண்டின் நல்லவற்றை வாசிக்கவேண்டும் நூல்கள் தான் வாழ்வின் படிக்கல்" என்பதை ஒவ்வொரு மாணவரும் உணர்தல் வேண்டும். ஏனெனில் மாண வர்களே எதிர்கால விஞ்ஞானிகள் அறிவுசால் பெருமக்கள் என்பதைச் சிந்தியுங்கள்.

*உயிர் மெய்பட வேண்டின் சிவாசி*
*உன் அறிவு மேம்பட வேண்டின் வாசி*
*உயிருக்கு உறுதுணை வாசிப்பு*
*உள்ளத்து உயர்வு தரும் வாசிப்பு*

*அரசியல் பற்றித் தெரியவேண்டின் வாசி*
*அகிலத்தைப்பற்றிப் புரிய வேண்டின் வாசி*
*பொது அறிவு வளர வேண்டின் வாசி*
*வாசிப்பதையே எப்போதும் சு வாசி*

*"எப்போதும் நல்ல காற்றைச் சுவாசி*
*எப்போதும் வாழ் உண்மை பேசி*
*எந்நாளும் நன்நூல்களை வாசி*
*என்றும் வாசிப்பதையே சுவாசி"*
*வாசியாதவன் மனிதில் அறியாமை என்னும் தூசி படியும்*
"READING MAKES A MAN FULL'"

**கட்டுரையாளர்:**
**ஓய்வு நிலை உதவிக் கல்விப்பணிப்பாளர், மன்னார்.**

இறந்து போன ஒரு வயதான பெண்ணின் பாடையைத் தூக்கும் போது லேசாக சுவரில் மோதி விட்டார்கள். ஒரு சிறிய முனகலுடன் அவர் பிழைத்து எழுந்து விட்டார். அதற்குப் பின் அந்த அம்மையார் பத்து வருடங்கள் உயிர் வாழ்ந்தார். இம்முறை அவர் உயிர் பிரிந்து பாடை கட்டும் போது கணவர் சொன்னார்....
"சுவரில அடிக்காம போங்கப்பா"




# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நண்பரின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிடலாம். லாபம் சுமாராக இருக்கும். உடல்நிலை சீராக இருக்கும். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**இடபம்:** அவமதித்தவர் அன்பு பாராட்டும் சூழல் உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புக் கிடைக்கும். லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**மிதுனம்:** பொது இடத்தில் எவருடனும் விவாதிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். ஒவ்வாத உணவைத் தவிர்ப்பது நல்லது. பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**கடகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** வாழ்வில் ஆடம்பர வசதி பெருகும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். தாராள அளவில் பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.

**கன்னி:** நண்பர்களின் ஆலோசனையால் வளர்ச்சி காண்பீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி நிறைவேறும். லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**துலாம்:** குடும்பப் பிரச்சினைக்கு சுமூக தீர்வு கிடைக்கும். தொழில் வியாபாரம் சீர்பெற விடாமுயற்சி அவசியம். லாபம் சுமார். பணியாளர்கள் பணிச் சுமையைத் திறம்பட சமாளிப்பர்.

**விருச்சிகம்:** அன்றாடப் பணியில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். கடினமான பணியும் எளிதாக நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். லாபம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்குப் பதவி உயர்வு கிடைக்கும்.

**தனுசு:** மனதில் நம்பிக்கை ஒளி பிரகாசிக்கும். முக்கிய செயல்கள் எளிதாக நிறைவேறும். தொழில் வியாபாரம் செழித்து புதிய சாதனை படைப்பீர்கள். வருமானம் அதிகரிக்கும். வீடு வாகனத்தில் புதிய மாற்றம் செய்வீர்கள்.

**மகரம்:** ஆர்வத்துடன் புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்களுக்கு, வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது.

**கும்பம்:** உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில் வியாபாரம் மந்தகதியில் இருக்கும். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவுகளில் சிக்கனம் பின்பற்றுவர். ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வது நல்லது.

**மீனம்:** குடும்பத்தில் இருந்த குழப்பமான சூழ்நிலை சரியாகும். தொழில் வியாபாரத்தில் லாபம் படிப்படியாக உயரும். வாகனப்பயணத்தின் மூலம் இனிய அனுபவம் காண்பீர்கள். நண்பர்களுடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | | 8 | | 7 | | | 3 |
| | 6 | | | | | 1 | 2 | 7 |
| 3 | | 7 | 5 | | | | 8 | |
| | | 4 | 9 | | | | | 2 |
| | 3 | | | | | | 1 | |
| 1 | | | | | 5 | 3 | | |
| | 8 | | | | 4 | 2 | | |
| | | 6 | | | | | 3 | |
| 9 | | | 1 | | 8 | | 6 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 4 | 6 | 9 | 8 | 2 | 1 | 5 |
| 9 | 6 | 1 | 3 | 2 | 5 | 8 | 7 | 4 |
| 2 | 8 | 5 | 7 | 1 | 4 | 9 | 6 | 3 |
| 6 | 5 | 3 | 9 | 4 | 1 | 7 | 8 | 2 |
| 8 | 4 | 9 | 2 | 3 | 7 | 6 | 5 | 1 |
| 7 | 1 | 2 | 8 | 5 | 6 | 3 | 4 | 9 |
| 5 | 3 | 6 | 4 | 8 | 9 | 1 | 2 | 7 |
| 1 | 2 | 7 | 5 | 6 | 3 | 4 | 9 | 8 |
| 4 | 9 | 8 | 1 | 7 | 2 | 5 | 3 | 6 |

சுடோக்கு
ஒரு எண் விளை யாட்டு.
தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாகப்பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




நீதிபதி: வேணும் எண்டுதானே உன் மனைவியைக் கிணத்தில தள்ளினாய்...



பாலா: இல்ல எசமான்... வேணாம் எண்டு தான் தள்ளினேன்...

ஒரு நாள்! எமக்குப் பிடிச்ச மாதிரி வாழ்க்கை மாறும்



இப்படியே தான் 2016 முழுவதும் காத்திருந்தோம்



புதுக் கலண்டர வாங்கினதும்




உடனே ராசி பலன் பாக்கிற புத்தி எப்போ நம்மை விட்டுப் போகுமோ... ச்சேய்

# பெயர் மாற்றத்துடன் உருவாகும் இம்சை அரசன் 23ஆம் புலிகேசி




ஷங்கர் தயாரிப்பில் சிம்புதேவன் இயக்கிய படம் இம்சை அரசன் 23ஆம் புலிகேசி. இந்தப் படத்தில் வடிவேலு ஹீரோவாக இரு வேடம் ஏற்று நகைச் சுவையில் கலக்கியிருந்தார். இந்த நிலையில் இந்தப் படத்தின் இரண்டாம் பாகம் விரைவில் தயாராகவுள்ளது.
இந்தப் பாகத்தில் புலிகேசியின் அடுத்த வாரிசாக 24ஆம் புலி கேசி நடிக்கிறாராம். எனவே இதன் தலைப்பு இம்சை அரசன் 24ஆம் புலிகேசி என மாற்றப்பட உள்ளதாகவும் தகவல்கள் வந்துள்ளதாக சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



## தலை முடி அலங்காரம்

1 தலைக்கு ஜெல் இட்டுக் கொள்க
2,3 பின்னர் பக்க உச்சியை பிரித்து, பக்க வாட்டில் தலை முடியை வாரிக் கொள்க
4,5 பின்னர் நடுத்தலை முடியை சற்று மேவி இழுக்கவும் அலங்காரம் தயார்.

## இது புதுசு





தென்னை ஈர்க்குகளால் உருவான சுவர் மாட்டிகள் அறிமுகமாகியுள்ளன. தென்னை ஈர்க்குகளை வரிசைப்படுத்தி அடுக்கி, தகடுபோன்று உருவாக்கி ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவை 150 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# முருங்கைப் பூ சூப்



**தேவையான பொருள்கள்**

முருங்கை பூ - 2 கைப்பிடி
புளி - சிறிய எலுமிச்சை பழ அளவு
தக்காளி - 1
ரசப்பொடி - 2 தேக்கரண்டி
வேகவைத்த துவரம் பருப்பு - 2 தேக்கரண்டி
உப்பு - சுவைக்கு

**தாளிக்க**

மிளகு - 1 தேக்கரண்டி
சீரகம் - அரை தேக்கரண்டி
நெய் - 1 தேக்கரண்டி

## செய்முறை

தக்காளியை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். துவரம் பருப்பை சிறிதளவு நீரில் கரைத்துக் கொள்ளவும். மிளகை கொரகொரப்பாக பொடித்து கொள்ளவும். புளியை சிறிதளவு நீரில் கரைத்து கொள்ளவும்.


ஒரு பாத்திரத்தில் கரைத்த புளி கரைசல், முருங்கை பூ, தக்காளி, ரசப்பொடி கலந்து நன்கு அடுப்பில் வைத்து கொதிக்க வையுங்கள். அடுத்து அதில் பருப்பு கரைசல், உப்பு சேர்த்து 5 நிமிடம் கொதிக்க வைக்கவும். சட்டியில் அடுப்பில் வைத்து சூடானதும் தாளிக்க வேண்டிய பொருள்களையும் சேர்த்து தாளித்து சூப்பில் சேருங்கள்.

சிறந்த முருங்கை பூ சூப் தயார்.

இதை சோற்றுடன் கலந்து சாப்பிடலாம். சூப்பாகவும் பருகலாம். சளி, இருமலுக்கு சுவையான மருந்து இது.

# ஞாபக மறதியால் அவதியா? இந்த உணவுகளை சாப்பிடுங்க





படிக்கும் மாணவர்கள் முதல் பரபரப்பான தொழிலதிபர்கள் வரை பலருக்கும் உள்ள பொதுவான பிரச்சினை, ஞாபக மறதி. அது தங்களுக்கு எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதை சம்பந்தப்பட்டவர்களை கேட்டால் தெரியும்.

ஞாபகமறதி பிரச்சினையைத் தீர்க்க உணவுகளும் கைகொடுக்கும் என்கிறார்கள் உணவியல் நிபுணர்கள். குறிப்பிட்ட உணவுகளை தொடர்ந்து உட்கொண்டு வருவதன் மூலம் ஞாபக சக்தியை அதிகரிக்கலாம், மூளையைச் சுறுசுறுப்பாக வைத்துக்கொள்ளலாம்.

**பச்சை இலைக் காய்கறிகள்:**
கீரைகள், காய்கறிகள் போன்றவற்றை அதிகம் சாப்பிட்டால், ஞாபக சக்தி அதிகரிக்கும் என்பது பலரும் அறிந்த உண்மை. அதிலும் குறிப்பாக, பசளிக் கீரை, லெட்டூஸ், முட்டைகோவா, பூக்கோவா ஆகியவற்றில் ஞாபக சக்தியை அதிகரிக்கும் வேதிப்பொருள்களுடன், விற்றமின்களும் கனிமச் சத்துக்களும் அதிகம் இருப்ப தால் உடலுக்கு ஆரோக்கியம் அளிக்கும்.

**பழங்கள்:**
பழங்கள் புதிய ரத்தச் செல்கள் உருவாகவும் மூளை சுறுசுறுப்பாக இருக்கவும் உதவுகின்றன. தங்களுக்கு ஞாபகசக்தி குறைவாக இருப்பதாக எண்ணுபவர்கள் ஒரேஞ், கொய்யா, திராட்சை, அப்பிள், வாழைப்பழம், செர்ரி பழம், மூலாம் பழம், பேரீச்சம்பழம், அன்னாசி போன்ற பழங்களை உண்ணலாம்.

**மீன்:**
மீனில் ஒமேகா 3 கொழுப்பு அமிலம் அதிகம் உள்ளது. இந்தக் கொழுப்பு அமிலம், இதயத்துக்கு மட்டுமின்றி, மூளைக்கும் நன்மை பயக்கும். ஏனெனில் மூளையின் செயற்பாட்டுக்கு ஒமேகா 3 கொழுப்பு அமிலம் மிகவும் முக்கியமானது. இது மூளைச் செல்களின் இயக்கத்தை அதிகரிக்கும். அதிலும் குறிப்பாக சூரை, நெத்தலி, மத்தி போன்ற மீன்கள் சிறந்தவை.

**பால் பொருள்கள்:**
பால் பொருள்களில் கல்சியம் அதிகம் உள்ளது. எனவே இவற்றைச் சாப்பிட்டால் மூளைச் செல்கள் நன்கு செயல்படும். முக்கியமாக தயிரில் உள்ள அமினோ அசிட் ஞாபக சக்தியை அதிகரிக்கும் பொருளாகும்.

**வெள்ளைப் பூண்டு:**
வெள்ளைப் பூண்டு மனதை அமைதிப்படுத்தித் தன்னம்பிக்கையை உருவாக்குகிறது. மூளையின் செல்கள் வேகமாக அழிந்து போய்விடாமல் பாதுகாப்பதில் வெள்ளைப் பூண்டுக்கு நிகர் வேறு இல்லை. எனவே ஞாபகசக்தி பாதிக்கப்படாமல் இருக்க உணவில் வெள்ளைப் பூண்டை அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

(தொடரும்)

# வளி மண்டலத் தூய்மை.!

## மழைக்காடுகளின் பங்கு



நில நடுக்கோட்டுப் பகுதியில் காணப்படும் மழைக்காடுகளின் மொத்த பரப்பளவு 17.8 மில்லியன் சதுர கிலோ மீற்றர்கள் எனச் சொல்லப்படுகிறது. இவற்றில் 4.2 மில்லியன் சதுர கிலோமீற்றர் நீளமான உலர்ந்த காடுகளும் அடக்கம். உலகில் உள்ள மழைக்காடுகளில் 50 சதவீதம் தென் அமெரிக்காவிலும்-30 சதவீதம் ஆபிரிக்காவிலும் மீதமுள்ளவை. தெற்கு ஆசியா உள்ளடங்கலான பல பிரதேசங்களில் பரந்து காணப்படுகின்றது. பெற்றோல், டீசல் போன்ற படிம எரிபொருள்களால் வெளிவிடப்படுகின்ற காபனீரொக்சைட்டின் அளவில் ஏறத்தாழ ஐந்திலொரு பங்கை இந்த மழைக்காடுகள் உறிஞ்சி எடுத்துக் கொள்வதாக தாவரவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

### காபனீர் ஒக்சைட்

நாடுகளுக்கிடையேயான புவிவெப்பமாதல் தொடர்பான குழுவின் அறிக்கைகள் ஒவ்வோர் ஆண்டும் 32 பில்லியன் தொன்கள் காபனீரொக்சைட் வெளிவிடப்படுவதான தகவலை வெளிப்படுத்துவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவற்றில் 15 பில்லியன் தொன்கள் காபனீரொக்சைட் வளிமண்டலத்திலேயே தங்கியிருந்து பூமியை வெப்பமடையச் செய்கிறது. ஏனையவை குறிப்பாக 17 பில்லியன் தொன் அளவுடைய காபனீரொட்சைட் எங்கே போகிறது என்பது குறித்தான ஆய்வுகள் இப்போது நிகழ்த்தப்பட்டுள்ளது. ஏறத்தாழ பாதியளவு காபனீரொட்சைட் கடல் நீரில் கரைந்து போவதாகக் கூறப்படுகிறது. 4.8 பில்லியன் தொன் அளவிலான காபனீரொட்சைட்டை இந்த மழைக்காடுகள் உண்பதாக விஞ்ஞானிகள் சொல்கின்றனர்.

ஆபிரிக்காவின் மழைக்காடுகளில் மட்டும் இந்த அளவு என்பது 1.2 பில்லியன் தொன்களாக காணப்படுகிறது. ஆபிரிக்காவின் ஒவ்வொரு ஹெக்ரேயர் காடுகளும் 0.6 தொன் காபனீரொக்சைட்டை உண்பதான தகவல் சொல்லப்படுகிறது. ஆபிரிக்காவின் மழைக்காடுகளைப் பற்றியதான நாற்பது ஆண்டு கால ஆய்வுகள் இடம்பெற்றுள்ளது. அந்த முடிவுகள்கூட வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

### ஆய்வுச் செயல் நிலை

ஆபிரிக்க காடுகள் மட்டுமின்றி தென் அமெரிக்க மற்றும் ஆசிய காடுகளிலும் பரந்து கிடக்கும் 2 இலட்சத்து 50 ஆயிரம் மரங்களில் இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டது. வளிமண்டல காபனீரொக்சைட்டை உறிஞ்சுவதன் மூலம், இயற்கையானது எமக்கு மிகப் பெரியமானியத்தை அளிக்கிறது, உதவிக்கரத்தை நீட்டுகிறது-என்கிறார் லீட்ஸ் பல்கலைக் கழகத்தின் ராயல் சொசைட்டி ஆய்வாளர் மருத்துவர் சைமன் லூயிஸ்.

வளிமண்டலத்தில் உள்ள அதிகப்படியான காபனீரொட்சைட் மரங்களுக்கு உரமாக அமைவதால் மரங்களின் அளவு பெருக்கிறது. இந்தநிலையிலே மரங்கள் தொடர்ந்தும் அளவில் பெருத்துக் கொண்டே சொல்லாது என்பதும்-இந்த மழைக்காடுகளை மட்டுமே தொடர்ந்து நம்பிக் கொண்டிருக்க முடியாது என்பதும்-ஆய்வாளர்களின் எச்சரிக்கையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் துடைத்தெடுக்கப்படும் 5 பில்லியன் தொன் காபனீரொக்சைட்டில் உள்ள காபனின் மதிப்பு என்பது 13 பில்லியன் பவுண்ட் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகளின் முக்கியத்தை இந்த தொகையில் இருந்தே தெரிந்து கொள்ள முடிகிறது. வளிமண்டலத்தை மாசுபடுத்துவதில் முன்னணியில் உள்ள நாடுகள் வன வளத்தை பாதுகாக்க முயற்சிக்கும் நாடுகளுக்கு கொடுக்க வேண்டிய நட்ட ஈட்டுத்தொகையை இந்த ஆய்வுகள் முடிவு செய்வதாகச் சொல்லப்படுகிறது. மழைக்காடுகளின் மரங்கள் பெரிதாகிக்கொண்டே போகும் தன்மையின் அடிப்படையிலேயே புவிவெப்ப மண்டல காடுகளின் பல்லுயிர்களுக்கிடையே ஏற்படும் மாற்றங்களையும் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

### ஆய்வு முடிவு

ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் காடுகளில் சேமிக்கப்படும் காபனின் அளவைக் கண்டறிய லைபீரியாவில் இருந்து தன்சானியா வரையில் உள்ள ஆபிரிக்க நாடுகளுக்குரித்தான 79 அடர்ந்த வனப்பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்தப் பகுதிகளில் இருந்த 70 ஆயிரம் மரங்களின் சுற்றளவுகள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பதிவு செய்யப்பட்டன. மரங்களின் உயரம், அடர்த்தி ஆகியவற்றைக் கொண்டு மேற்படி 79 வனப்பகுதிகளிலும் குறிப்பிட்ட கால இடைவெளியில் எவ்வளவு காபன் சேமிக்கப்பட்டுள்ளது என்பதான தரவு கணக்கிடப்பட்டது. ஆபிரிக்காவின் மழைக்காடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையிலே வளிமண்டலத்தில் இருந்து ஒவ்வோர் ஆண்டும் 1.2 பில்லியன் தொன் காபனீரொக்சைட் இந்த வனப்பகுதிகளில் உறிஞ்சி எடுக்கப்படுவது கணக்கிடப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### விசுவநாதர் சிவசுப்பிரமணியம்

(மணியண்ணை -புத்தூர்)



தோற்றம் 28.10.1936 மறைவு 06.01.2017

சிவன் கோயிலடி, புத்தூர் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விசுவநாதர் சிவசுப்பிரமணியம் (மணியம்) 06.01.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவநாதர் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் ஈஸ்வரதேவியின் அன்புக் கணவரும் கிருபாகரன்(UK), யோகேஸ்வரன் (முன்னாள் ப.நோ.கூ. சங்கம், அச்சுவேலி), காலஞ்சென்ற சசிகரன், கேதீஸ்வரன்(பாப்பன் - வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், கோப்பாய்), சசிகலா (UK), ஹேமகலா (முகாமைத்துவ உதவியாளர் பிரதேசசபை தலைமைக் காரியாலயம், புத்தூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இன்பவேணி (ராதா -UK), குமாரதேவி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) வெண்ணிலா (கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க.பா), சுதாகரன் (UK), ஞானபாஸ்கரன் (விவசாயப் போதனாசிரியர் தர்மக்கேணி) ஆகியோரின் மாமனாரும் டிக்சன் (UK), கோகுல்(UK), தனுஸ்(UK) , கிசானி (யா/ஸ்கந்தவரோதய கல்லூரி), கிரிசன் (யா/ தெல்லிப்பழை, மகாஜனக்கல்லூரி), செந்தூரி (யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஹரீசன் (யா/ இந்துக் கல்லூரி), நீரஜா(UK),ஜனுயன் (UK), யாதவி(UK), சங்கவி, சாம்பவி ஆகியோரின் பேரனும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற இராசமணி, காலஞ்சென்ற தணிகாசலம், நவரத்தினராசா (ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பலாலி) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2017) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு கிந்துசிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன் கோயிலடி,**
**புத்தூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(J/ 7460)(12.18.)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி அனுசியா முரளிதரன்

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இருபாலை றோட், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அனுசியா முரளிதரன் நேற்று (08.01.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கனகலிங்கம் - சந்திரா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகரட்ணம் மற்றும் கனகமணி தம்பதியரின் அன்பு மருமகளும், முரளிதரனின் அன்பு மனைவியும், விஷ்ணுதரன், செந்தூரன், பிரதீஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இருபாலை றோட்,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### கந்தையா தங்கராசா

(இளைப்பாறிய தபாலதிபர்)



தோற்றம் :17.02.1951
மறைவு: 07.01.2017

யாழ். சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், மிருசுவில் உசன், கனடா ஆகிய இடங்களை வதிவிட மாகவும் கொண்ட கந்தையா தங்கராசா 07.01.2017 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் சண்முகம் (மாணிக்கம்)- பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் கௌரியின் அன்புக் கணவரும் சுதர்னியா, கௌசல்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இராசதுரை (பொலிஸ் உத்தியோகத்தர்), சிவசம்பு (குமாரசாமி - லிகிதர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இராமநாதன் (டென்மார்க்) ஆகியோரின் சகோதரரும் சுதன் குணநாயகம், சுதன் பொன்னப்பா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான புஷ்பராஜா (உசன்), ராஜநாயகம் மற்றும் புவனேஸ்வரி (ஆஸ்திரேலியா),புஸ்பராணி (கனடா), தயானந்தசோதி (கனடா), சிவதாஸ் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் ஷியாரா, ஜசான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(C 216)
(12,17,18,)



### ஜெகநாதப்பிள்ளை மண்டலேஸ்வரன்

(ஸ்தாபகர்- மண்டலேஸ்வரன் இசைக் குழு)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஜெகநாதப்பிள்ளை மண்டலேஸ்வரன் 07.01.2017 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஜெகநாதப்பிள்ளை -தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதிகளின் மருமகனும் கேதீஸ்வரன் (லண்டன்), லலிதா, அபர்ணா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அனுசா (லண்டன்), பிரதீப்குமார் ,ரமணா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் அஜய்ராம், அக்சயராம், சதுசிகா, அனோசிகா, வளர்சிகன், அஜந், அஸ்மிரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2017) திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(J/7394)
(12,17,18,)

077 505 1728

## வீடு, காணி விற்பனைக்கு

மல்லாகம் நீதிமன்ற வீதியில் அமைந்துள்ள 10 பரப்புக்காணி யுடன் வீடு விற்பனைக்கு உண்டு. பகுதியாகப் பிரித்துக்கொடுக்கப்படும்.

077 494 1750, 021 224 1604

## கணிதம்(தமிழ்/ஆங்கிலம்)

தரம் 9,10,11 வகுப்புகளுக்கான கணிதம் (தமிழ்/ஆங்கிலம்) மொழிமூலம் பல வருட கற்பித்தல் அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். 077 618 4524

## வேலையாள்கள் தேவை

எமது கட்டட வேலை ஒப்பந்த நிறுவனத்திற்கு

- மேசன்
- ஒட்டுவேலை

• சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

Tel :- 077 203 3790, 021 221 7980

## COMPUTER COURSES

Diploma in Computerized **Accounting** — Tally, Quick Book, Accpack, M.Y.O.B

Diploma in **Video Editing** — Premiere Pro CS6, Adobe Photoshop, Adobe AfterEffet, Pinnacle Studio.

Diploma in **AutoCAD** — 2D & 3D Modeling

Advanced Diploma in **Hardware & Networking**

C++, JAVA

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Hotline:0777 173517

DMI COMPUTER EDUCATION

முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி. இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (TVEC REG.NO P25/0056)

## DMI COMPUTER EDUCATION

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel:.021 222 4403 |
| நெல்லியடி | M. M. V வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக). Tel:.021 226 2470 |
| சாவகச்சேரி | No.174, கண்டி வீதி, சாவகச்சேரி.(HNB அருகில்) Tel:.021 227 0775 |
| சுன்னாகம் | No.130, K.K.S வீதி, சுன்னாகம்.(NSB அருகில்) Tel:.021 224 1970 |
| கிளிநொச்சி | No.19 ஆனந்தபுரம், (மத்திய கல்லூரி முன்பாக) Tel:.021 228 5655 |

## அறை வாடகைக்கு தேவை

யாழ். நகரை அண்மித்த பகுதியில் அறை Or அனெக்ஸ் உடனடியாக தேவை.
தொடர்பு : 075 541 3113

## மா.ச. உ.

பில், கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் அம்பாறையில் கலந்துரை யாடல் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன் போது எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், இந்த விடயம் தொடர்பில் தொடர்ச்சியாக பேசப்பட வேண்டும். கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்களுடனும் ஆராய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக கூட்டமைப்பின் மாகாண சபை நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் அம்பாறையில் நடத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டது. (வ-5)


## அண்ணாமலைப் பல்கலைக்கழக பண்ணிசைப் பேராசிரியரின் திருவாசக அர்ச்சனை



**அமரர் திருமதி சரஸ்வதி ஆறுமுகம்**
(இளைப்பாறிய உபஅதிபர், ஆசிரியர் - யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை)

அவர்களின் நினைவுப் பிரார்த்தனை வைபவத்தில் **12.01.2017 வியாழக்கிழமை காலை 9.30 முதல் 11.15 வரை நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில்**

**பேராசிரியர் தேவார இசைமணி குமாரவயலூர் திருஞான பாலசந்திரன்** அவர்களின் திருவாசக இசை அர்ச்சனை இடம்பெறும்.



அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

246. 4/A கோயில் வீதி, நல்லூர்.
குடும்பத்தவர்கள்.

## நினைவஞ்சலி


**முதலாம் ஆண்டு** — **நான்காம் ஆண்டு**

தோற்றம் 05 . 05 . 1944 — மறைவு 22 . 12 . 2015



அமரர் **புஸ்பராணி பாலகிருஷ்ணன்**

தோற்றம் 26 . 07 . 1941 — மறைவு 14 . 02 . 2013



அமரர் **சதாசிவம் பாலகிருஷ்ணன்**

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய எங்கள் அன்புத்தெய்வங்களே !
என்றும் உங்கள் நினைவுகளுடன் நாம் வாழ்கின்றோம்.

உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் விளாத்தியடி.
குடும்பத்தினர்.

## வழிகாட்டி

VALIKAADDY

நடாத்தும்

## உயர்தர பாடத் தெரிவு வழிகாட்டி



பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளின்
உயர்கல்வித் திட்டமிடலை
சரியாக மேற்கொள்ளுங்கள்.

மாணவர்களே! உங்களுக்கு வழிகாட்ட கல்வியின் சிகரங்கள் காத்திருக்கிறார்கள்

O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு

**அனுமதி இலவசம்**

இடம் :- யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம் :- 12.01.2017 வியாழக்கிழமை
நேரம் :- காலை 8.30 மணி

முற்பதிவு அவசியம் 071 8 691 691

உயர்தர வழிகாட்டி கருத்தரங்கை வழிநடாத்த உள்ள வளவாளர்கள் விபரம்

| | | |
|---|---|---|
| உயிரியல் பிரிவு<br>Biology stream<br>Dr.P.Sevvel<br>Senior lecturer<br>Department of botany.<br>University of Jaffna. | வணிகவியல் பிரிவு<br>Commerce stream<br>Prof.T.Velnampy<br>Dean,<br>Faculty of Business Management,<br>University Of Jaffna | |
| தொழில்நுட்ப பிரிவு<br>Technology stream<br>Prof.K.Kandasamy (Rtd.)<br>Senior Professor of Physics,<br>Consultant,<br>Faculty of Technology,<br>University Of Jaffna | கலைப் பிரிவு<br>Arts stream<br>N.Piratheeparajah<br>Senior Lecturer<br>Department of Geography<br>University of Jaffna | கணித பிரிவு<br>Maths stream<br>Prof.P.Ravirajan<br>Professor in Physics<br>Former Head of Physics<br>Director-Staff Development Centre,<br>University of Jaffna |

"கல்வியே வாழ்க்கையின் வழிகாட்டி"

பிரதான அனுசரணை: Mobitel We Care. Always. — இணை அனுசரணை: BCAS CAMPUS Jaffna Campus — ஊடக அனுசரணை: உதயன்

## ICBT CAMPUS JAFFNA

www.icbt.lk



# CIVIL ENGINEERING
# QUANTITY SURVEYING

Qualified Lecture Panel | Library, Laborator.. Modern Lecture Hall facilities
Cafeteria | Recreation Area | Student Frien.. Environment | Easy Payment
Accredited by:
Cardiff Metropolitan University, UK | Europ.. Quality Assurance Agency | NAARIC

580,Hospital Rd., Jaffn.. | Tel: -0214 777 888
0770 746 553 | 0769 289 784

Galaxy Star

வெற்றி வாரம் 125 | திகதி 08.01.2017

நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்

10 | 13, 26, 48, 57

அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,163,065 /-

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றி வாரம் | | 
|---|---|---|
| 08.01.2017 | 2080 | ஊதா |

துலாம்
வெற்றி இலக்கங்கள்
21 23 35 55

செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 5, 778, 290/=

2017.01.10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

வெற்றி இலக்கங்கள்
30 | 68
டபிள் சான்ஸ்

1919

## பதவிவெற்றிடங்கள்

**A/L 2016 எழுதியவர்களுக்கு இது ஓர் அரிய சந்தர்ப்பம்**

**Dynamic Organization இலங்கையின் புதிய கிளைகளுக்கான உடனடி வேலைவாய்ப்புக்கள்**

*கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களிலும்
கிழக்கு மாகாணத்தவர்களும், மலையகத்தவர்களும் விரும்பத்தக்கது.
*தங்குமிட வசதியுண்டு
*வயதெல்லை 18 - 30
*அடிப்படைத் தகைமை O/L

**தொடர்புகளுக்கு: 077 664 4442, 076 678 1042**

## மரண அறிவித்தல்



### இராசகோபால் சாரூஜன்

யாழ்ப்பாணம், சீனியர்லேன், கலட்டியில் வசிக்கும் இராசகோபால் சாரூஜன் காலமாகிவிட்டார்.

இறுதிச் சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**சீனியர் லேன், கலட்டி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.**

தகவல் :
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
21
❖
09
❖
1943



**மறைவு**
08
❖
01
❖
2017

## திருமதி சரஸ்வதி செல்வேந்திரா

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், வல்வெட்டித்துறையைப் பூர்வீகமாகவும், கொழும்பு தெகிவளை வண்டவற் பிளேசை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி செல்வேந்திரா அவர்கள் 08.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலை இறைவனடி சேர்ந்துள்ளார். அன்னார் பட்டயக் கணக்காளர் திரு சபாரத்தினம் செல்வேந்திரா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் சுப்பிரமணியம் வள்ளியம்மாள் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சபாரத்தினம், பாக்கியரத்தினம் தம்பதிகளின் மருமகளும், குமரகுரு, காலஞ்சென்ற ஞானேஸ்வரி கிருஷ்ணா, காலஞ்சென்ற கமலம், திருமதி சுந்தரி நிர்த்தனசுந்தரம், Dr. இராமலிங்கம் ஆகியோரின் சகோதரியும், திருமதி வசந்தாதேவி குமரகுரு, Dr. தெய்வேந்திரா, திருமதி இரத்தினாதேவி அழகேந்திரன், Dr. மகேந்திரா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை 09.01.2017 கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, மாலை 4 மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**ச.செல்வேந்திரா**
**39, 4/4, வண்டவற் பிளேஸ், தெகிவளை**
**தொலைபேசி 0779810987, ராம்குமார் 0777560902**

# கணினி வழி ஊடுருவல்களை குறைத்து மதிப்பிட்டுவிட்டேன்

## ஒபாமா தெரிவிப்பு



வொஷிங்டன், ஜன. 9

கணினி வழி ஊடுருவல்கள் மற்றும் தவறான தகவல்கள் ஜனநாயகத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தைக் தான் குறைத்து மதிப்பிட்டுவிட்டதாக அமெரிக்க அதிபர் ஒபாமா கருத்து தெரிவித்துள்ளார்.

ஆனால், ரஷ்யா அதிபர் புடினை குறைவாக மதிப்பிடவில்லை என்றும், அதிபர் தேர்தல் பரப்புரையில் ரஷ்யாவின் தலையீடு இருந்தது என்றும் அமெரிக்க தொலைக் காட்சியான ஏபிசிக்கு அளித்த பேட்டியில் ஒபாமா கூறியுள்ளார்.

தேர்தலில் டொனால்ட் டிரம்ப் வெற்றிபெற ஒரு விரிவான கணினி வழி ஊடுருவல்களுக்கு அதிபர் புடின் தானாகவே உத்தரவு பிறப்பித்ததாக அமெரிக்கப் புலனாய்வு அமைப்பு முன்னர் குற்றஞ்சாட்டியிருந்தது.

புலனாய்வு அமைப்பின் கண்டுபிடிப்புகளை டிரம்ப் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும், இதுகுறித்து அவர் நடவடிக்கை எடுக்கலாம் என்றும் பணியாளர்களுக்கானதலைமைப்பொறுப்பை ஏற்கவுள்ள ரெய்ன்ஸ் பிரீபஸ் கருத்து தெரிவித்துள்ளார். (வ)

## மரண அறிவித்தல்கள்

### பாக்கியநாதர் கென்றி யோசப் இம்மானுவேல்

**(கடல் சார் எந்திரவியலாளர்)**



யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை, கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும், கொய்யாத் தோட்டம், அபுதாபி, வவுனியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா என அன்பாக அழைக்கப்படும் பாக்கியநாதர் கென்றி யோசப் இம்மானுவேல் நேற்று (08.01.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான யோசப் பாக்கியநாதர் - திரேசம்மா தம்பதியரின் செல்வ மகனும் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை - சொர்ணம் தம்பதியரின் மருமகனும் பேணடேற் தங்கராணியின் அன்புக்கணவரும் சமந்தா (வவுனியா), ஷாறா (கனடா), யசி (முத்தா - கனடா), அலன் (எலக்ரீசியன் - வவுனியா) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜெறி (வவுனியா), வருணன் (கனடா), ஷாலினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் அனோறா (வவுனியா), ஏட்றியன் (வவுனியா), கெத்துறா (கனடா), கியாறா (கனடா), அற்றாறா (கனடா), ஏய்ரன் (கனடா) ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான கிறிஸ்ரி யோசப், அன்ரனி, தோமஸ், மேரிபுறுனோ ரஞ்சினி மற்றும் ஜேம்ஸ் (கனடா), யசிந்தா (இந்தியா), மரிஸ்ரெலா றோகினி (யாழ்ப்பாணம்), மரியமலர் (வவுனியா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 3 ஆம் ஒழுங்கை, திருநாவற்குளம் வவுனியாவில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டு நல்லடக்க ஆராதனைகளுக்காக இன்று (09.01.2017 ) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு இறம்பைக்குளம் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 605 2233

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## திருமதி முத்தம்மா முருகேசு



மலர்வு: 28.07.1936
உதிர்வு: 05.01.2017

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தம்மா முருகேசு 05.01.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான கந்தையா - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும் தவநாயகம் (கனடா), செல்வ நாயகம் (கனடா), காலஞ்சென்ற யோகநாயகி, யுகநாயகி (ஆஸ்திரேலியா), ராசநாயகம் (கனடா), ஜீவநாயகி (கனடா), குணநாயகம் (கனடா), விஜயநாயகம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ராசதுரை,பாக்கியம், கனகலெட்சுமி, காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சித்திராவதி (கனடா), வதனி (கனடா), மனோகர் (ஆஸ்திரேலியா), ஜெயராணி(கனடா), ராஜமோகன் (கனடா), சிறாணி (கனடா), சுலக்ஸ்சனா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் தங்கவேலு (இலங்கை), காலஞ்சென்ற நடராஜா, மல்லிகாதேவி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் கோபிகா (கனடா), கபில்தேவ் (கனடா), கோபிகாந் (கனடா), துசியா (கனடா), துசானி (கனடா), கோபிகா (ஆஸ்திரேலியா), சோபிதா (ஆஸ்திரேலியா), கோபிநாத் (ஆஸ்திரேலியா), தனுயா(கனடா), சுகிதா (கனடா), சயன் (கனடா), கரிஸ் (கனடா), சர்வின் (கனடா), மிதுசா (கனடா), நிசாந் (கனடா), ரமணன் (கனடா), ஷாலினி (இலங்கை), அனுஷ்யா(கனடா), குமணன் (கனடா), சந்திரிக்கா (கனடா), வசந்தி (கனடா),ரஞ்சன் (கனடா), டினோன் (கனடா), டினோசி (கனடா), பாபு (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லக்சியா, லக்ஸ்சனா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2017) திங்கட்கிழமை கனடாவில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சகோதரர்கள், பெறாமக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**077 405 9313**

(C 216)
(12,17,18,)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், பௌத்த மதத்துக்குத் தற்போதைய அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை தொடர்ந்தும் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வருகின்ற நிலையில், வடக்கு-கிழக்கில், தமிழர் தாயக தேசத்தில் நடைபெற்ற இந்தச் சம்பவங்கள் பல்வேறு சந்தேகங்களையும் தோற்றுவித்துள்ளன. இந்தத் தாக்குதல் சம்பவங்களின் சூத்திரதாரிகள் நேற்று முன்னிரவு வரை பொலிஸாரால் கைது செய்யப்படவில்லை.

வடக்கு மாகாணத்தின் எல்லை மாவட்டமாக முல்லைத்தீவு அமைந்துள்ளது. தமிழ் மக்களின் பூர்வீக பூமியான மணலாறு தற்போது வெலிஓயா என்று மாற்றம் செய்யப்பட்டு அங்கு பௌத்த சிங்கள மக்கள் வாழ்ந்து வருகின்றனர். வெலிஓயாவில் உள்ள புத்தர் சிலை மீது நேற்றுக் காலை கழிவு ஒயில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் யார் என்பது கண்டறியப்படவில்லை. புத்தர் சிலை உள்ள பிரதேசம், அதனைச் சுற்றியுள்ள பகுதியில் சிங்கள பௌத்த மக்கள் மாத்திரமே வாழ்ந்து வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தின் எல்லை மாவட்டமான திருகோணமலையிலும், சிங்கள பௌத்தர்கள் செறிந்து வாழும் பகுதியில் மூன்று புத்தர் சிலைகள் அடித்துத் தகர்த்து எறியப்பட்டுள்ளன. திருகோணமலை ஹொரவப் பொத்தானை முதன்மைச் சாலையிலிருந்த மூன்று புத்தர் சிலைக்ள் மீதே நேற்றுக் காலை குறித்த நேர இடைவெளியில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. வில்கம் விகாரை, மொறவெள மற்றும் திரியாய் சந்தியிலுள்ள புத்தர் சிலைகளே சேதமாக்கப்பட்டுள்ளன.

மொறவெள நகரத்திலிருந்த புத்தர் சிலையை மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இருவர் அதிகாலை 2.52 மணியளவில் உடைத்துவிட்டு, திரியாய் சந்திப் பக்கம் செல்லும் காட்சி சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது. மோட்டார் சைக்கிள் இலக்கமோ அல்லது உடைப்பவர்களையோ இனங்காண முடியாத நிலையில் அந்தக் காணொலிப் பதிவு உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-5-4-101-45)

## வீடு வாடகைக்கு

நல்லூர் கோயிலுக்கு முன்பாக 2ஆம் குறுக்குத்தெருவில் உள்ள வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.
• வர்த்தக நிறுவனாங்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு : 077 117 7533**

## வேலையாள்கள் தேவை

**மானிப்பாய் பகுதியில் அமைந்துள்ள Grand Resturant இற்கு உணவு பரிமாறுபவர், காசாளர் (Girl), Hotel சமையலில் முன் அனுபவம் உடைய வேலையாள்கள் தேவை.
இருபாலாரும் விரும்பத்தக்கது.
தொடர்பு - 076 981 9241**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
சிவபாதம் லதாநந்தினி அவர்களின் மாமனார்
**வைத்திலிங்கம்**
**கணபதிப்பிள்ளை**
அவர்கள் 27.12.2016 அன்று காலமாகி விட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஆசிரியர் வட்டம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
(J.7479)
(22.17)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
**கந்தையா**
**குமாரசாமி**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 08 . 07 . 1936 | 13 . 12 . 2016 |

கடந்த 13.12.2016 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் கந்தையா குமாரசாமி அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (10.01.2017) செவ்வாய்க்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 12.01.2017 வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசியூடாகவும் இரங்கல் செய்தி, இரங்கல் உரை, கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் அன்னாரது இறுதிக்கிரியைகளின் போதும் இறுதியாத்திரையின் போதும் கலந்து எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் எமக்கு உறுதுணையாக நின்று உதவிய உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வ நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இல.55/25, வன்னியசிங்கம் வீதி,**
**தாவடி வடக்கு, கொக்குவில்.** **குடும்பத்தினர்.**

## என்றும் நீங்காத நினைவுகளோடு 09.01.2017
## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **ஜெரோமினா**
**சுகிர்தம்**
**பெர்னான்டோ**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 14 . 01 . 1941 | 09 . 01 . 2016 |

**"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்**
**விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"**

வாழ்வின் ஊற்றாகிய தேவனே உமது மகளாகிய ஜெரோமினா சுகிர்தம் பெர்னான்டோ அவர்களின் வாழ்வில் அவரோடு இருந்து ஆதரித்துக் காத்தருளினீர் அது போல் இவ்வுலக வாழ்வைக் கடந்து உம் சந்நிதானம் வரும் உம் அடியாராகிய இவரின் ஆன்மாவை ஏற்று இரட்சித்தருளும்
- ஆமேன்

கருத்தழிந்து கலங்கவிட்டுச் சென்றனையோ -அம்மா
கதியிழந்து களையிழந்து நிர்க்கதியாகினோமே
சிரித்தமுகம் சோபையிழந்து சென்றதுவே -இப்போ
சிரிப்பிழந்து செழிப்பிழந்து கற்பூரமானோமே

அன்பை நீர் மழையாய்ப் பொழிந்தீர் - ஈற்றில்
ஆதரவின்றி அழவிட்டு சென்றதேனோ?
மனையீன்று செயலிழந்து கலங்குதம்மா - உதிர்ந்த
மலர்களாய் மழலைகள் தவிக்குதம்மா


கல்லும் மண்ணும் உடலைக்குத்த - போதுமம்மா
கல்லறையில் பொய்யுறக்கம் கொண்டது
கலங்கி நிற்கும் எமக்கு ஆறுதல் கூறிட தூக்கம்
கலைந்து எழுந்து வாருங்களம்மா


இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (09.01.2017) திங்கட்கிழமை காலை 5.45 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்கு கொண்டு மன்றாடுமாறும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் செபவழிபாட்டில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரர்களின் பிள்ளைகள்.**

# மீனினத்தை அழிக்கும் காபனீரொக்சைட்...!

**பூமியின் காற்று மண்டலத்தில் உள்ள பசுமை வாயுக்களில் ஒன்றான காபனீரொக்சைட்டின் அளவு அதிகரிப்பதால் புவிவெப்பமடைகிறது என்பதுதான் மனிதகுலத்தின் இன்றைய மிகப் பெரிய தீர்வின்றிய பிரச்சினையாகவுள்ளது. ஆபத்து மனிதனுக்கு மட்டுமல்ல நீரில் வாழும் மீனின் தலைக்குள்ளும் பிரச்சினைகள் வேர்விட்டு முளைத்திருக்கிறது**






என்பதுதான் இன்றைய கண்டுபிடிப்பு. ஸ்க்ரிப்ஸ் கடலியல் நிறுவனத்தைச் சேர்ந்த மருத்துவர் டேவிட் செக்லே என்பவர் இது பற்றிய ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

காற்று மண்டலத்தில் காபனீரொக்சைட்டின் அளவு அதிகரிக்கும்போது கடல் நீர் அதனை ஏற்றுக்கொள்கிறது. இதனால் கடல் நீரின் அமிலத்தன்மை அதிகரிக்கிறது. அமிலத்தன்மை அதிகமாக உள்ள கடல்நீரில் வாழ்கின்ற மீன்களின் உடற்கூறு மாற்றமடைந்து கொள்கிறது. மீன்களின் எலும்பு வளர்ச்சியில் இந்த மாற்றம் காணப்படுவதுதான் இன்றைய புதிதான சிக்கல் நிலைமை.


ஒரொலித்ஸ் (otoliths) என்பவை மீன்களின் செவி எலும்புகள். இவை வெங்காயம் போன்று பல அடுக்குகளைக் கொண்டவை. இந்த அடுக்குகளைக் கொண்டு மீனின் வயதைக் கணக்கிடலாம். மேலும் இந்த எலும்புகளின் உதவியால்தான் மீன்கள் தங்களுடைய உடலை புவியீர்ப்பு விசைக்கு எதிராக நிலை நிறுத்திக் கொண்டுநீந்துகிறது. அமிலத் தன்மை அதிகமாக உள்ள கடல்நீரில் வாழும் யங் வைற் சீபாஸ் (young white seabass) இன மீன்களுடைய செவி எலும்புகள் அளவுக்கு அதிகமாக பெருத்து இருப்பதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இதனால் மீன்களுக்கு நீந்துவதில் பிரச்சினை ஏற்பட வாய்ப்பிருக்கிறது. இதுபற்றியதான ஆய்வுகள் தொடர்ந்து கொண்டிருப்பதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.


ஏற்கனவே கடல் நீரின் அமிலத் தன்மை அதிகமாகிப்போனதால் பவளப்பாறைகள் அழியத் தொடங்கிவிட்டன. எண்ணெய், நிலக்கரி போன்ற எரிபொருள்களை வரன்முறையின்றி மனிதன் பயன்பாட்டினுள் எரிக்கத் தொடங்கியதால் அவனுடைய வாழ்வும் எரிந்து போகும் காலம் வெகுதொலைவில் இல்லையோ என்பதான நினைதல் ஆறறிவு ஜீவனாக எம்மைக் குடையத் தொடங்கியுள்ளது.

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## நினைவஞ்சலி

| 25ஆம் ஆண்டு | 3ஆம் ஆண்டு |
|---|---|
| தோற்றம் 25.02.1943 | தோற்றம் 23.09.1970 |
| மறைவு 09 . 02 . 1992 | மறைவு 12 . 01 . 2014 |





**முத்துத்தம்பி இரத்தினவேலு (சந்தனம்)**

**இரத்தினவேலு சிவகுமார் (பெரியதம்பி)**

**மேதினியில் நேர்மையுடன் வாழும்வகை சொல்லித் தந்தீர்!**
**துன்பத்திலும் துயரத்திலும் மீண்டுவரும் வலிமை தந்தீர்!**

பிறேம் நகைமாடம்,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.
ஆலடி வைரவர் கோயிலடி,
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

## நான்காம் வருட நினைவஞ்சலி



அமரர்
**பொன்னையா**
**மகேஸ்வரன்**
(ஓய்வுநிலை பிரதம இலிகிதர் -
இ.போ.ச. சாலை வவுனியா)

*திதி: பூர்வபக்க துவாதசி 09.01.2017*

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 11 . 05 . 1944 | 24 . 12 . 2012 |

நான்காம் ஆண்டாகியும் நாம் மறக்க முடியாத
நீங்கா நினைவுகளை நிலையாக நிறுத்திவிட்டு
நீண்ட தூரம் எமைப் பிரிந்ததேனோ!
ஆறுதல் தந்து ஆதரவு பலநல்கி
எப்போதும் எமக்கு உறுதுணையாயிருந்த
எம் குடும்பத்தின் முதல் விளக்கே - உம்
பிள்ளைகளின் உயர்வு காணாது
எங்கேதான் சென்றீரோ?

**சரசாலை தெற்கு, சாவகச்சேரி.** **சகோதரிகள், குடும்பத்தினர்.**

## இடைக்கால

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் .

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது தொடர்பில் ஆராய்வதற்காக நேற்றுக் கூடியது. எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தில், தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது. காலை 10 மணிக்கு ஆரம்பமான கூட்டம் மாலை 4 மணிக்கு முடிவடைந்தது. நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தவிர்ந்த கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் தலைவர் இரா.சம்பந்தன் சில நிமிட நேரம் உரையாற்றினார். அதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

புதிய அரசமைப்பின் மூலம் கூட்டாட்சித் தீர்வே பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். வடக்கு கிழக்கு இணைப்புத் தொடர்பில் முஸ்லிம்கள் ஆர்வமற்று இருப்பினும் அந்த முயற்சியைக் கைவிட முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் வலியுறுத்தினர். வடக்கு கிழக்கு இணைப்புக்கான மாற்று வழி தொடர்பிலும் ஆராயப்பட வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், இரா.சம்பந்தன், புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான முக்கிய விடயங்களை ஆராயும் வழி நடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை கடந்த மாதம் 10ஆம் திகதி வெளியிடப்படும் என்று எதிர்பார்த்தோம். அது ஒத்திவைக்கப்பட்டது. பெப்ரவரி மாதம் அது வெளியிடப்படும் என்று எனக்குத்தெரியப்படுத்தியுள்ளார்கள். அந்த அறிக்கை வெளிவர வேண்டும். புதிய அரசமைப்பு முயற்சிகள் விரைவாக நடைபெற வேண்டும் - என்று குறிப்பிட்டுள்ளார். (வ-5)

## தோழியை...

இராசேந்திரம் மதி (வயது- 9) என்ற சிறுமியே உயிரிழந்தார்.

முள்ளியவளை பூதன்வயல் கிராமத்தில் கடந்த திங்கட்கிழமை காலை 10 மணியளவில் இருசிறுமிகள் விளையாடிக்கொண்டிருந்தனர். தோழி மீது சிமெந்துத் தூண் சரிந்து விழப்போவதைக் கண்ட மதி, அவளைக் காப்பாற்றினாள். எனினும் மதி மீது அந்தத் தூண் விழுந்து அவள் படுகாயமடைந்தாள். உடடினடியாக முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டாள். பேச்சு மூச்சுக்கள் எதுவும் இன்றி சிறுமி சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று சிகிச்சை பயனின்றி சாவடைந்தாள். (வ-7)

## பாவனைக்கு...

பண்ணையில் உள்ள மாட்டு இறைச்சிக் கடை ஒன்றின் குளிர்சாதனப் பெட்டியில் நீண்ட நாள்களாகத் தேக்கி வைக்கப்பட்ட பாவனைக்குதவாத இறைச்சி, குடல், என்பன பொலித்தீன் பைகளில் சுற்றப்பட்டவாறு கைப்பற்றப்பட்டன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட இறைச்சியில் அநேகமானவை குளிர்சாதனப் பெட்டிகளில் மாதக்கணக்கில் இருந்தமைக்கான அடையாளம் காணப்பட்டது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

சுகாதாரப் பரிசோதகர்கள் பரிசோதிக்கச் சென்றபோது அங்குள்ளவர்கள் சத்தமிட்டு ஆக்ரோசமாக நடந்து கொண்டனர். ஆரம்பத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அவர்களின் பணியை மேற்கொள்ள இடையூறு விளைவிக்கும் வகையில் இறைச்சிக்கடை உரிமையாளர்கள் கத்தியுடன் பெரும் குழப்பம் விளைவித்து கலகத்தில் ஈடுபட்டனர். அதன் பின்னர் பொலிஸார் அங்கு சென்றதும் கத்தியை வீசிவிட்டு அமைதியாகினர்.

அதன்பின்னர் குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்த 120 கிலோகிராம் இறைச்சி மீட்கப்பட்டது. அவை மிக மோசமாகப் பழுதடைந்திருந்தமை தெரியவந்தது.

முதலில் பரிசோதிக்க எதிர்ப்புத் தெரிவித்த அவர்கள் பின்னர் அவற்றை வைத்திருந்தமை தவறுதான் என்று ஒப்புக்கொண்டனர். அதனால் அவர்கள் முன்னிலையில் மனிதபாவனைக்கு உதவாத இறைச்சி அனைத்தும் தீ வைத்து அழிக்கப்பட்டன.

நேற்றுமுன்தினமும் பண்ணையில் இறைச்சியை சீல் வைக்காது கொண்டு சென்ற குற்றச்சாட்டில் ஒருவருக்கு எதிராக பொது சுகாதார பரிசோதகர்கள் வழக்குத் தொடர்ந்தனர். சீல் வைக்கப்படாத இறைச்சி அழிக்கப்பட்டதோடு, அதனை வைத்திருந்தவர் பிணையில் விடுவிக்கப்பட்டு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. நேற்றைய சம்பவம் மிக மோசமான சம்பவமாக இருந்தமையை நிலமை உணர்த்தியது. எனினும் இந்த விடயம் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படுமா என்பது பற்றித் தெரிவிக்கப்படவில்லை.

தீவுப் பகுதிகளிலிருந்து கால்நடைகள் கடத்தப்படுகின்றமை, திருடப்படுகின்றமை தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அதற்குப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்து வருகின்றனர். அதற்குச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர். எனினும் எதுவும் உரிய முறையில் நடக்கவில்லை என்றே தீவகத்திலுள்ள மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (வ-4,101,ரி)

## அதிகாரப்...

வாக்கெடுப்புக்குரிய எந்தவொரு விடயத்துக்கும் சுதந்திரக் கட்சியின் அமைச்சர் குழு இணங்கவில்லை என்றால் அதிகாரப் பகிர்வை அக்குழு உறுதியாக எதிர்ப்பது பட்டவர்த்தனமாகத் தெரிவதாக, அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழ் மக்கள் நிராகரித்த 13ஆவது திருத்தத்திலுள்ளேயே அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் எடுத்துள்ள தீர்மானத்தை, தமிழர்கள் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள் என்றும் அரசியல் அவதானிகள் குறிப்பிட்டனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தில், கூட்டு அரசில் அங் கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச் சர்களின் கலந்துரையாடல் நடை பெற்றது.

அதிகாரப் பகிர்வு 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டும். வடக்கு – கிழக்கு மீளிணைக்கக் கூடாது. பொது வாக்கெடுப்பைக் கோரும் - அதற்கு அவசியமான எந்தச் சரத்தும் புதிய அரசமைப்பில் உள்ளீர்க்கப்படவோ நீக்கப்படவோ கூடாது. அவ்வாறான சரத்துக்கள் முன்வைக்கப்பட்டால், அதனை எதிர்க்க வேண்டும். நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றக் கூடியவற்றை மாத்திரம் ஆதரிப்பது என்று முடிவெடுத்தனர்.

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலரும் அமைச்சருமான துமிந்த திசாநாயக்க, ஜனாதிபதி தொடர்பில் தற்போதைய அரசமைப்பில் காணப்படும் ஏற்பாடுகள் தொடர வேண்டும். 2020ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் மைத்திரிபால சிறிசேனவே போட்டியிட வேண்டும் போன்ற யோசனைகளை முன்வைத்தார். ஜனாதிபதி மௌனமாக இருந்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக ளுக்கு, சுந்திரக் கட்சியின்மையக் குழு அனுமதி வழங்கும் என்று தெரியவருகின்றது. (வ-5)

## வறட்சி...

நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சரும், பதில் முதலமைச்சருமான பொ.ஐங்கரநேசன் தலைமையில் இன்று பி.ப. 3 மணிக்கு முதலமைச்சரின் அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. வடக்கு மாகாணத்தில் பருவ மழை பொய்த்துப் போயுள்ளது. நெற்பயிர்கள் கருகி அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் 864 ஏக்கர் நிலத்தில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் நூறு வீதம் அழிவடைந்துள்ளது. 5 ஆயிரத்து 587 ஏக்கரில் விதைக்கப்பட்டிருந்த 75 வீத பயிர்கள் அழிவடைந்து விட்டதாக மாகாண விவசாய அமைச்சுத் தகவல்கள் குறிப்பிட்டிருந்தன. நெல் அழிவினால் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் பாதிப்பு, அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக இன்றைய கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது.

வடக்கின் 5 மாவட்டங்களையும் சேர்ந்த விவசாயத்துடன் தொடர்புடைய திணைக்களங்கள், கமநல சேவைகள் ஆணையாளர்கள், மாவட்டச் செயலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-5-10)

## வேறு...

உருவாக்க முயற்சியில் நம்பிக்கை இருக்கின்றதோ இல்லையோ, வழி நடத்தல் குழுவில் தொடர வேண்டும் என்று பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர். வேறு வழி எதுவும் இல்லாததால், வழி நடத்தல் குழுவில் இறுதி வரை தொடர வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

'புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி கடினமானதுதான். கைவிட முடியாது. இருப்பினும் நாம் அதனைத் தொடர்வோம்' என்று இரா. சம்பந்தன் இதன் போது குறிப்பிட்டார்.

அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் பன்னாட்டுச் சமூகத்துடன், குறிப்பாக இந்தியாவுடன் பேச்சு நடத்த வேண்டும் என்ற கோரிக்கை நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டது. இதற்குப் பதிலளித்துப் பேசிய இரா.சம்பந்தன், அந்த முயற்சிகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். இதனை மேற்கொள்ளும் போது சிங்கள மக்களுக்கு எங்கள் மீது சந்தேகம் வராதவாறு நடந்து கொள்ள வேண்டும். பக்குவமாக அதைக் கையாள வேண்டும் என்று தெரிவித்தார்.

கடந்த 6 ஆம் திகதி நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிக் கூட்டத்திலும், வழிநடத்தல் குழுவில் கூட்டமைப்புத் தொடர வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது. (வ-5)

## பாதாளக்...

நிற்கச் செய்யாது.

இவ்வாறு மகிந்த ஆத ரவு சிறிலங்கா பொது ஜன முன்னணியின் ஊடகப்பேச்சாளர் சன்ஜீவ எதிரிமான தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டாட்சி அரசு, பொதுச் சொத்துக்களை சீனாவுக்கு விற்பனை செய்வதற்கு எதிர்ப்பை வெளியிட்ட மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டது.

சீனாவுக்கு அரசினால் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள அந்த 15 ஆயிரம் ஏக்கர், அம்பாந்தோட்டை மக்களின் பாரம்பரிய நிலம். பல்லாண்டு காலமாக தாம் வாழ்ந்த இடத்தை வேறு ஒருவருக்கு விற்பனை செய்வதை யாராக இருந்தாலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதைத் தான் அம்பாந்தோட்டை வாழ் மக்களும் வெளிக்காட்டினார்கள்.

இவ்வாறு போராடியவர்கள் எவரும் கொழும்பிலிருந்து சோற்றுப் பார்சல் ஒன்றுக்காக வந்தவர்கள் கிடையாது. போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வீடுகளுக்குச் சென்ற பின்னரும், பொலிஸார் அவர்களை வீடு புகுந்து தாக்கியுள்ளார்கள். கண்ணீர் புகைக் குண்டையும் முறையற்ற விதத்தில் வீசி மூச்சுத் திணறலை ஏற்படுத்தியுள்ளார் கள். இதுவா நல்லாட்சி? சிறியவர்கள் முதல் பெரியவர்கள் என அனைவருமே பொலிஸாரின் தாக்குதலில் பாதிக்கப்பட் டார்கள். அவர்களின் சாபம் இந்த அரசை நிச்சயமாக நிலைத்து நிற்கச் செய்யாது.

இந்தத் தாக்குதலை பொலிஸாருடன் இணைந்து கறுப்பு நிற ரீசேட் அணிந்த சிலரும் மேற்கொள்வதை அவதானிக்க முடிந்தது. இவர்கள் யார்? மாளிகாவத்தை, மட்டக்குளி, கொலன்னாவ, புளுமெண்டல் போன்ற பகுதிகளிலிருந்த பாதாள ஆள்களே இவர்கள். இவர்களைக் கொண்டுதான் அப்பாவி மக்கள் மீது அரசு தாக்குதலை மேற்கொண்டது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்–என்றார். (வ-4)

## இந்திய...

பில்படகொன்றில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 6 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். மற்றொரு படகில் 4 மீனவர்கள் மன்னார் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட போது கைது செய்யபட்டனர் என்று கடற்படையினரால் தெரிவிக்கப்பட்டது.

ஜெகதாப்பட்டணத்தைச் சேர்ந்த எம்.மாரிமுத்து (வயது 24), பி.பிரகாஸ் (வயது 20), ஜெ.செல்வம்(வயது 25), என.சக்திவேல் (வயது 24), எம்.ஸ்ரீபன்ராஜ் (வயது 25), பி.பாஸ்கரன் (வயது 34) ஆகியோரே நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் கடற்படையினரின் விசாரணையின் பின்னர் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர்களிடம் ஒப்படைக் கப்பட்டனர். அவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்கள் [illegible] காவற்றுறை மற்றும் மன்னார் நீதவான் மன்றங்களில் முற்படுத்தப்பட [illegible] சிறைவைக்கப்பட்டிருந்த 61 இந்திய மீனவர்களில் 51 மீனவர்கள் கடந்த 6 ஆம் [illegible] விடுவிக்கப்பட்டனர். அவர்கள் இந்திய தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்ட போது எஞ்சிய 10 மீனவர்கள் தொடர்ந்தும் யாழ்ப்பாணம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (வ-4,101,[illegible])

## செய்தி...

இறைச் சிக்கடைகளில் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று சோதனை நட வடிக்கையில் ஈடுபட்டனர். நேற்றுமுன்தினமும் அங்கு சீல் செய்யப்படாத இறைச்சியைக்கொண்டுசென்றதாகக் கூறப்பட்டதனால் நேற்று செய்தியாளர்கள் சென்றனர். அதன் போதே அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட் டது. இறைச்சிக்கடை நடத்துநர்கள் செய்தியாளர்களை தூசண வார்த்தைகளால் ஏசியதுடன் இறைச்சிக் கடையின் பாவனையில் உள்ள கத்தியைத் தூக்கி அச்சுறுத்தல் விடுத்தனர். அமைச்சரிடம் முறையிடுவோம் என்றும் அவர்கள் கத்திக்கொண்டிருந்தனர். செய்தி சேகரிப்பில் இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. அதனைத் தொடர்ந்து அங்கு பொலிஸார் வருகை தந்தமையை அடுத்து நிலமை இயல்புக்கு வந்தது. (வ-4,101)

## மைத்திரி...

வும் எளிமையான முறையில் வாழ்ந்து வருகின்றார்.

இவ்வாறு புகழாரம் சூட்டினார் ஆந்திர மா நில முதல்வர் சந்திரபாபு நாயுடு.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு வருடங்கள் நிறைவை முன்னிட்டு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார். தமதுரையை ஆயுபோவன், வணக்கம் கூறிவிட்டு தொடர்ந்த ஆந்திர முதல்வர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வெகுவாகப் பாராட்டினார். ஆந்திர மாநிலத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் – தமது மாநிலம் எவ்வாறு அபிவிருத்தியை நோக்கி விரைந்தது உள்ளிட்ட விடயங்களை அவர் விவரித்தார். இலங்கைக்கும் ஆந்திராவுக்குமிடையிலுள்ள பூகோள உறவுகளை விவரித்த அவர், வணிகர் சார்ந்த ஆலோசனைகளையும் முன்வைத்தார்.

பெரியதொரு மாளிகை இருந்தாலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சாதாரணதொரு வீட்டிலேயே வாழ்ந்து வருகிறார். அவரது எளிமை வாழ்க்கை எனக்குப் பிடித்துள்ளது. ஜனாதிபதியின் மனைவியை முதல் பெண்மணி என்றே அழைக்க வேண்டும். ஆனால், தன்னை ஜனாதிபதியின் மனைவியென அழைத்தால் போதும் என்று ஜனாதிபதி மைத்திரியின் மனைவி கூறினார். இருவரும் எளிமை வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர் என்று ஆந்திர மாநில முதல்வர் தெரிவித்தார். (வ-5)

## இன்றைய மோதல்கள்



யாழ்ப்பாணம், ஜன. 9

**குறிஞ்சிக்குமரனின் கால்பந்தாட்டம்**

குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் அந்தோனியார்புரம் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும் தொடர்ந்து இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**எவ்.ஏ. கிண்ணம் (யாழ். லீக்)**

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. யாழ். லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து புத்தூர் எவெரெஸ்ட் அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.க.கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட்கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வளர்பிறை அணியை எதிர்த்து ஏ.பி.சி. அணி மோதவுள்ளது.

**இளைஞர் வி.க.கால்பந்தாட்டம்**

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மனோகரா அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் அணி மோதவுள்ளது. (ம-108-23)



## ஆவரங்கால் இந்து இளைஞர் சம்பியனானது கலைமதியின் தொடரில் மத்தியை வீழ்த்தி

யாழ்ப்பாணம், ஜன. 9

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையில் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் 'ஏ' பிரிவினருக்கான ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

கலைமதியின் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதியது. முதல் செற்றை 25:21என்றபுள்ளிகளின்அடிப்படையில் கைப்பற்றி முன்னிலை வகித்தது ஆவரங்கால் மத்திய அணி. இரண்டாவது செற்றை 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில்கைப்பற்றிபதிலடிகொடுத்தது ஆவரங்கால் இந்து இளைஞர்.

மூன்றாவது செற், 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மீண்டும் ஆவரங்கால் மத்தியின் வசமானது. நான்காவது செற்றை 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப் பற்றி அதற்கும் பதிலடி கொடுத்தது இந்து இளைஞர்.

ஐந்தாவதும் இறுதியானதுமான செற்றில் வெற்றிபெறும் அணியே சம்பியன் என்ற நிலையில் அந்த செற்றை 15:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி, 3:2 என்ற செற்கணக்கில்வெற்றிபெற்றுகிண்ணத்தைக்கைப்பற்றியது. (ம-422-23-108)



## மகுடம் சூடியது வளர்மதி

யாழ்ப்பாணம், ஜன. 9

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையில்நடத்தியகரப்பந்தாட்டத்தொடரில் 'பி' பிரிவினருக்கான ஆட் டத்தில் புத்தூர்வளர்மதிஅணிமகுடம்சூடியது. புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. முதல் இரு செற்க ளிலும் ஆதிக்கம் செலுத்திய புத்தூர் வளர்மதி அணி, அந்த செற்களை முறையே 25:18, 25:20 என்ற புள்ளி களின் அடிப்படையில் கைப்பற்றி யது. அடுத்த செற்றையும் கைப்பற்றினால் நேர் செற் வெற்றியென்ற நிலை வளர்மதிக்கு ஏற்பட்டது. ஆனால் 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நான்காவது செற்றைக் கைப்பற்றிய நவஜீவன்ஸ் வளர்மதியின் நேர் செற் வெற்றியை இல்லாமல் செய்தது. இருப்பினும் நான்காவது செற்றை 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய வளர்மதி அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. ஆட்ட நாயகனாக புத்தூர் வளர்மதி அணியின் புவிந்தன் தெரிவானார். (ம-23-108-422)

## போராடி வென்றது ஐக்கியம்

யாழ்ப்பாணம், ஜன. 9

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஜோசவாஸ் ஐக்கிய அணி வெற்றிபெற்றது.

இளைஞரின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஐக்கிய அணியை எதிர்த்து ஆதி சக்தி அணி மோதியது.

நிர்ணயிக் கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் கோல்கள் எவையும் பதிவு செய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத்தீர்மானிக்கவேண்டிய நிலை ஏற்பட் டது. 4:3 என்ற கோல் கணக் கில் ஐக்கிய அணி வெற்றி பெற்றது. (ம-23)

## டயமன்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 9

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் வதிரி டயமன்ஸ் அணி சம்பியனானது. மனோகராவின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நீக்கிலஸ் அணியை எதிர்த்து டயமன்ஸ் அணி மோதியது.

ஆட்டத்தின் 37 ஆவது டயமன்ஸ் அணியின் துசிகரன் முதல் கோலைப் பதிவுசெய்தார். மாற்றங்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

58 ஆவது நிமிடத்தில் டயமன்ஸைத் தேடி தண்ட உதை வந்தது. வாய்ப்பு கச்சிதமாகப் பயன்படுத்தப்பட டயமன்ஸின் கோல் கணக்கு 2 ஆக உயர்ந்தது. வேறெந்த மாற்றங்களும் நிகழவில்லை முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் வென்றது.

ஆட்ட நாயகனாக டயமன்ஸின் உசானந், தொடராட்ட நாயகனாக சென். நீக்கிலஸ் அணியின் றொக்சன், சிறந்த கோல் காப்பாளராக டயமன்ஸின் ஜெனார்த்தனன் ஆகியோர் தெரிவாகினர். (ம-108-422)

## சமநிலைத் தவிர்ப்பில் வென்றது சண் சைன்

யாழ்ப்பாணம், ஜன. 9

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சண் சைன் அணி வெற்றிபெற்றது.

யங்ஸ்ராரின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நியூ பைட் அணியை எதிர்த்து சண் சைன் அணி மோதியது. இதில் சண் சைன் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## மேரிஸை வீழ்த்தியது விண்மீன்


குறிஞ்சிக்குமரனின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நாவாந்துறை சென். மேரிஸ் வி.கழகத்தை தோற்கடித்தது பலாலி விண்மீன்.

குறிஞ்சிக் குமரனின் மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. ஆட்டத்தின் ஆரம்பம் மேரிஸுக்குச் சாதகமாகவே இருந்தது. 16 ஆவது நிமிடத்தில் யூட் முதல் கோலைப் பதிவு செய்தார். ஆனால் அடுத்த நிமிடமே விண்மீனின் நிசாந்தன் பதிலடி கொடுத்தார். 1:1 என்று இரு அணிகளதும் சமனான ஆதிக்கத்துடன் முதல் பாதி முடிவுக்கு வந்தது. இரண்டாவது பாதியின் 18 ஆவது நிமிடத்தில் விண்மீனின் இரண்டாவது கோல் பதிவானது. மேரிஸ் பலமாகப் போராடிய போதிலும் பதிலடி கொடுக்க இயலவில்லை. விண்மீன் தனது ஆதிக்கத்தை தக்கவைக்க முடிவில் அந்த அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-108)

# வெய்ன் ரூனி சாதனை

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைற்ரெட் அணிக்காக விளையாடிவரும் நட்சத்திர வீரரான வெய்ன் ரூனி, அந்த அணிக்காக அதிக கோல்களைப் பதிவுசெய்த வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

மன்செஸ்டர் யுனைற்ரெட் அணி நேற்றுமுன்தினம் ரீடிங் அணியை எதிர்கொண்டது. ஆட்டம் ஆரம்பித்து 7 ஆவது நிமிடத்தில் ரூனி முதற் கோலைப் பதிவுசெய்தார். இந்தக் கோல் மன்செஸ்டர் அணிக்காக ரூனி அடிக்கும் 249 ஆவது கோலாகும். இதன்மூலம் முன்னாள் ஜாம்பவான் பொபி சார்ல்டன் சாதனையை சமன் செய்தார்.



ஏற்கனவே, இங்கிலாந்து தேசிய அணிக்காக பொபி சார்ல்டன் 49 கோல்கள் அடித்தது சாதனையாக இருந்தது. அதை ரூனி கடந்த 2015 ஆம் ஆண்டில் முறியடித்தார். ரூனி தற்போது வரை 53 கோல்கள் அடித்துள்ளார்.

ரூனிக்கு தற்போது 31 வயதாகிறது. அவர் ஒரு முனையில் இவ்வாறு சிறந்த அடைவுகளை நிலைநாட்டிச் சென்றுகொண்டிருந்தாலும் மறுமுனையில் அவர் இங்கிலாந்துத் தேசிய அணியின் தலைமைப் பதவியிலிருந்து விலக வேண்டும் என்றும் அழுத்தங்கள் கடந்த சில மாதங்களாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. (ம)




# ஏக ஆதிக்கம் செலுத்தி மட்ரிட் அசத்தல் வெற்றி

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மிகப்பெரும் ஆதிக்கத்துடன் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட்.

ரியல் மட்ரிட்டை எதிர்த்து கிரனடா அணி மோதியது. ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் முதற் கோலைப் பதிவுசெய்து மட்ரிட்டின் ஆதிக்கத்தை ஆரம்பித்துவைத்தார் இஸ்கோ. பென்சிமா 20 ஆவது நிமிடத்திலும் ரொனால்டோ 27 ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்து மட்ரிட்டின் கோல் கணக்கை மூன்றாக உயர்த்தினர். இஸ்கோ 31 ஆவது நிமிடத்தில் பிறிதொரு கோலைப் பதிவுசெய்ய 4:0 என்று மட்ரிட்டின் ஆதிக்கத்துடன் முதல் பாதி முடிவுக்கு வந்தது. ஆட்டத்தின் 58 ஆவது நிமிடத்தில் கசிமிரோ கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் வெற்றிபெற்றது.

கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்களில் பார்சிலோனா அணி தொடர்ந்து 39 ஆட்டங்களில் தோல்வியைச் சந்திக்காமல் இருந்ததே இதுவரை சாதனையாக இருந்தது. கிரனடா அணியை வீழ்த்தியதன் மூலம் தற்போது அந்தச் சாதனையை ரியல் மட்ரிட் சமன் செய்தது. (ம)




இந்திய அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்து கடந்த புதன்கிழமை விலகினார் டோனி. அவரது சாதனைகளைப் பலரும் பாராட்டிக் கருத்துத் தெரிவித்து வரும் நிலையில் மணல் சிற்பக் கலைஞர் ஒருவர் டோனிக்கு நன்றி செலுத்தும் விதத்தில் மணல் சிற்பம் ஒன்றை உருவாக்கியுள்ளார். (ம)

# சானியா – பெத்தானி இணை பிரிஸ்பெய்னில் சம்பியனானது

பிரிஸ்பெய்ன் ரென்னிஸ் தொடரில் இந்தியாவின் சானியா, அமெரிக்காவின் பெத்தானி மாட்ரேக் இணை கிண்ணம் வென்றது.

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலியத் தொடர் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான பயிற்சித் தொடரான பிரிஸ்பெய்ன் தொடர் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்தது. பெண்கள் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சானியா, அமெரிக்காவின் பெத்தானி மாட்ரேக் இணையை எதிர்த்து ரஷ்யாவின் மகரொவா, எலீனா இணை மோதியது.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரு செற்களையும் முறையே 6:2, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய சானியா, பெத்தானி இணை 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம)



# நீக்கப்படும் நிலையிலிருந்து பலமுறை காத்தார் டோனி

## கோக்லி உருக்கம்

அணியில் இருந்து நீக்கப்படும் நிலையில் இருந்த தன்னை பலமுறை டோனி காத்து வழிநடத்தினார் என்று இந்திய அணியின் தலைவரான கோக்லி தெரிவித்தார்.

தலைமைத்துவத்தில் இருந்து டோனி விலகியதை அடுத்து அவரது தலைமைத்துவத்துக்கு பலரும் தமது பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் இணையத்தளம் ஒன்றில் கருத்துத் தெரிவிக்கையில்கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

எப்போதுமே டோனி எனக்கு வழிகாட்டியாக இருந்தார். அத்துடன்வாய்ப்புக்களும் வழங்கினார். நான் ஒரு நல்ல கிரிக்கெட் வீரராக வளர போதுமான அளவு நேரத்தை வழங்கினார். பெரும்பாலான நேரங்களில் அணியில் இருந்து என்னை நீக்கும் நிலைமை இருந்தது. அதில் இருந்துஎன்னைக் காப்பாற்றினார். இதற்கு உதாரணமாகஇங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட டெஸ்ட் தொடரை குறிப்பிடலாம். டோனி ஒரு அரிய தலைவர். உண்மையிலே அவரது பெரிய இடத்தை நிரப்ப வேண்டியுள்ளது. மகேந்திர சிங் டோனியைப் பற்றி நீங்கள் நினைத்தீர்கள் என்றால், உடனே உங்கள் ஞாபகத்தில் வருவது தலைமைத்துவம்தான் என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)




# ரி–20 தொடரை வழித்துத் துடைத்தது நியூசிலாந்து

பங்களாதேஷுக்கு எதிரான மூன்றாவதும் இறுதியானதுமான ரி-20 ஆட்டத்திலும் வெற்றிபெற்று தொடரை 3:0 என்ற அடிப்படையில் நியூசிலாந்து கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. நியூசிலாந்தின் ஆரம்ப வீரர்களாக வில்லியம்சன் மற்றும் நீஸ்கம் இருவரும் களமிறங்கினர். சொல்லிக் கொள்ளும்படியான ஆரம்பத்தை நியூசிலாந்து எதிர்கொள்ளவில்லை. 15 ஓட்டங்களுடன் நிஸ்கமை வீழ்த்தினார் கொசைன். ஓட்டமெதனையும் பெறாத நிலையில் முன்றோவும் கொசைனிடம் ஆட்டமிழந்தார். புரூசால் முடிந்தது 5 ஓட்டங்கள். 41 ஓட்டங்களுக்கு மூன்று இலக்குகளை இழந்தது நியூசிலாந்து. ஆரம்ப வீரராகக் களமிறங்கி ஒரு முனையில் நிலைத்து நின்ற வில்லியம்சனுடன் கைகோர்த்தார் அண்டர்சன். இணைப்பாட்டம் பலம் பெற சரிவிலிருந்து மீண்டு வீறுநடைபோட ஆரம்பித்தது நியூசிலாந்து. வில்லியம்சன் அரைச்சதம் கடந்தார். இணைப்பாட்டமாக 124 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் அவர் 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 27 பந்துகளே அண்டர்சனின் அரைச்சதத்துக்குத் தேவைப்பட்டன. அரைச்சதத்தின் பின்னர் அதிரடி இரண்டிப்பானது. முடிவில் நியூசிலாந்து 194-4. அண்டர்சன் 94 ஓட்டங்களுடன் (41 பந்துகள்) ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ரூபல் கொசைன் 3 இலக்குகளையும், மொஸ்டக் கொசைன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் நியூசிலாந்தை விட சிறந்த ஆரம்பம் கண்டது. அணி 44 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 24 ஓட்டங்களுடன் இக்பால் ஆட்டமிழந்தார். சபீர் ரகுமானை போல்ட் செய்தார் வில்லியம்சன். சர்கர், சகிப் அல்ஹசன் இருவரும் நிலைத்து நின்றாலும் இலக்கை எட்டும்படியான அதிரடி இருக்கவில்லை. இந்த நிதானம் பின்னடைவாக பங்களாதேஷுக்குவந்தமைந்தது. இதனால் 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை முழுமையாகத் தாக்குப்பிடித்த போதிலும் பங்களாதேஷால் 6 இலக்குகள் இழப்புக்கு 167 ஓட்டங்களையே பெற முடிந்தது. 27 ஓட்டங்களால் நியூசிலாந்து வென்றது. அண்டர்சன் ஆட்டநாயகனானார். (ம)

# அரையிறுதியில் பாடும் மீன் தோல்வி கொழும்பு ரட்ணம் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜன. 9

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையே நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் அணி தோல்வியடைந்தது. கொழும்பு ரட்ணம் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இரவு இந்த ஆட்டம் இடம்பெற்றது. ஆட்டத்தின் 25 ஆவது நிமிடத்தில் ரட்ணம் அணியின் தியாகு முதல் கோலைப் பதிவு செய்தார். மாற்றங்கள் ஏற்படாத நிலையில் முதல் பாதியின் முடிவில் 1:0 என்று முன்னிலை வகித்தது ரட்ணம்.

ஆட்டத்தின் 50 ஆவது நிமிடத்தில் அகில் ரட்ணத்தின் கோல் கணக்கை இரண்டாக உயர்த்தினார். இந்தக் கோலுடன் அந்த அணியின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. பாடும் மீனால் பதிலடி கொடுக்க இயலாத நிலையில் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் ரட்ணம் அணி வென்றது.

(ம-23)



## அஸ்வின் கண் தானம்

இந்திய அணியின் முன்னணி சகலதுறை வீரரான அஸ்வின் தனது கண்களைத் தானமாக வழங்கினார்.

சென்னையில் உள்ள பிரபல மருத்துவமனையில் நடந்த விழிப்புணர்வுப் பரப்புரையில் பங்கேற்று தனது கண்களைத் தானம் செய்கிறேன் என அறிவித்து அதற்கான ஒப்புதலில் கையெழுத்திட்டார். கண்தானம் செய்வது என்பது எனது மனைவியின் கனவாகும். எனது ரசிகர்களும் இதைப் பின்பற்றிக் கண்தானம் செய்வார்கள் என்று நம்புகிறேன். இதில் உள்ள திருப்தி வேறு எதிலும் இல்லை. ஒவ்வொரு குடிமகனும் இதைப் பின்பற்ற வேண்டும் என அஸ்வின் தெரிவித்தார். (ம)

பொருளியற் கல்லூரியின்
பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்

A/L 2016 பிரிவில் அதிகளவிலான மாணவர்கள் கலை, வர்த்தக தொழில்நுட்பத்துறையில் அதிசிறப்பு சித்தியான 3A பெற்று எமது நிறுவனத்துக்குப் பெருமையீட்டித்தந்த மாணவர்களையும் அவர்களை வழிநடத்திய ஆசிரியர்களையும் பாராட்டுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

நீங்களும் இதேபோல் கலை, வர்த்தக தொழில் நுட்பத்துறையில் சிறப்பு சித்திகளைப் பெற்றிட ஆரம்பமாகின்றது.

A/L DAY CLASS
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
நாவலர் றோட், யாழ்ப்பாணம். K.K.S. றோட், இணுவில்.
(இரு இடத்திலும்)
11.01.2017 புதன்கிழமை 7.00 am
● வாரத்தில் ஐந்து நாள்களும் வகுப்புக்கள் நடை பெறும்.
● எமது வழமையான ஆசிரியர் குழுவினால்.
● உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

2016 A/L பரீட்சையில் வணிகக்கல்விப் பாடத்தில் A,B பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்

வலிகாமம் கல்வி வலய வணிகக் கல்வி வளவாளர்
S.K.Balasabesh
B.Com (H.N.Dip.in.Acc),P.G.Dip. in.Ed (OUSL)

| | பெயர் | பெறுபேறு | வணிகக் கல்வி | மாவட்ட நிலை |
|---|---|---|---|---|
| 1 | K.சண்முகாயினி | 3A | A | 03 |
| 2 | ஆன்டிலக்ஷனா | 3A | A | 03 (கிளிநொச்சி) |
| 3 | T.ஆன்சிஸ்றா | 3A | A | 05 |
| 4 | S.சியானா | 3A | A | 12 |
| 5 | M.அஜந்தன் | 3A | A | 16 |
| 6 | R.மேரி டனுசியா | 3A | A | 27 |
| 7 | A.சிந்துஜா | 3A | A | 28 |
| 8 | சரண்சிகா | 3A | A | 34 |
| 9 | ப.உ.சாந்தன் | 3A | A | 42 |
| 10 | A.துலக்ஷனா | 3A | A | 45 |
| 11 | K.ஜனனி | 3A | A | 48 |
| 12 | J.ஜீன் ல்க்ஸ்மன் | 3A | A | 50 |
| 13 | S.தனுசா | 3A | A | 53 |
| 14 | S.சோபிதா | 3A | A | 56 |
| 15 | W.P.திறுகாந்த் | 3A | A | 63 |
| 16 | M.சிந்துஜா | 3A | A | 67 |
| 17 | R.எரிவினா | 3A | A | 68 |
| 18 | S.பிரண்ணவி | 3A | A | 74 |
| 19 | A.ஜானு மக்சிமஸ் | 3A | A | 77 |
| 20 | சேந்தன் | 3A | A | 78 |
| 31 | நர்த்தனி | 3A | A | 84 |
| 22 | A.வினுஜா | 3A | A | 95 |
| 23 | S.முலக்ஷன | 3A | A | 108 |
| 24 | மேரிபிரியங்கா | 3A | A | 71 |
| 25 | நர்த்தனா | 2AB | B | 87 |
| 26 | M.நீதிகா | 2AB | B | 88 |
| 27 | M.பானுஜன் | 2AB | A | 106 |
| 28 | மிதுஷா | 2AB | A | 110 |
| 29 | ப.கபீஷா | 2AB | A | 140 |
| 30 | P.லோகிதா | 2AB | A | 156 |
| 31 | தனசகா | 2AB | A | 15 (கிளிநொச்சி) |
| 32 | E.கனுசியா | 2AB | A | 150 |
| 33 | டே.மின்மினி ஜெனுக்கா | 2AB | A | 104 |
| 34 | S.சிந்து | 2AB | A | |
| 35 | A.T.ஆதி | 2AB | A | 20 (கிளிநொசசி) |
| 36 | E.எட்விஷா | 2AC | A | 160 |
| 37 | தமிழீசன் | 2AC | A | 153 |
| 38 | S.குகதரன் | A2B | A | 41 (கிளிநொசசி) |
| 39 | நஞ்சிதபாலினி | A2B | A | 47 (கிளிநொச்சி) |
| 40 | V.யட்சாயினி | A2B | B | |
| 41 | B.டெனுசியா | A2B | B | 149 |
| 42 | சயந்தன் | A2B | B | 117 |
| 43 | சிந்துஜா | A2B | A | |
| 44 | சிறி ரூபினி | A2B | B | |
| 45 | K.டிலக்ஷன் | A2B | A | 162 |
| 46 | K.லில்லி கருண்சியா | A2B | B | 112 |
| 47 | M.U.பாரிக் | A2B | A | |
| 48 | S.அனோயா | A2B | A | 148 |
| 49 | சௌமியா | A2C | A | |
| 50 | பவதாரணி | A2C | A | |
| 51 | கலைஅரசி | ABC | A | 52 (கிளிநொச்சி) |
| 52 | A.டினோசா | ABC | B | |
| 53 | A.தனுஷன் | ACS | A | |
| 54 | P.லோகிசா | 3B | B | |
| 55 | சங்கவி | 3B | B | |
| 56 | J.ஸ்ரெபிக்கா | 3B | B | |
| 57 | A.அகமட் | 3B | B | |
| 58 | நி.பா.ருசைக்கா | 3B | B | |
| 59 | சஞ்சிகா | 2AB | B | 124 |

இவர்களோடு B பெறுபேற்றைப் பெற்றவர்கள்
● A. நிதர்சியா ● A. திவ்வியபிரியன் ● M.பாணுஷா
● ஜெ.ஜினோஷா
இவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்

NEC
01. மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்.
02. ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

BPI குருநகர் | HAC மீசாலை | AA International College வட்டுக்கோட்டை

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L,A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர், தொழில்புரிவோர் இணையமுறையும்.
சனி, ஞாயிறு பயிற்சி ஆரம்பம் : 15.01.2017
பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00
பாடப்புத்தகங்கள் DVD மற்றும் சான்றிதழ் இலவசம்
வாரநாள் பிரிவுகள் செவ்வாய் மற்றும் வியாழன் காலை : 08-10
பதிவுகள்: 13.01.2017 வரைமட்டுமே மேற்கொள்ளமுடியும்
SAAMSON
Experts in English Training
173, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 1570 486
021 320 3313

பல்கலைக்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கான
Special English Diploma
பல்கலைக்கழக பாடத்திட்டத்திற்கு அமைவாக Speaking, Presentation Reading and Writing Skills இனை முழுமையாக உள்ளடக்கிய கற்கைநெறி.
New batches start on- 16.01.2017 9.00a.m 1.30p.m } week days
15.01.2017 9.00a.m 1.30p.m } week end
ELAS
Sir Pon. Ramanathan Road, Jaffna.
(பல்கலை எதிரில்)
T.P: 021 221 2410, 076 697 3040

NALIN Information Technologies Pvt Ltd
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
10.01.2017 முதல் 3 தினங்களுக்கு
3,000 ரூபாய் முதல் 50% வரையான கழிவுடனான
சிறப்புச் சலுகை விலைகளில்
கண்காணிப்புக் கமெராக்களுக்கான
DVR
மேலதிக விபரங்கள் 10.01.2017 நாளை எதிர்பாருங்கள்
ஒரு வருட உத்தரவாதத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்.
கையிருப்பு உள்ளவரை மட்டுமே.
மேலும்
500Gb HD 6,200/=
(உத்தரவாதத்துடன்)
No. 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121 | 077 766 7975

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.